

## பழைய பாதையில் பழைய பயணம் 05 நல்லாட்சிக்கெதிராய் மைத்திரி!?




## ஸீஸியின் அரசியல் சூது: 09 துரோகம் வெட்கமறியாது



நேர்காணல்:

ஆதம்பாவா சர்ஜூன்
விரிவுரையாளர், அரசறிவியல் துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்

## இலங்கை முஸ்லிம்களிடையே நிலைத்திருக்கக்கூடிய ஒரு சமூக உணர்வும் அடையாளமும் கட்டியெழுப்பப்பட வேண்டும்




# மீள்பார்வை

මීල්පාර්වෛ

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/63/NEWS/2016 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 345 • 17 ஜூன் 2016 வெள்ளிக்கிழமை • ரமழான் 1437 • விலை 40.00







# இனவாதம் மன்னிப்புக்களால் மறக்கடிக்கப்படுகிறது

கடந்த ஆட்சிக் காலத்தில் தலைவிரித்தாடிய இனவாத, முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் தரப்பினரின் வழக்குகள் சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டு வருகின்றன. அளுத்கம பிரதேசத்தைச் சேர்ந்த யுவதியொருவருக்கு அபசரணய் சொன்னார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட மொஹமட் மௌஜூத் மொஹமட் அஸ்மி, தர்காநகர் பதிராஜகொட விகாரைக்கு அழைத்துச் செல்லப்பட்டு பொலிஸாரால் நையப்புடைக்கப்பட்டார்.

பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கும் கடுமையாகத் தாக்கப்பட்டார். இது தொடர்பில் அவரது குடும்பத்தினர் தாக்கல் செய்த மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றரை வருடங்களுக்கு மேலாக விசாரிக்கப்பட்டதன் பின்னர், பொலிஸ் அதிகாரி மன்னிப்புக் கேட்டதனால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு,

(பக்.02)

## கறுப்பு ஜூன் 2 வருடங்கள்



## தீவிரவாதமும் வெறுப்புணர்வுமே நல்லிணக்கத்துக்கான தடை

ஜமாஅதுஸ் ஸலாமா

நிலைமாற்று கால நீதி எண்ணக்கருவில் உருவாக்கப்பட்ட நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணி, போருக்குப் பின்னரான சூழலில் சாத்தியமான நல்லிணக்கப் பொறிமுறைகளை அமுல்படுத்துவதற்கான பொது மக்கள் அபிப்பிராயங்களைத் திரட்டி வருகிறது. (பக்.14)



## கிழக்கு மாகாணத்தில் படையினர் வசமுள்ள தனியார் காணிகளும் விடுவிக்கப்படும் - பிரதமர் உறுதி



இலங்கையில் வட மாகாணத்தில் படையினர் வசமுள்ள தனிய காணிகள் விடுவிக்கப்படுவது போன்று கிழக்கு மாகாணத்திலு விடுவிக்கப்படும் என பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, கி மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் யாற்றும் போது தெரிவித்துள்ளார்.

வடக்கைப் போலவே கிழக்கு மாகாணத்திலும் தனியார் கா களில் தொடர்ந்து படையினரும் பொலிஸாரும் நிலை (பக்.03)

## வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றும்போது சகல இலங்கையர்களும் உள்ளடக்கப்பட வேண்டும்

நிலைமாற்ற கால நீதியை நிலைநாட்டுவது தொடர்பில் இலங்கை வழங்கிய உறுதிமொழியை நடைமுறைப்படுத்தும்போது சகல இலங்கையரும் உள்ளடக்கப்படுவதுடன் அவர்களின் அர்த்தமுள்ள பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்யத் அல் ஹுசைன் வலியுறுத்தியுள்ளார்.



193 நாடுகள் பங்குபற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 32 ஆவது கூட்டத் தொடர் ஜெனீவாவில் ஆரம்பமாகியது. இதன் அமர்வுகள் எதிர்வரும் ஜூலை 1ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

கடந்த வருட அமர்வில் இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை அமுல்படுத்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் வாய்மூலமான அறிக்கையொன்றை இந்த அமர்வில் சமர்ப்பிக்கும். (பக்.14)






## தகவலறியும் சட்டமூலம் 23 இல் பாராளுமன்றில்



நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டு வந்த தகவலறியும் சட்டமூலம் இம்மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு அன்றைய தினமே வாக்கெடுப்பு நடைபெறும் என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடக அமைச்சருமான கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

ஆசிய நாடுகளில் இதுவரை இலங்கையில் மட்டுமே நிறைவேற்றப்படாதிருந்த இந்தச் (பக்.02)

## அரசாங்கத்திற்கு சர்வதேச அழுத்தங்கள் கிடையாது - ஜனாதிபதி

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? ஜனாதிபதி தேர்தல் ஏன் இரண்டு ஆண்டுகள் முன்கூட்டியே நடத்தப்பட்டது? ஆகிய கேள்விகளுக்கு கடந்த அரசாங்கம் இதுவரையில் பதிலளிக்கவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.



உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச அளவிலும் பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டிருந்த நிலையிலேயே ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. இந்தப் பிரச்சினைகள் சர்ச்சைகளுக்கு உடனடியாக தீர்வு காண முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பிரச்சினையிலிருந்து நாட்டை மீட்டு எடுப்பதற்கு தமது அரசாங்கம் முயற்சித்த போது சர்வாதிகாரிகள் நாட்டை தாம் சா்டிக் கொடுப்பதாக குற்றம் சுமததி வருகின்றனர் எனவும் சந்தர்ப் வாதிகள் இலங்கையில் வெளிநாட்டு தலையீடு இருப்பதாக போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவு தெரிவித்துள்ளார்.

## உறுதி மொழிகளை நிறைவேற்ற பயங்கரவாத தடைச்சட்டம் துரிதமாக நீக்கப்பட வேண்டும்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் ஆரம்பக் கட்ட செயற்பாடுகள் வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், மிகவும் மந்த கதியிலேயே இதற்கான நடவடிக்கைகள் அமைந்திருப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் சுட்டிக் காட்டி யுள்ளார். இதனை நீக்கும்வரை பயங்கரவாதத் தடைச்சட்டம் (பக்.02)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்புக்கோட்டை திறந்து வைப்பு

( 29 ஆளுநர்கள் மற்றும் 6 ஜனாதிபதிகள் தமது கடமைப் பணிகளுக்காகவும் வாசஸ்தலமாகவும் பயன்படுத்தி வந்த ஜனாதிபதி மாளிகை ஜூன் 08 முதல் 14ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டது)

மகிந்தரின் ஆட்சிக் காலத்தில் இரும்புக் கோட்டையாய் இருந்த இடம்..

இந்த இடத்தைச் சுற்றி எக்கச் செக்க உயர் பாதுகாப்பு வலயங்கள்...

ஏதோ ஐநூறு ஆண்டு காலம் வாழ வந்த மாதிரி ஏகப்பட்ட பில்டப்புகள்.

இந்த இடத்திற்கு முன் எவனாச்சும் ஐந்து நிமிசம் நின்றாலும் விசாரணை என்ற பேரில் இல்லாத,பொல்லாத கேள்விக் கணைகள். உலகத்தில் எதுவுமே



நிரந்தரமல்ல. மாற்றம் என்ற சொல்லைத் தவிர அனைத்தும் மாறக் கூடியதே..

தேசத்தின் அதி உச்ச பதவியில் இருக்கும் பிரஜையின் வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகையே இது.. முதன் முறையாக பொதுமக்கள் பார்வைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

இதன் பின்னணியிலும் மக்களின் கவனத்தை திருப்ப ஏதாச்சும் அரசியல் இருக்கலாம். ஆனால், இந்த ஜனநாயக சுதந்திரத்தை, முன்னெப்போதும் ஆண்ட ஆட்சியாளர்கள் வழங்கவே இல்லை என்பதே யதார்த்தம். **- ஸபர் அஹ்மத்**

# முரண்நகை
## வீட்டுச்சண்டை

இன்று வீட்டுச் சண்டைகளையும் விவாகரத்து வழக்கு களையும் சற்று அதிகமாகவே காண முடியுமாய் உள்ளது...

அன்றைய காலத்து வீட்டுச் சண்டைகளின் அடிப்படையில் அக்கறையும் அன்பின் அடையாளமும் ஒளிந்திருந்தது...

இன்றைய வீட்டுச் சண்டைகள் பெரும்பாலும் பரஸ்பர வெறுப்பிலும்,நெருக்கடியிலும்,புரிந்து கொள்ளாமையிலுமே துவங்குகின்றன....

இவை பலபோது தத்தம் தவறுகளை மறைப்பதற்கான நாடகமாகின்றன...

இன்னும் சிலபோது கற்பனையான பயங்கள், காரணம் இல்லாத கோபங்கள், புறச்சூழலின் மீதான எரிச்சல், யார் மீதோ காட்ட முனைந்து இயலாமல் போன கோபம் என்று இன்னும் எத்தனையோ அபத்தங்களின் வெளிப்பாடாகி விடுகின்றன எம் வீட்டிலும் தலைதூக்கிச் செல்லும் இக் கேளிக்கை வினோதங்கள்....

**-அஸ்கர் ஜௌபர்**

# அவர்கள் நரகம் செல்வார்கள்

தீவிரவாத சிந்தனைகளால் கவரப்பட்ட ஓர் இளைஞன் இமாம் முதவல்லியுஷ் ஷஹ்ராவியை சந்திக்கச் சென்றான்.

இமாமை நோக்கி அந்த இளைஞன் இரவு விடுதிகளை குண்டுகளை வைத்துத் தாக்க வேண்டும் என்றான்.

சரி குண்டுத் தாக்குதலால் கொல்லப்படுவோரின் நிலை என்ன என்று இமாம் அவர்கள் அவனிடம் கேட்டார்கள். அதற்கு அவன் சந்தேகம் இன்றி அவர்கள் அனைவரும் நரகம் செல்வார்கள் என்றான்.

சரி அவர்கள் எந்த இடத்திற்கு செல்ல வேண்டும் என்று ஷைத்தான் நினைத்திருக்கிறான் என்று கேட்டார்கள் இமாம் அவர்கள்.

அவர்கள் அனைவரையும் நரகிற்கு இழுத்துச் செல்வதே ஷைத்தானின் நோக்கம் என்றான் இளைஞன் அப்படியானால் உங்களது நோக்கத்திற்கும் ஷைத்தானின் நோக்கத்திற்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஒரு மனித ஆத்மாவை நரகத்திற்குள் தள்ளுவதே உங்கள் இருவரதும் நோக்கம் என்றார்கள் இமாம் ஷஹ்ராவி அவர்கள். ஒரு முறை நபிகள் நாயகம் ஸல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் முன்னால் ஒரு காபிரின் ஜனாஸா எடுத்துச்செல்லப்பட்ட போது அன்னவர்கள் அழுதார்கள். அதற்கு ஸஹாபாக்கள் யாரஸூல்லாஹ் ஏன் தாங்கள் அழுதீர்கள் எனக் கேட்டார்கள். எனக்கு முன்னால் ஓர் ஆத்மா நரகம் செல்வதைக் கண்டு அழுகிறேன் என்றார்கள்.

இதுதான் உங்களுக்கும் ஸல்லல்லாஹ் அலைஹிவஸ்லம் அவர்களுக்கும் இடையிலான வித்தியாசம். அன்னவர்கள் ஓர் உயிர் நரகம் செல்வதைக் கண்டு அழுதார்கள். ஆனால் நீங்களோ மனிதர்களை நரகத்திற்கு இட்டுச் செல்வதற்கான வழிகளைத் தேடிக் கொண்டிருக்கிறீர்கள் என்றார்கள் இமாம் அவர்கள்.

இமாம் கலாநிதி முஹம்மத் முதவல்லியுஷ் ஷஹ்ராவி *(1911-1998)*

**- பஸ்ஹான் நவாஸ்**

# ரமழானில் தோஹாவிலிருந்து ஒரு குரல்

நெருப்பாக அடிக்கும் வெயிலோடும், அனலும் மணலும் சேர்ந்து அடிக்கும் காற்றோடும் போராடி வெந்து வேகி, இந்த நோன்போடும் பொறுமையாகித்தான் பல அப்பாக்களும் அண்ணன்மாரும் உங்களுக்காக பெருநாள் பணம் சேமிக்கின்றனர், சந்தோஷமா பெருநாள் கொண்டாடினோம் என்ற ஒரு செய்தியை போனில் கேட்பதற்காக.

வெயிலுக்கு வீதியில் காணல் நீர்தான் வரும் என்டு கேள்விப்பட்டிருப்பீர்கள்

ஆனால் வீதியையே காண முடியாது என்று கேள்விப்பட்டிருப்பீர்களா??
அடுத்த தலை முறை கட்டார் பக்கம் தலையும் வச்சி படுத்துடப் படாது ஆண் டவா! **- அப்துல் வாஜித்**




# "வெள்ளத்தில் மூழ்கும் சமூக ஓடம்" கட்டுரைக்கான EDWA வின் மறுப்பு

EDWA

*03 ஜூன் 2016* இதழ் *344* இல் மீள்பார்வை பத்திரிகையில் வெளியான ''வெள்ளத்தில் மூழ்கும் சமூக ஓடம்'' எனும் தலைப்பில் வந்த செய்தி மள்வானை மக்களுக்கு கவலையளிக்கின்றது. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் மள்வானை பிரதேசம் முஸ்லிம்கள் வாழும் பாரம்பரிய பிரதேசமாகும். தஃவா களத்தில் பல ஜமாஅத்கள் இங்கு பணியாற்றுகின்றன.

இந்த நிலையை சிதைக்கும் விதமாக இன்னொரு ஜமாஅத்தை கடுமையாக விமர்சித்து வெளியான இச்செய்தியை பிரசுரித்தமையானது மீள்பார்வை போன்ற நடுநிலை இஸ்லாமிய அச்சு ஊடகமொன்றுக்கு பொருத்தமற்றதாகும்.

எனவே இது போன்ற அடுத்த ஜமாஅத்களை கீழ்த்தரமாக விமர்சிக்கும் செய்திகளை பிரசுரிப்பதை எதிர் காலத்தில் அப்பத்திரிகை தவிர்ந்து கொள்ளும் என எதிர்பார்க்கின்றோம்.

**செயலாளர்,**
EDWA Malwana.

> நோன்புக்கு ஸஹருக்கு
> என்ன கறி செய்யலாம்னு
> ஆரம்பிச்சு, பெருநாளைக்கு
> என்ன டிசைன் ட்ரெஸ் வாங்க
> லாம், எங்கெல்லாம் போக
> லாங்குறது வரைக்கும் ரமழானை
> பக்காவா ப்ளான் பண்ண
> பெண்களால் மட்டுமே முடியும்.
> **- பாஹிம் அமானுல்லாஹ்**

# எறும்பதிகாரம்

ஒரு எறும்பை ஏன் நசுக்குகிறோம் ? அது நம்மைக் கடித்துவிடுமோ என்ற பயத்தினால் முன்கூட்டியே நசுக்கி விடுகிறோம். எறும்பும் ஒரு யானையைப்போல நம்மை நசுக்கிவிடக்கூடிய வலிமையுள்ள பிராணியாக இருந்தால் நிச்சயமாக எறும்பை நசுக்கியிருக்க மாட்டோம். இறை வணக்கத்திற்காக நெற்றியை சஜ்தாவில் தரையில் பதிக்கும்போதுகூட நெற்றிக்கும் தரைக்கும் இடையே ஒரு எறும்பு சிக்கினாலும் அதைக் கொன்றுவிடாத அளவு மட்டுமே அழுத்தம் கொடுக்க இஸ்லாம் வழிகாட்டுகிறது.

அதையும் மீறி ஆக அழுத்தோ அழுத்தென்று அழுத்தி ஒருமாத ரமலான் சீசன் தொழுகையிலேயே மாபெரும் நெற்றிக் காய்ப்புடன் வலம்வரும் நோன்பாளிகளை புன்னகைக்காமல் எப்படிக் கடப்பது ? இதுவரை நான் நசுக்கிக்கொன்ற எல்லா எறும்புகளும் ஒன்று திரண்டு ஆழ்ந்த உறக்கத்திலிருக்கும் என்னை தூக்கிக்கொண்டு செல்வதாய் காய்ச்சலில் படுத்திருந்த ஒருநாள் கண்ட கனவு எனக்கு மட்டும்தானா..? இதுநாள்வரை நாம் குரூரச் சிரிப்புடன் கொன்றுகுவித்த கொசுக்கள் ஒன்று திரண்டு வந்தால் நம் கதி என்னவாகும்? இதுநாள்வரை நாம் சாப்பிட்டுச்செரித்த ஆடுகள், கோழிகள், ஒட்டகங்கள், மீன்கள், வாத்துகள், வான்கோழிகள் நம்மைப் பழிவாங்கக் கிளம்புமாயின் நம் கதி என்ன ? முட்டையை சமைக்காமல் அப்படியே உடைத்து விழுங்கிய மகள் பாஹிமா 'நம்ம வயித்துக்குள்ள இருந்து கோழிக்குஞ்சு வந்துருமா' என்று கேட்டதுபோல நடந்துவிட்டால் எப்படியிருக்கும் ?

**- நிஷா மன்சூர்**

# மன்னிப்புக் கோருகிறோம்

கடந்த இதழில் *(344)* வெளியான, ஸலாஹுத்தீன் என்பவர் எழுதிய ''வெள்ளத்தில் மூழ்கும் சமூக ஓடம்'' என்ற கட்டுரை சமூக ஒற்றுமையை முன்னிறுத்தியே மீள்பார்வையில் பிரசுரிக்கப்பட்டது. இதனை பிரசுரித்ததன் மூலம் யாரையும் சாடுவதோ சாருவதோ மீள்பார்வையின் நோக்கமல்ல. இந்த ஆக்கம் மீள்பார்வையின் நடுநிலைத் தன்மையை மீறி பாரபட்சமானதாக அமைந்திருந்ததாக பலரும் சுட்டிக் காட்டியிருந்தனர். அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறித்த கட்டுரையினால் யாருக்கேனும் பாதிப்புக்கள், மன உளைச்சல்கள் ஏற்பட்டிருக்குமானால் அவர்களுக்கு எமது வருத்தங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இதற்காக அவர்களிடம் மன்னிப்புக் கோருகிறோம். **- ஆசிரியர்.**

# அடுத்த இயக்கங்களைச் சாடுவதை தவிர்ந்து கொள்ள வேண்டும்

**- மல்வானை கமால்**

கடந்த மீள்பார்வையில் ஸலாஹுத்தீன் என்பவர் எழுதிய ''வெள்ளத்தில் மூழ்கும் சமூக ஓடம்'' என்ற தலைப்பிலான கட்டுரை சமூக மட்டத்தில் பேசுவதற்குப் பொருத்தமில்லாத பல விடயங்களை உள்ளடக்கியிருந்தமையை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மல்வானையில் சமூகமாக வாழும் மக்களிடையே இது பிளவுகளை அதிகரிக்கும் என்பதைச் சுட்டிக் காட்டுவதோடு, கட்டுரையாளர் தமக்குப் பிடிக்காதவர்களை தாழ்த்திப் பேசி இருப்பதனையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன். சமூகத்தின் எதிர்கால நன்மைகளை கட்டுரையாளர் கவனத்தில் எடுத்திருக்க வேண்டும் என்பதனையும் அவருக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் அதிகமாகவே கிடைத்ததாகச் சொல்ல வருவதனால் எதிர்காலங்களில் மக்கள் நிவாரணங்களை வழங்குவதில் இருந்தும் பின்னிற்பார்கள் என்பதை கட்டுரையாளர் சிந்தித்திருக்க வேண்டும். வெள்ளத்தில் அனைத்தையும் இழந்து பொருளாதாரத் தேவையுடன் இருப்பவர்கள் இந்தக் கருத்தினால் மறக்கடிக்கப்படுவதற்கும் இடமிருக்கிறது. எங்கிருந்து நிதி வருகிறது என்பதனை விட எவ்வளவு பேர் இதனால் பயனடைகிறார்கள் என்பதையே நிவாரணப் பணி தொடர்பில் நோக்கியிருக்க வேண்டும். எல்லாத் தொண்டு நிறுவனங்களும் அரபு நாட்டு நிதியுடன் களப்பணி செய்வதில்லை என்பதையும் கட்டுரையாளர் புரிந்து கொள்ள வேண்டும்.

மல்வானை என்பது பல இயக்கங்களும் ஜமாஅத்துக்களும் ஒற்றுமையாக இயங்கி வருகின்ற ஊர். இங்கு எவரதும் ஆளுகைகள் இல்லை என்பதை கட்டுரையாளருக்கு தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன் நடைபெற்றதாகக் கூறப்படும் சில அசம்பாவிதங்களில் ஒரு சிலர் ஈடுபட்டனர் என்பதற்காக ஒரு ஜமாஅத்தினரையே தட்டிக் கழிக்க நினைப்பது பொருத்தமானதல்ல. இவ்வாறானவர்கள் எல்லா ஜமாஅத்துகளுக்குள்ளாலும் இருக்கிறார்கள் என்பதை கட்டுரையாளர் புரிந்து கொள்ள வேண்டும்.

மல்வானயின் மைந்தர்கள் மல்வானையில் மட்டுமன்றி பாதிக்கப்பட்ட வெல்லம்பிட்டிய, கொலன்னாவை பகுதிகளிலும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்கள். இவர்கள் முஸ்லிம் சமூகத்திலிருந்து பிரிந்து செயற்படுவதில்லை. ஆனால் இந்தக் கட்டுரை இம்மக்களை முஸ்லிம் சமூகத்திலிருந்து பிரிப்பதாகவே அமைந்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும். தமக்கென ஒரு கணிப்பீட்டு முறையின் அடிப்படையிலேயே அவர்கள் தனியாகப் பெருநாள் கொண்டாடுவதே அல்லாமல் முஸ்லிம் சமூகத்தில் இருந்து பிரிந்து செயற்பட வேண்டும் என்ற நோக்கிலல்ல என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எப்பொழுதோ முடிந்து போன கொலை நிகழ்வொன்றை வெள்ள நிவாரணப் பணிகளுடன் தொடர்பு படுத்துவதன் ஊடாக கட்டுரையாளர் நாட வருவது என்ன? குறிப்பிட்ட பிரிவினரைச் சுட்டிக்காட்டி அவர்களை மோசமாக சித்திரிக்கின்ற கீழ்த்தரமான உணர்வுதான் இதற்குக் காரணமா?

யாரும் அடுத்த இயக்கங்களையோ ஜமாஅத்துக்களையோ தேவையற்ற முறையில் மோசமாகச் சாடிக் கொள்ளாதவாறு சமூகத் தலைமைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீள்பார்வை போன்ற நடுநிலை வகிக்கும் பத்திரிகைகள் இது போன்ற விடயங்களைப் பிரசுரிப்பதை இனி வரும் காலங்களில் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

## இனவாதம்... (1ம் பக்கத் தொடர்)

குற்றவாளியாகக் கருதப்பட்டவர் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனாலும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கறுப்பு ஜூன் கலவரத்துக்குக் காரணமான அபசரணப் சொன்னவர்கள் இதுவரை எந்த மன்னிப்பும் கேட்காமல், நீதிக்கு முன்னும் ஆஜராகாமல் சுதந்திரமாகச் திரிந்து வருகின்றனர்.

அதேபோல கடந்த வருடம் மே மாதம் கல்வீசித் தாக்கப்பட்ட பொரள்ளைப் பள்ளிவாசலின் தாக்குதலுக்குக் காரணமான குற்றவாளிகளும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் பௌத்த கொடியை எரித்த குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள 08 இளைஞர்களையும் தீயிட்டுக் கொளுத்துவதற்காக தம்மிடம் தரும்படி இனவாதிகள் இன்னமும் கேட்டு வருகின்றனர்.

குற்றத்தை ஒப்புக் கொள்வதையும் மன்னிப்புக் கேட்பதையும் தாண்டி, முஸ்லிம் சமூகத்தின் மீதான அத்துமீறலும் இனவாதச் செயற்பாடுகளும் தொடர்வது இந்த வழக்குகளின் முடிவுகளின் மூலம் நிறுத்தப்பட வேண்டும எனவே சமூகம் எதிர்பார்த்திருந்தது. ஆனால் இனிமேல் இனவாதத் தாக்குதல்கள் நடத்துபவர்களை எச்சரிக்கின்ற விதமாகவாவது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் வழக்கை முடித்திருப்பது முஸ்லிம்கள் மத்தியில் ஏமாற்றத்தைத் தோற்றுவித்துள்ளது. மன்னிப்பது சிறந்த பண்பாக இருந்தாலும் குறித்த பிரச்சினைகளை தனிநபரின் அல்லது குறித்த பிரதேசத்தின் பிரச்சினையாகவன்றி முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையாகவே சமூகம் அவதானித்து வந்தது இதற்குக் காரணமாகும்..

ஏற்கனவே கிழக்கு மாகாண முதலமைச்சரை தவறாக நடத்தியமைக்காக அரசாங்க அதிகாரி ஒருவரை முதலமைச்சர் ஏசியதனால் முதலமைச்சரே அரசாங்க அதிகாரியிடம் மன்னிப்புக் கேட்க நேர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## தகவலறியும்...
(1ம் பக்கத் தொடர்)

சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்துவதாக தற்போதைய அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தில் வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தது.

பல்வேறு மட்டங்களிலும் நடைபெற்ற உரையாடல்களின் பின்னர் உத்தேச சட்டத்தில் பொது மக்கள் பெற உரிமையுள்ள பல தகவல்கள் நீக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட சில விடயங்களில் மட்டுமே தகவல்களைப் பெறுவதற்கு மக்களுக்கு உரிமையளிக்கும் வகையிலேயே இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவிருக்கிறது.

## உறுதி மொழிகளை... (1ம் பக்கத் தொடர்)

செயற்படாது என்பதை அறிவிப்பதுடன், எந்த குற்றச்சாட்டுக்களும் இன்றி அல்லது வழக்கு விசாரணைகள் இன்றி ஒருவரை தடுத்துவைக்க முடியாத குற்றவியல் சட்டங்களை கையாளவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

[illegible]

தொடர்ந்தும் அமுலில் இருக்கும்வரை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்ற முடியும் என இலங்கை அரசாங்கத்தால் நம்பவைக்க முடியாது என்றும் அடம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார். சட்டத்தின் ஆட்சி மற்றும் குற்றவாளிகளுக்கு மதிப்பளித்தல் என்ற அடிப்படை மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவது முக்கியமானது என்றும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் என 2015ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தபோதிலும், உரிய நடவடிக்கை இதுவரையில் எடுக்கப் படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் திருமண வயது

## - ஒரு நடைமுறைக் கண்ணோட்டம்

நயீமா சித்தீக்

கடந்த சில மீள்பார்வை இதழ்களிலே எமது பெண்களின் திருமண வயது தொடர்பான சில ஆக்கங்களை வாசித்தேன். காலத்தின் தேவையறிந்து அக்கருத்துக்களை சமூகத்தின் பார்வைக்கு கொண்டு வந்த மீள்பார்வைக்கு நன்றிகள்.

எந்த ஒரு சமூகத்தின் வரலாற்றை எடுத்துப் பார்த்தாலும் காலத்துக்குக் காலம் சில பிரச்சினைகள் தலைதூக்குவதைக் காணலாம். இவை தவிர்க்க முடியாதவைகளாக இருக்கலாம். ஆனால், ஒரு சில பிரச்சினைகள் பூதாகரமாய்த் தலைவிரித்தாடத் தொடங்கிவிடுகின்றன. இவ்வாறான ஒரு பெரும் பிரச்சினையே இன்றைய இலங்கை வாழ் முஸ்லிம்களினது திருமணம் - அதனோடு தொடர்பான பிரச்சினைகள்.

நாம் வாழும் சமூகத்தைச் சற்றே உற்று நோக்கினால் இப்பிரச்சினை புரையோடிய புண்களாக மாறி இருப்பதைக் காணலாம். இதை வெட்கத்தோடும் வேதனையோடும் தலைகுனிந்து எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இதற்கு ஒரு காரணம், நமது பெண் பிள்ளைகளின் திருமண வயது குறித்த நம்மவர் கருத்துக்களாகும். இங்கு நான் திருமண வயது குறித்த இஸ்லாம் சார்ந்த சட்டப் பிரச்சினைகளையோ அல்லது இவ்வயது குறித்த நாட்டின் பொதுச் சட்டப் பிரச்சினைகளையோ ஆராயவில்லை. ஏற்கனவே வெளியான ஆக்கங்களில் இவை அலசி ஆராயப்பட்டுள்ளன. நான் தொட்டுக்காட்ட விரும்புவது சமூக ரீதியான யதார்த்தமான பிரச்சினைகளை மாத்திரமே. இவை கண்டறிந்த சாசுவதமான உண்மைகள்.

கிராமப் புறங்களில் என்றல்ல நகர்ப் புறங்களிலும் கூட ஜீ.ஸீ.ஈ சாதாரண தரம் படிக்கும் போதோ, சிலவேளை அதற்கும் முன்போ பெண் பிள்ளைகளின் திருமணத்தைப் பெற்றோர் நிச்சயித்து விடுகின்றனர். இதற்கான காரணங்களையும் அடுக்கிச் செல்கின்றனர்.

- இவவுக்குப் பின்னால் இன்னும் பெண் பிள்ளைகள் இருக்கின்றார்களே''
- படிச்சு வேலைக்கா அனுப்பப் போறம்''
- நல்ல எடமா வந்திரிக்கி.. விட்டுப் போட்டா பொறகு கெடைக்காது.''
- எங்கட உம்மா, உம்மம்மா எல்லாம் எட்டு வயசிலயும், பத்து வயசிலயும் கலியாணம் முடிச்சி நல்லாத்தானே வாழ்ந்தாங்க...''

இப்படி நிறையக் காரணங்களைக் காட்டிப் பிள்ளைகளை ''கரை சேர்த்து'' விடுவதில் மும்முரமாக இருக்கின்றனர்.



உண்மையிலேயே ''கரை சேர்த்து'' அதாவது வாழ்க்கையின் அடுத்த கரைக்குக் கொண்டுபோய் விட்டுவிடுகின்றார்கள்.

சாதாரணமாகவா?' சில பெற்றோர் ஒன்றுமறியாத அந்தப் பிள்ளையை வெளிநாடுகளுக்குமல்லவா அனுப்பி விடுகின்றார்கள்.

**நடப்பதென்ன?**

இத்தகைய திருமணங்களில் எத்தனை வீதம் வெற்றியளிக்கின்றன! கடைசியில் கஷ்டப்படுவது யார்? திருமணம் செய்விக்கப்பட்ட அந்தப் பிள்ளைதான் கஷ்டப்படுவாள். இன்றைய சமூக அமைப்பிலே பாலர் பாடசாலை போகத் தொடங்கியது முதல் பிள்ளைகள் படிப்போடும் பாடங்களோடும்தான் வாழ்கின்றனர்.

சில தசாப்தங்களுக்கு முன்னர் ஒரு ஒன்பது பத்து வயது சிறுமி வீட்டு வேலைகள் அனைத்தையும் நேர்த்தி யாகச் செய்து, சிறப்பாகச் சமைத்து முடிக்கவும் கற்றிருந்தாள். அன்றைய சூழல் அப்படி இருந்தது. ஆனால், இன்று அடுப்பங்கரைப் பக்கம் செல்லவே நேரமில்லை. தாய்மாரும் வற்புறுத்துவதில்லை.

மற்றய விடயம், அன்று பெரும் பாலும் கூட்டுக் குடும்பங்களே இருந்தன. இதன் மூலம் அன்றைய பெண் குழந்தை பல விடயங்களை இயல்பாகக் கற்றுக் கொள்ள முடிந்தது.

» விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம்
» பரஸ்பரம் உதவுவது
» பெரியவர்களை மதித்து மரியாதை செய்வது
» வேலைகளை மன மகிழ்வோடும் கூட்டாகச் செய்வது.
» பகிர்ந்துண்ணல்
» பரந்த மனப்பான்மை

என்று அன்றைய கூட்டுக்குடும்பச் சூழல் அவளை நிறையவே பக்குவப்படுத்தியது.

இன்றைய சூழலில் கருக் குடும்பங்களே அதிகம். இக் கருக்குடும்ப அமைப்பு முற்றிலும் வித்தியாசமானது. இதில் ஒரு சிறுமி வளரும் விதமும் மாறுபட்டது. பால்ய வயதில் திருமண வாழ்க்கையில் நுழைந்து அவளும் அநேகமாகத் தனிக் குடித்தனமே நடத்த வேண்டியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் அவ்விளம் மனைவி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவளாக இருக்கின்றாள்.

- அன்றாட உணவுகளை சமைக்கத் தெரியாமை.
- புதிய சூழலில் தன்னை இணைத்துக் கொள்ள முடியாமை.
- குடும்பம் சார்ந்த உறவினர்களுடன் நன்கு பழக முடியாமை.
- சிறு பிரச்சினைகளைக் கூட சமாளிக்க முடியாமை.

இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு அவள் தனித்து முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மகப்பேற்று மருத்து வர்களின் கருத்துப்படி இளவயதில் தாய்மைப் பேற்றை அடைவதும் பலருக்கு உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் பல சிக்கல்களை ஏற்படுத்தி விடுகின்றன.

பிறிதொரு பிரச்சினையாக இருப்பது மிக இளவயது பிள்ளையைத் திருமணம் செய்துவிட்டு - குடும்ப வாழ்க்கையையும் தொடங்கி விட்டு - கணவன் வெளிநாடு சென்று விடுவது. நடைமுறை ரீதியாக அப்படி தனிமையை அனுபவிக்கும் பெண் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நெறி தவறவும் சந்தர்ப்பங்கள் அமைந்து விடுகின்றன. காதி நீதிமன்ற வழக்குகள் பல இதற்குச் சான்றாக உள்ளன.

இளவயது - மிக இளவயதுப் பெண்ணைத் திருமணம் செய்யும் ஆணிண் வயதை நம்மவர்கள் கவனத்திற் கெடுப்பதில்லை. பெரியளவில் வயது வித்தியாசம் இருப்பதும் பெண்ணை உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் பாதிப்படையச் செய்து விடுகின்றது. 'பொறுமை' என்ற போர்வையின் கீழ் பொறுத்துப் பொறுத்துப் போகும் பெண் வாழ்க்கை யையே வெறுக்கும் விரக்தி நிலைக் குக்கூடத் தள்ளப்பட்டு விடுகின்றாள்.

நமது சமூகத்தவர்களில் அதிகமானோர் பெண் குழந்தை பிறந்த அன்றிலிருந்தே யோசிப்பது அப்பிள்ளையின் திருமணத்தைப்பற்றி மாத்திரமே. தாய்மார்கள் ஒன்று சேர்ந்தால் - பல சமயங்களில் அப்பிள்ளைகளின் முன்னிலையிலேயே இதைத்தான் கதைக்கின்றனர். ஒருவரை ஒருவர் சந்தித்தால் பொதுவாகக் கேட்கும் முதல் கேள்வி.

''மகள கலியாணம் முடிச்சிக் குடுத் திட்டீங்களா''

''புள்ளைக்கு வயசுபோறதுக்கு முன்ன ஒரு விஷயத்த முடிச்சிருங்களேன்''

இந்த மனோநிலை இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் பரவலாக இருப்பது கவலைக்குரியதுதான்.

உயர்கல்வியைக் கற்கக் கூடிய திறமை யிருந்தும் அதற்கான வசதியிருந்தும் கூட பல பெண் பிள்ளைகளைக் கிளியைப் பிடித்து சிறகை வெட்டி கூட்டிலடைப்பது போல் திருமண வாழ்க்கையில் நுழைத்துவிட்டு, நிம்மதிப் பெருமூச்சுவிடும் பெற்றோர்கள் எங்களில் நிறையவே இருக்கின்றனர்.

இந்த நிம்மதிப் பெருமூச்சு பலருக்கு நீண்டகாலம் நிலைப்பதுமில்லை. இது தான் யதார்த்தமான உண்மை. பெண் பிள்ளையோ ஆண்பிள்ளையோ உரிய வயதில் திருமணம் செய்து வைப்பது பெற்றோரின் கடமைதான். மறுப்பதற்கில்லை. ஆனால், பல விடயங்களை அவதானத்திற் கொண்டு இதனைச் செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியம். ''நம்முன்னோர்கள் செய்தார்களே.. வாழ வில்லையா?'' என்று கேட்பது விதண்டாவாதமாகும். எத்தனை ஆயிரமாயிரம் விடயங்களை நம்முன்னோர்கள் செய்தார்களே என்பதற்காக இன்று நாம் செய்கிறோமா என்ன!

- இன்னமும் மாட்டு வண்டியிலா பயணிக்கிறோம்!
- அம்மியில் அரைத்தும் உரலில் இடித்தும் விறகடுப்பிலா சமைக்கின்றோம்!
- குடத்தை ஏந்தி ஆற்றிலும் குளத்திலுமா நீர் அள்ளிச் சுமந்து வருகின்றோம்!

முன்னோர் செய்த நல்லவற்றை - பொருத்தமானவற்றை கால - வர்த்தமான தேவைக்கேற்ப. செய்ய வேண்டுமே தவிர கண்மூடித்தனமாகக் குழந்தைப் பிள்ளைகளைத் திருமணச் சுமையைத் தூக்க வைப்பது நடைமுறை ரீதியாகப் பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர். அதனை சிந்தித்து - மிகவும் சிந்தித்து - செய்ய வேண்டும். எனவே, எமது பெண்பிள்ளைகளின் திருமண வயதைத் தீர்மானிப்பதில் மிக அதிக கவனம் தேவை. விதிவிலக்காய் சில - மிகச் சில இள வயதுத் திருமணங்கள் சாத்தியப்பட்டிருக்கலாம். அதற்காகப் பலப்பரீட்சைகள் தேவையில்லை.

ஏனென்றால் இது வாழ்க்கை!

வேடிக்கையோ விளையாட்டோ அல்ல. சிந்திப்போம். ஆழமாகச் சிந்திப்போம்.

## கிழக்கு மாகாணத்தில்... (1ம் பக்கத் தொடர்)

கொண்டிருப்பது பற்றி இந்த சந்திப்பில் தமிழ் - முஸ்லிம் உறுப்பினர்களினால் அவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. போர் முடிந்து 7 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் கிழக்கு மாகாணத்தில் காணிப் பிரச்சினை இன்னமும் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை என சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினரான எம்.ஆர். அன்வர் இந்த சந்திப்பின்போது சுட்டிக் காட்டினார்.

படையினரின் தனியார் காணி ஆக்கிரமிப்பு தொடர்கின்றது என்றும் குறிப்பிட்ட அவர் குறிப்பாக புல்மோட்டை பிரதேசத்தில் கடற்படை மற்றும் இராணுவம் நிலை கொண்டுள்ள தனியார் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்தார்.

வட மாகாணத்தில் படையினர் நிலை கொண்டுள்ள தனியார் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பாரிய சவால்கள் இருந்த போதிலும் அவை விடுவிக்கப்பட்டு பொது மக்களிடம் மீள கையளிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கிழக்கு மாகாணத்திலுள்ள காணி விடுவிப்பது தொடர்பாக பிரதமரின் பதிலில் தாங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாக எம். ஆர். அன்வர் தெரிவித்துள்ளார்.

இப்போது கண்டி மாநகரில்
KANDY, MATALE, NUWARELIYA, KEGALLE
மாவட்டங்களின் மாணவிகளின் நலன் கருதி
NATIONAL DIPLOMA IN
PRE SCHOOL TEACHER TRAINING
(Nursery Teaching - 13th Batch)
100% Government Recognition
இத்துறையில் அரச அங்கீகாரம் பெற்ற முதல் முஸ்லிம் கல்வி நிறுவனம்
இத்துறையில் 10 வருட அனுபவம்
ஒரு முன்பள்ளியை நடத்துவதற்கு இச்சான்றிதழ் கட்டாயம் என்பது குழந்தை அபிவிருத்தி அமைச்சின் சட்டமாகும்.
யாருக்கு?
✓ முன்பள்ளி ஆசிரியர்கள்
✓ சர்வதேச பாடசாலை ஆசிரியர்கள்
✓ O/L, A/L, பரீட்சை எழுதியவர்கள்
✓ பெற்றோர்கள்
தகைமைகள்
✓ A/L பரீட்சை எழுதியவர்கள் (இம்முறை A/L பரீட்சை எழுதுபவர்களும் விண்ணப்பிக்கலாம்.)
✓ அல்லது O/L ல் கணிதம் உட்பட 5 பாடம் சித்தியடைத்திருத்தல்.
முதல் 50 மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
விண்ணப்பிக்கும் முறை
1. சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றை எமது கண்டி நிலைய முகவரிக்கு அனுப்பலாம். AGRA 5/9A,1/1, Weerakoon Garden, Kandy.
2. அல்லது பெயர், முகவரி, பாடநெறியின் பெயர் என்பவற்றை SMS செய்யலாம்
ஆரம்பம் : ஜூலை / ஆகஸ்ட்
எமது ஏனைய நிலையங்களில் நடைபெறும் பாடநெறிகள்
Diploma in Pharmacy Management (Thihari Center)
Certificate in Psychological Counseling (Thihari Center)
National Diploma in Pre School Teacher Training (Thihari|Colombo|Beruwela)
ÂGRA INSTITUTE
Warapalana Road, Thihariya.
0718 073797
0779 995419
agrainst@gmail.com



கண்டி மடவளையில்
O/L பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடைய தவறிய மாணவிகளுக்கு
A/L 2018 தமிழ் மொழி மூலம்
வர்த்தக, கலைப் பிரிவு
விஷேட செயல் திட்டம்
A/L 2018 க்கான மீண்டும் ஒரு வகுப்பு (2nd Batch) ஆரம்பம்
இம் மாணவிகளுக்கு A/L கல்வியோடு மேலதிகமாக பின்வரும் பயிற்சிநெறிகளும் வழங்கப்படும்
★ ஆன்மீகப் பயிற்சி (தஜ்வீத், தர்பியா, அஹ்லாக்) ★ ஆங்கில மொழி ★ சிங்கள மொழி ★ சமையற்கலை ★ தையற்கலை ★ வாழ்க்கை திறன் ★ உளவியல் ★ சுயதொழில் பயிற்சிகள்
இவற்றுடன் மேலும் சில...
G.C.E O/L இல் சித்திபெற தவறியவர்களை தகைமைக்கு உட்படுத்தி A/L பரீட்சைக்கு தோற்ற வசதி செய்யப்படும்.
O/L இல் Commerce (வர்த்தகம்) பாடத்தை தெரிவு செய்யாதவர்களும் A/L வர்த்தக பிரிவை தொடர விரும்பின் விஷேட பயிற்சி
ஒவ்வொரு பாடத்திற்கும் தேர்ச்சி பெற்ற முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டல்
கல்லூரியினுள் வதிவிட வசதி
தொடர்புகளுக்கு: 0777 78 52 40
EMERRAD Ladies Academy
36/3B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY
M: 0777 71 71 29 | T: 081 20 50 600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## தொடரும் கறுப்பு ஜூனின் நிழல்கள்

கடந்த காலங்களில் தாண்டவமாடிய இனவாதத்தின் உச்ச கட்டமாக அளுத்கமையில் முஸ்லிம்கள் தாக்கப்பட்டனர். அவர்களது இருப்பிடங்கள், தொழில் நிலையங்கள் சூறையாடப்பட்டுத் தகர்க்கப்பட்டன. பல வீடுகளும் கடைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. இருவர் கொல்லப்பட்டனர். சிலர் வெட்டப்பட்டு அவயவங்களை இழந்தனர். பல கோடிக் கணக்கான சொத்துக்களை முஸ்லிம் சமூகம் இழந்தது.

இத்தகைய பேரழிவு திடீரெனத் தோற்றம் பெற்றதொன்றல்ல. பல வருடங்களாக அப்போதைய அரச அனுசரணையுடன் நடத்தப்பட்டு வந்த முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளின் தொடரில் உச்ச கட்டமாகவே இது நிகழ்ந்தது. முஸ்லிம்களை அடக்கி வைக்க வேண்டும், அவர்களது பொருளாதாரத்தை நசுக்க வேண்டும் என்ற நச்சுக் கருத்துக்களை சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி அதனை அறுவடை செய்த நிகழ்வாகவே கறுப்பு ஜூன் சம்பவங்கள் நடந்தேறின.

இது சில சிங்களத் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டது. நாட்டிலுள்ள ஏனைய சிங்கள மக்கள் இதற்கு ஆதரவானவர்கள் அல்ல என்ற கருத்துக்கள் அப்போது பேசப்பட்டன. இருந்த போதிலும் நடந்த சம்பவங்களுக்காக சிங்கள மக்களின் அனுதாபங்களைத் திரட்டும் வகையில், அல்லது பச்சாதாபப்படும் வகையில் இதுவரை சிங்கள ஊடகங்களோ சிங்களத் தலைமைகளோ பெரியளவு நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பது, இந்தத் தீவிரவாதிகளின் ஆளுகையை மீறி சிங்கள சமூகத்துக்கு எதுவும் செய்ய முடியாது என்ற நிலையை படம் பிடித்துக் காட்டுகிறது.

அதேபோல வன்முறைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான போதுமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதும் முஸ்லிம் சமூகத்தையே அவமதிப்பதாக உள்ளது. கலவரங்களுக்குக் காரணமாக இருந்த ஆவேஷத்தைத் தூண்டும் உரையை நிகழ்த்திய ஞானசார தேரர், வேறு பல காரணங்களுக்காகவும் விசாரிக்கப்பட்டும் கைது செய்யப்பட்டும் உள்ளாரே ஒழிய இவ்வளவு அழிவுகளையும் தந்த அளுத்கமை சம்பவங்களுக்காக அவருக்கெதிராக எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தீமூட்டி எரிக்கப்பட்ட வீடுகளை இராணுவத்தை வைத்து அப்போதைய அரசாங்கம் மீளமைத்துக் கொடுத்தது. ஆனால் தீமூட்டப்பட்டும் தாக்கப்பட்டும் சேதமாக்கப்பட்ட தமது தொழில் முயற்சிகளை மீண்டும் கட்டி எழுப்ப முடியாமல் பாதிக்கப்பட்டவர்கள் கஷ்டப்படுகின்றனர். கொள்ளையடிக்கப்பட்ட சூறையாடப்பட்ட நகைகள், உடைமைகளை இழந்த மக்கள் அவற்றை மீளப்பெற முடியாமல் தவிக்கின்றனர். கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களும் அவயவங்கள் வெட்டப்பட்டவர்களும் தமது வாழ்க்கையை தொடர்ந்து கொண்டு செல்ல முடியாமல் அல்லல்படுகின்றனர். அரசியல் காரணங்களுக்காக தாஜுதீனின் கொலையை விசாரிக்க முடியுமான அரசு, கறுப்பு ஜூனில் தொடர்புபட்டவர்களை விசாரிக்காமல் இருப்பதும் பாதிக்கப்பட்டவர்கள் விடயத்தில் பாராமுகமாக இருப்பதும், இனவாதத்துக்கு அரசும் அடிபணிந்துவிட்டதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

கறுப்பு ஜூனுக்கு முன்னர் இருந்த நிலைமைகள் மீண்டும் உருவாகி வருகின்றன. மீண்டும் பள்ளிவாசல்கள் இலக்கு வைக்கப்படுகின்றன. இனவாதத்தைத் தூண்டும் வகையில் பேசுபவர்கள் கைது செய்யப்படுவர் என அரசாங்கம் சொன்ன போதும் மஹியங்கனையில் வழிபாட்டுக்கு வந்த மக்களிடமே முஸ்லிம் விரோதக் கருத்துக்கள் பேசப்பட்டுள்ளன. அச்சத்தில் உறைந்து போயிருந்த காலத்தை முஸ்லிம் சமூகம் மீண்டும் ஞாபகிக்கிறது.

இத்தனையும் நடந்து கொண்டிருந்த போதிலும் இவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான சூழலை முஸ்லிம் சமூகம் உருவாக்கிக் கொள்ளவில்லை. தாம் பாதுகாப்பற்றிருக்கிறோம் என்பதை அழுத்திச் சொல்வதற்கு கறுப்பு ஜூன் நினைவு தினத்தையாவது முஸ்லிம் சமூகம் பயன்படுத்திக் கொள்ளவில்லை. எதிர்கால இருப்பினைப் பற்றிச் சிந்திப்பதை விட்டு முஸ்லிம் சமூகம் அன்றாட விடயங்களில் மூழ்கிப் போயிருக்கிறது.

தமது பிரச்சினைகளின் பால் கவனத்தை ஈர்ப்பதற்காக சிலர் குண்டுகளை வெடிக்கச் செய்கின்றனர். துப்பாக்கிச் சூடுகளை நடத்துகின்றனர். பணயக் கைதிகளை வைத்து கடத்தல்களில் ஈடுபடுகின்றனர். உண்ணாவிரதம் இருக்கின்றனர். ஆர்ப்பாட்டங்கள், நினைவு தினங்கள் நடத்துகின்றனர்.

கறுப்பு ஜூனுக்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்ற இன்றைய நிலையில், கறுப்பு ஜூனுக்கு முன்னதான செயற்பாடுகள் மீளவும் உயிர்ப்பிக்கப்பட்டு வரும் நிலையில் முஸ்லிம் சமூகத்திலிருந்து கூடிக் கலைகின்ற கூட்டங்களோ, காகிதப் போராட்டங்களோ கூட நடத்தப்படாமல் இருப்பது கவலைக்குரியது.

இறந்த காலப் படிப்பினைகளில் இருந்து நிகழ்காலத்தை அமைத்துக் கொள்ளாத சமூகங்களுக்கு எதிர்காலமில்லை என்ற வாசகங்களை முஸ்லிம் சமூகம் ஊன்றிப் படிக்க வேண்டியிருக்கிறது.

# நிலைமாற்று நீதிப் பொறிமுறையில் முஸ்லிம்கள் எங்கே?

பி.எம். முஜீபுர் ரஹ்மான்




**நிலைமாற்றுகால நீதியின் முக்கியத்துவமே என்றால் ஆவணப்படுத்துவதாகும். ஏனெனில், யுத்தம் மற்றும் இனக்கலவரம் நடக்கும்போது உண்மைகள் புதைக்கப்பட்டும் மறைக்கப் பட்டும் இருக்கலாம். எனவே நடந்த உண்மைகள் கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும்.**

இலங்கை வரலாற்றில் நடைபெற்ற இன முரண்பாடு, யுத்தம் மற்றும் ஏனைய வன்முறைகள் காரணமாக இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், இடப்பெயர்வுகள், சொத்திழப்புக்கள் என்பவற்றுக்கு நஷ்டயீட்டை வழங்குவதற்காகவும், பாதிக்கப்பட்டோருக்கு உண்மையைக் கண்டறிந்து உரிய நீதியை வழங்கவும் நிலைமாறுகால நீதிக்கான பொறிமுறைகளை உருவாக்குவாக இலங்கை அரசாங்கம் கடந்த வருடம் (2015) ஆகஸ்ட் மாதத்தில் ஐக்கிய நாட்டு மனித உரிமை ஆணைக்குழுவிடம் உறுதியளித்திருந்தது.

இதற்காக நான்கு பொறிமுறைகளை முன்வைத்திருந்தது.

1. உண்மை, நீதி, மீள் நல்லிணக்கம், மீள் நிகழாமை என்பவற்றுக்கான ஆணைக்குழு.
2. விஷேட வழக்குத் தொடுப்பவரை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறை.
3. காணாமல் போனாரின் விடயங்களைக் கையாள்வதற்கான அலுவலகம்.
4. இழப்பீட்டுக்கான அலுவலகம்.

### நிலைமாற்று கால நீதி

இனங்களுக்கிடையிலான யுத்தம் மற்றும் நீண்டகால இனக்கலவரம் நடைபெற்றதன் பின்னர், இரு சமூகங்களும் இணைந்து ஒரு நீதிப் பொறிமுறைக்கு வருவதையே நிலைமாற்று கால நீதி எனப்படுகிறது. இம்முறை உலகின் பல பாகங்களில் நடைபெற்றுள்ளது. ஆனால், அவை பூரணமாக வெற்றியடைந்துள்ளதா என்பதில் பல சந்தேகங்கள் இருக்கின்றன. இருப்பினும், அரசாங்கம் இழப்பீடு வழங்குவதற்கு முன்வருமே தவிர பொறுப்புக்கூற முன்வருமா என்பதில் சில சந்தேகங்களும் இருக்கின்றன.

உண்மையைக் கண்டறிவது சம்பந்தமாக உலகில் இதுவரை 30க்கு மேற்பட்ட ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவைகள் எல்லாம் திருப்திகரமாக நடைபெற்றுள்ளதாகக் கூற முடியாது.

இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடவாமல் இருப்பதற்கு உத்தரவாதம் வேண்டும். நிலைமாற்றுகால நீதிக்கு நீதியை வழங் குவதால் உண்மையைக் கண்டறிதல், இழப்பீடு வழங்குதல், மீண்டும் நடவாமல் இருப்பதற்கு உத்தரவாதமளித்தல் என்பன உறுதிப்படுத்தப்படும்.

### நிலைமாற்று கால நீதி ஏன் முக்கியம்?

நிலைமாற்று கால நீதியின் முக்கியத்துவமே ஆவணப்படுத்துவதாகும். ஏனெனில், யுத்தம் மற்றும் இனக்கலவரம் நடக்கும்போது உண்மைகள் புதைக்கப்பட்டும் மறைக்கப்பட்டும் இருக்கலாம். எனவே நடந்த உண்மைகள் கண்டறியப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

உதாரணமாக, படுகொலை, உடல் உளரீதியிலான மாற்றம், வாழ்வு முறை மாற்றம், குழந்தைகளைப் பெறுவதற்கு கட்டுப்பாடு, பிள்ளைகளை பெற்றோரிடம் இருந்து பிரித்து வைத்தல் ஆகியன பகுதி அளவிலோ முழுமையாகவோ நடைபெற்றிருந்தால் அது இன அழிப்பாகும்.

ஆனால் இதற்கான நோக்கம் இருந்திருக்க வேண்டும். இதை நிரூபிப்பது எப்படி? இன்ன இன்ன சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்றும் இவை செய்யப்பட்டதன் நோக்கம் இன அழிப்பு என்றும் நிரூபிக்க வேண்டும்.

அதற்கு பாதிக்கப்பட்ட மக்களிடம் அவர்களது கருத்துக்களைக் கேட்டறிய வேண்டும். இப்போது இதற்காக ஒரு குழுவை அரசாங்கம் நியமித்துள்ளது.

### இலங்கையில் கலந்தாலோசனைச் செயலணி

இந்தப் பொறிமுறைகளை அமைப்பதற்கான ஒரு முன்னோடிச் செயற்பாடாக பொது மக்களின் கருத்துக்களை அறிவதற்காக 11 உறுப்பினர்களைக் கொண்ட நல்லிணக்கப் பொறிமுறைகள் பற்றிய கலந்தாலோசனைச் செயலணி பிரதமரினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பொறிமுறைகளை எவ்வாறு அமைப்பது என்பது குறித்து பொது மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்களை இந்த செயலணி மேற்கொள்ளும். இந்தப் பொறிமுறைகளை அல்லது பொது மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ள வேறு பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பில் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணியை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த செயலணி நாடு முழுவதிலும், குறிப்பாக பாதிப்புக்குள்ளானவர்களின் கருத்துக்களை அறியும் பணியில் இறங்கியுள்ளது. இச்செயற்பாடு சமூக நீதியையும் சமத்துவத்தையும் மனிதாபிமானத்தையும் நிலைநாட்டி சுபீட்சமான இலங்கையை கட்டியெழுப்ப ஒத்துழைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிலைமாறுகால நீதிக்கான செயற்பாட்டைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான செயற்பாடாக பரந்துபட்டு நடாத்தப்படும் கலந்தாலோசனை அமைகிறது. இந்த செயலணி நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலுமுள்ள பல்வேறு இன - மத சமூகங்களிடையே கலந்துரையாடி குறிப்பாக பாதிக்கப்பட்டவர்களின் குரலுக்கு இடம்கொடுத்தல் என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில், பரந்தளவிலான கலந்தாலோசனைகளை முன்னெடுக்கும்.

இதன் அடிப்படையில் கடந்த காலங்களில் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் (முஸ்லிம், தமிழ் மற்றும் சிங்கள) மனித நேயக் கண்ணோட்டத்தில் நோக்கி, பாதிப்புக்குள்ளானவர்களுக்கு நீதி, நஷ்டஈட்டை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் அடிப்படையில், இலங்கையில் கடந்த காலங்களில் யுத்தத்தினாலும், இனக்கலவரங்களினாலும் முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, முஸ்லிம்கள் அனைவரும் நாடளாவிய ரீதியில் நடைபெறுகின்ற மக்கள் கருத்தறியும் குழுவிடம் தங்கள் பிரச்சினைகளைத் தெரிவித்து அதற்கு எவ்வாறான தீர்வையும், நஷ்டஈட்டையும் எதிர்பார்க்கிறார்கள் எனத் தெரிவிப்பது காலத்தின் முக்கிய கடமையாகும்.

1. 1990 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள். (வடமாகாண முஸ்லிம்கள்)

2. நாட்டின் அனைத்து பாகங்களிலும் இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள்.

(1915ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நடைபெற்ற இனக்கலவரங்கள்)

- மாவனல்லை இனக்கலவரம்.
- மதுரங்குளி இனக்கலவரம்.
- நொச்சியாகம இனக்கலவரம்.
- மாளிகாவத்தை இனக்கலவரம்.
- காலி இனக்கலவரம்.
- அளுத்கம இனக்கலவரம்.

3. மத சுதந்திரங்கள் மீறப்பட்ட பள்ளிவாசல் நிருவாகிகள்.

4. முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த படுகொலைகள்

- 1976 ஆம் ஆண்டு புத்தளத்தில் நடைபெற்ற பள்ளிவாசல் படுகொலை.
- 1990 ஆம் ஆண்டு மன்னார் றஸூல் புதுவெளியில் நடைபெற்ற மனிதப் படுகொலை.
- 1990 ஆம் ஆண்டு காத்தான்குடி பள்ளிவாசலில் நடந்த படுகொலை.
- 1990 ஆம் ஆண்டு அளிஞ்சிப்பொத்தானையில் நடைபெற்ற இனப்படுகொலை.
- 1990 ஆம் ஆண்டு ஏறாவூரில் நடைபெற்ற இனப்படுகொலை.
- மூதூரில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலினால் பாதிக்கப்பட்ட மக்கள்.
- வாழைச்சேனையில் நடைபெற்ற இனப்படுகொலை
- 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த காலத்தில் தமது சொந்தங்களை இழந்த, பாதிக்கப்பட்ட உறவினர்கள்.

5. அண்மைய ஆண்டுகளில் இடம்பெற்ற கிறீஸ் மனித விவகாரம்.

6. வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் ஏனைய பாகங்களிலுள்ள காணிப் பிரச்சினை.

7. இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் குறித்து.

ஆகியோர் உரிய குழுவை சந்தித்து தங்களது கருத்துக்களைத் தெரிவிப்பது மிகப் பொருத்தமாகும். இது ஒரு வரலாற்று முக்கியத்துவமான செயற்பாடாகும். இவ்வரிய சந்தர்ப்பத்தை முஸ்லிம் சமூகம் தவறவிடாமல், அனைவரும் தங்களது கருத்துக்களை பதிவது மிகவும் முக்கியமாகும்.

ஏனெனில், இங்கு பெறப்படுகின்ற அனைத்துத் தகவல்களும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் அறிக்கையிடுவதோடு, சர்வதேச சமூகத்திற்கும் இத்தகவல்கள் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, பாதிக்கப்பட்ட மக்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி குழுவிடம் தமது கருத்துக்களை முன்வைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லாட்சி அரசியல்

றவூப் ஸெய்ன்



## பழைய பாதையில் பழைய பயணம்



# நல்லாட்சிக்கெதிராய் மைத்திரி!?

காலத்தை சற்று பின்னகர்த்தி 2014 டிசம்பரிலும் 2015 ஜனவரி தேர்தலுக்கு முந்திய நாட்களிலும் தேர்தல் பிரச்சார மேடைகளில் மைத்திரியும் ரணிலும் முழங்கிய கோஷங்களை மனக் கண் முன் கொண்டு வாருங்கள்.

ஊழல் மோசடிக்காரர்களை சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

மஹிந்தவின் ஊதாரித்தனமான திட்டங்களை நிறுத்துவோம்.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சட்டத்தை அவர்கள் மீது பிரயோகிப்போம்.

மஹிந்த தோல்வியுற்றால் ஒரு மாதத்திற்குள் அவரை சிறையில் அடைப்போம்.

இப்படி எக்கச்சக்கமான கோஷங்கள் பிரச்சார மேடைகளில் வானைப் பிளந்தன. தமது பங்கிற்கு ஜே.வி.பி.யினரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவும் விக்ரமபாகு கருணாரத்னவும் இதே கோஷங்களையே எழுப்பினர். பாட்டலி சம்பிக்க ரணவக்க தேர்தல் முடிந்த கையோடு மஹிந்த ஒரு வாக்கினைப் பெறுவதற்கு 4 இலட்சத்திற்கும் அதிகமான பணத்தை செலவு செய்திருக்கிறார் என தனது பகுப்பாய்வை பத்திரிகைகளில் வெளிப்படுத்தினார்.

கணக்குப் பார்ப்பதும் காய்நகர்த்துவதும் தேர்தல் திருவிழாவோடு முடிவுக்கு வருவதே நமது அரசியல் வரலாறு. இன்று நல்லாட்சிக் கோஷத்தோடு அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ரணில்-மைத்திரி அரசாங்கம், மஹிந்த வரைந்த பழைய பாதையிலேயே பயணிக்கத் தொடங்கியுள்ளது. அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதில் மஹிந்த என்ன? மைத்திரி என்ன? எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதைப் போலவே அரசியல் நகர்கின்றது.

ஹம்பாந்தோட்டையில் கடந்த வாரம் Shangri La ஹோட்டல் ஜனாதிபதி மைத்திரிபாலவினால் திறந்து வைக்கப்பட்டது. ஹெங்கொங் இற்குச் சொந்தமான இந்தப் பிரமாண்டமான ஹோட்டல் திறப்பு விழாவில் முன்னாள் ஜனாதிபதி கலந்துகொள்ளவில்லை. ராஜபக்ஷதான் இதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தவர். சுற்றுலாத் துறையில் வெளிநாட்டு முதலீட்டைக் கவரும் அவரது திட்டத்தில் ஒன்று இந்த ஹோட்டல்.

இந்தியக் கடற்பரப்பின் முகத்திடலில் 145 ஏக்கர் நிலத்தில் 300 ஆடம்பர அறைகளைக் கொண்ட இந்த நட்சத்திர ஹோட்டல் மட்டுமன்றி, உலகத் தரம் வாய்ந்த ITC,Hyatt, Sheroton போன்ற ஹோட்டல் Brandகளையும் இலங்கைக்குக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டியவர் ராஜபக்ஷ. இக்கூட்டத்தில் ஜனாதிபதி உரையாற்றவில்லை. சுற்றுலாத் துறை அமைச்சரே வரவேற்புரை நிகழ்த்தினார்.

ராஜபக்ஷாக்களின் பாரிய நிதி மோசடிகளையும் அபிவிருத்தித் திட்டங்களையும் கடுமையாகச் சாடி வந்த மைத்திரியும் ரணிலும் இப்போது மஹிந்த வரைந்த பாதையிலேயே பயணிப்பது ஆச்சரியமானது. அதில் ஒன்றுதான் இதுபோன்ற ஊதாரித்தனமான ஹோட்டல் நிர்மாணமாகும்.

புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த கையோடு கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தை இடைநிறுத்தி வைத்தது. அதனது செலவை மீள் மதிப்பீடு செய்ய வேண்டும் என பிரதமர் பாராளுமன்றில் தெரிவித்தார். நரேந்திர மோடி இலங்கை வந்தவேளை, அத்திட்டம் இடைநிறுத்திய நிலையிலேயே இருந்தது. இப்போது துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய கட்சி எதிர்க் கட்சியாக இருந்த போது இலங்கையின் இறைமை, பாதுகாப்பு மற்றும் சூழலியல் தாக்கம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு துறைமுக நகரத் திட்டத்தை அக்கட்சி கடுமையாக எதிர்ப்பதாக அவ்வப்போது பாராளுமன்ற விவாதங்களில் கூறி வந்தது. அப்போது பாராளுமன்றில் காட்டுக் கூச்சல் போட்ட ரணில், இப்போது சிற்சில அலங்கார மாற்றங்களோடு துறைமுக நகரத் திட்டத்தை வேகமாக முன்னெடுத்து வருகிறார். மஹிந்த எதற்காக விமர்சிக்கப்பட்டாரோ, அதே திட்டத்தை இன்று ரணிலும் மைத்திரியும் முன்னெடுக்கின்றனர்.

மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிலும் அரசாங்க நிதி வெள்ளம் போல் பாய்ந்த ஒரே மாவட்டம் அவரது பிறப்பிடமான ஹம்பாந்தோட்டையாகும். ஹம்பாந்தோட்டை துறைமுகம், மத்தளை விமான நிலையம், ஹம்பாந்தோட்டை பெலியத்த ரயில் பாதை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்தின் ஹம்பாந்தோட்டை கிளை, கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு சமாந்திரமான வசதிகளுடன் கூடிய ஹம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலை, கிராமிய பாதை அபிவிருத்தி என வகை தொகையற்ற நிதி வாரி இறைக்கப்பட்டது. தனது ஆட்சிக் காலத்திற்குள் தனது தேர்தல் தொகுதியையும் மாவட்டத்தையும் அபிவிருத்தியில் உச்சத்திற்கு உயர்த்த வேண்டும் என்பதில் மஹிந்த ஒற்றைக் காலில் நின்றார்.

இன்றைய அரசியல் காட்சி என்ன? மைத்திரி அவரது பொலன்னறுவை மாவட்டத்திற்கு வகை தொகையற்ற நிதியை பாய்ச்சுவதற்கு பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார். இந்த இடத்தில் இருவருக்கும் இடையில் ஒரு சிறிய வேறுபாடே உள்ளது. மஹிந்த ஒரு சில பயனற்ற அனாவசியமான திட்டங்களில் பணத்தை விரயம் செய்துள்ளார். பொலன்னறுவையின் குடிநீர், பாதை விஸ்தரிப்பு, ரயில்வே விஸ்தரிப்புத் திட்டங்களுக்கு மைத்திரி 450 மில்லியன் டொலர் பெறுமதியான பல திட்டங்களை ஆரம்பித்து வைத்துள்ளார். இவை பயனுள்ளவை.

இங்கு மஹிந்தவுக்கும் மைத்திரிக்கும் இடையில் ஒற்றுமைகள்தான் அதிகம். தேர்தல் பிரச்சார கூட்டங்களில் மஹிந்தவின் கொந்தராத்துத் திட்டங்கள் குறித்து விமர்சித்த மைத்திரி, வெளிப்படையான கேள்விப் பத்திர அறிவித்தல்கள் எதுவுமின்றி தான் விரும்பிய சீனக் கம்பனிகளிடம் மஹிந்த திட்டங்களைக் கையளித்து, அவற்றுக்கான கொமிஷன்களையும் பிடுங்கிக் கொண்டார் என்பது மஹிந்த மீது முன்வைக்கப்பட்ட முக்கிய விமர்சனமாகும்.

இப்போது என்ன நிகழ்ந்திருக்கிறது? மஹிந்த செய்த அதே தவறை பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தில் மைத்திரி இழைத்திருக்கிறார். 450 மில்லியன் டொலர்களை வழங்கும் சீனாவிடமே கொந்தராத்தையும் வழங்கியுள்ளார்.

அதேபோன்று இத்திட்டங்களின் பலாபலன் கள் பற்றி முன் ஆய்வுகள் எதுவும் நடத்தப் படவில்லை. மத்தளை விமான நிலையமும் ஹம்பாந்தோட்டை துறைமுகமும் முன்ஆய்வு கள் எதுவுமில்லாமலேயே முன்னெடுக்கப்பட்டதை நாம் நினைவுகூர வேண்டும்.

இலாப-நஷ்ட பகுப்பாய்வு (Cost and Benefit Analysis) இல்லாமல் பல பில்லியன் டொலர் பெறுமதியான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, அவை தோல்வியில் முடிவடைந்துள்ளன என்பதற்கு மஹிந்த யுகம் சாட்சியாக உள்ளது. இந்நிலையில், அதே தவறை மைத்திரி அரசும் இழைத்து வருகின்றது.

சமீபத்தில் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில், பேஸ் லைன் வீதிக்குச் சமாந்திரமாக ஒரு அதிவேகப் பாதையை நிர்மாணிக்கப் போவதாகத் தெரிவித்தார். வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டத்தில் இல்லாத இந்த எண்ணம் கிரியெல்லவுக்கு எப்படி வந்தது? அமைச்சர்களும் தனிமனிதர்களும் எடுக்கும் தான்தோன்றித்தனமான அரசியல் முடிவுகள் எவ்வளவு ஆபத்தானவை என்பதற்கு கோத்தாவும் பசிலும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர். அவர்கள் மீது தேர்தல் காலங்களில் விமர்சனங்களை அள்ளி வீசியவர்கள், இப்போது அதே வகைத் தவறுகளை இழைக்கின்றனர்.

ஊழல் மோசடிகளை ஒழிப்போம் என்றவர்கள், தீர்ப்புகளை இழுத்தடிப்பதன் மூலம் ஊழல் மோசடிக்காரர்களை வாழ வைக்கின்றனர். எதிர்கால ஊழல் பேர்வழிகளுக்கும் களமமைக்கின்றனர். ஜனாதிபதி ஜப்பான் விஜயத்திற்கு முன்பாக பாரிய ஊழல் மோசடி விசாரணைப் பிரிவின் தலைவர் ரவி வித்யலங்காரவை அழைத்து (ஜூன் 02, 2016) அரச அதிகாரிகளை தாம் திரும்பும் வரை கைதுசெய்ய வேண்டாம் என்று உத்தரவு பிறப்பித்தார்.

விசாரணை நிறைவடைந்துள்ள சம்பவத்தில் குற்றவாளியாக்கப்பட்ட பசில் ராஜபக்ஷவை வேண்டுமானால் கைதுசெய்யலாம் என்றும் அவருக்கு உடந்தையாக இருந்த அரச அதிகாரிகள் எவரையும் கைதுசெய்ய வேண்டாம் என்றும் ஜனாதிபதி குற்றவாளிகளைக் காப்பாற்றியுள்ளார். நிதி மோசடிப் பிரிவு தொடங்கியதிலிருந்து மக்கள் கண்ணில் மண்ணைத் தூவுவதற்கு சட்டத்தின் வலையில் சில சின்ன மீன்களை மாத்திரம் சிக்க வைக்கிறது அரசாங்கம். பெரிய மீன்கள் வெளியிலே உலா வருகின்றன.

பசில் மூன்று முறை கைதுசெய்யப்பட்டு அடுத்த அரை மணி நேரத்தில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால், வசீம் தாஜுதீன் கொலை வழக்கில் கைதாகியுள்ள நாராஹேன்பிட முன்னாள் பொலிஸ் அதிகாரி தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சட்டத்தின் ஆட்சி எங்கே இருக்கின்றது?

உல்லாசத்துறை அபிவிருத்தி அதிகார சபை முன்னாள் பணிப்பாளர் ஹேமா தர்ம வர்தன மீதான வழக்கு விசாரிக்கப்பட்டு குற்றவாளியாக்கப்பட்டுள்ளார். ஆனால், அவர் இப்போது பிரதமர் அலுவலகத்தில் மேலதிக செயலாளராகப் பணியாற்றுகின்றார். குற்றவாளிகளால் அரச நிருவாகத்தைக் கொண்டு செல்லும் மைத்திரி-ரணில் அரசாங்கம் நல்லாட்சிக்கு எதிராய் செயல்பட்டு வருகின்றது.

இலங்கையில் நல்லாட்சி என்பது தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்றும் ஒரு மாய வித்தைதான். மக்களை மந்தைகளாக்கும் ஜனநாயகத்தில் இது எப்போதும் நடந்து வரும் ஒன்றுதான்.

# பிளாஸ்டிக் கழிவுகளை கடலில் கொட்டும் முதல் 5 நாடுகளில் இலங்கையும் ஒன்று

ஐக்கிய அமெரிக்காவை தளமாகக் கொண்ட பிஸ்னஸ் டைம்ஸ் சஞ்சிகை மேற்கொண்ட ஓர் ஆய்வில், உலகில் பெருமளவு பிளாஸ்டிக் கழிவுப் பொருட்களை கடலில் வீசும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 5 ஆவது இடத்தில் உள்ளது. முதல் 20 நாடுகள் 80 வீதமான (உலகின்) கழிவுப் பொருட்களை கடலில் சேர்க்கின்றன. அவற்றின் அளவு 13 டொன் என கணிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாய்வின்படி ஒவ்வொரு சராசரி இலங்கையரும் 5.1 கிலோ பிளாஸ்டிக் போத்தல்களை கடலில் சேர்க்கின்றனர். இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம், சீனா போன்ற நாடுகள் இவ்வாய்வில் முன்னணியில் உள்ளன. சீனாவே உலகில் ஆகக் கூடுதலான பிளாஸ்டிக் கழிவுகளை கடலில் சேர்க்கின்றது. அங்கு சராசரியாக ஒரு பிரஜை 8.2 கி.கி. பிளாஸ்டிக் கழிவுகளை கடலில் சேர்க்கின்றான்.

இலங்கையின் ஒவ்வொரு பிரஜையும் 0.299 கி.கி. பிளாஸ்டிக் கழிவுகளை முறைகேடாகப் பயன்படுத்துகின்றனர். நாளொன்றுக்கு 516368 கி.கி. பிளாஸ்டிக் கழிவுகள் வெளியேற்றப்படுகின்றன. இலங்கையின் சுற்றாடல் அதிகாரிகள் இக்கணிப்பீடு சர்ச்சைக்குரியது என தெரிவித்துள்ளபோதும், சுற்றாடல் அதிகார சபை தமது செயற்பாடுகளை இன்னும் வினைத்திறனுள்ளதாக மாற்ற வேண்டும் என்பதில் கருத்தொருமைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

பிளாஸ்டிக்கை 'நெகிழி' என்று தமிழில் அழைக்கின்றனர். தமிழக சூழலில் சவ்வுத்தாள் எனவும் இது அழைக்கப்படுகின்றது.

பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் கழிவுகள் மக்குவதில்லை. அழுகுவதுமில்லை. ஓரிடம் விட்டு இன்னொரு இடத்திற்குப் பரந்தாலும் மண் மேல் ஒட்டிக் கிடந்து மழை நீரை உள் இறங்கவிடாமல் தடுக்கின்றன.

பேரூந்துகளில், பஸ் தரிப்பிடங்களில், ரயில் நிலையங்களில், பொது இடங்களில் அருந்தி விட்டு வீசியெறியும் பிளாஸ்டிக் போத்தல்கள் கடந்த பத்தாண்டுகளில் வெள்ளம் போல் பெருகி வருவதைக் காணலாம். கொழும்பிலிருந்து புத்தளம் வரையிலான சுமார் 160 கி.மீ. தொலைவில் பாதையின் இரு மருங்கிலும் பிளாஸ்டிக் போத்தல்கள் குவிந்து கிடக்கின்றன. கண்டி-கொழும்பு வீதியில் வீதியை குறுக்கறுத்து ஓடும் ஆறுகளில் மரம் வளர்ந்திருக்கும் பகுதிகளில் எண்ணற்ற பிளாஸ்டிக் போத்தல்களும் பொலித்தீன் பைகளும் குவிந்து கிடக்கின்றன.

யாருக்கு மரணம் உண்டோ இல்லையோ பிளாஸ்டிக் போத்தல்களுக்கும் பொலித்தீன்களுக்கும் மரணம் இல்லாப் பெரு வாழ்வு உண்டு. இயற்கை அளிக்கும் மழைநீர் பூமிக்குள் செல்வதை பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் தடுக்கின்றன. காகிதங்கள், காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளிட்ட கழிவுகளை பூமியில் போட்டால் அவை பூமியை விட்டு நீங்க ஒரு மாதம் முதல் இரண்டு மாதங்கள் வரை ஆகும்.



பிளாஸ்டிக் கேன்கள் மக்குவதற்கு 80 முதல் 200 ஆண்டுகள் செல்கின்றன. பிளாஸ்டிக் பைகளைப் போட்டால் 50 முதல் 100 ஆண்டுகளும் பிளாஸ்டிக் போத்தல்கள் மக்குவதற்கு 1 மில்லியன் ஆண்டுகளும் செல்கின்றன.

| | |
|---|---|
| சீனா | 8.82 |
| இந்தோனேசியா | 3.22 |
| பிலிப்பைன்ஸ் | 1.88 |
| வியட்நாம் | 1.83 |
| இலங்கை | 1.59 |
| தாய்லாந்து | 1.03 |
| எகிப்து | 0.97 |
| மலேசியா | 0.94 |
| நைஜீரியா | 0.85 |
| பங்களாதேஷ் | 0.79 |
| தென்னாபிரிக்க | 0.63 |
| இந்தியா | 0.60 |
| அல்ஜீரியா | 0.52 |
| துருக்கிய | 0.49 |
| பாகிஸ்தான் | 0.48 |
| பிரேஸில் | 0.47 |
| பர்மா | 0.46 |
| மொரோக்கோ | 0.31 |
| வடகொரியா | 0.30 |
| அமெரிக்கா | 0.28 |

இலங்கையில் கடந்த பத்தாண்டில் போத்தலில் அடைக்கப்பட்ட நீர் பெருமளவு பரிமாறப்படுகின்றது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் மிக அபூர்வமாகவே தண்ணீர் போத்தல்களை காணக் கிடைத்தன. இன்று சர்வ சாதாரணமாக எல்லா இடங்களிலும் அருந்திவிட்டு வீசப்படும் வெற்று போத்தல்கள் மலை போல் குவிந்திருப்பதைக் காணலாம். இலங்கையின் நகர பஸ் தரிப்பு நிலையங்கள் இதற்கு சிறந்த உதாரணம். பஸ் தரிப்பு நிலையங்கள் மட்டுமன்றி, பயணப் பேரூந்துகளின் இரண்டு பக்கங்களிலுமுள்ள கம்பித் தட்டில் எக்கச்சக்கமான பிளாஸ்டிக் போத்தல்கள் குவிந்து கிடக்கின்றன.

பிளாஸ்டிக் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரை அருந்துவது உடலுக்கு தீங்கானது என்பது மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும், இலங்கையில் போத்தலில் அடைக்கப்பட்ட நீரை விற்பனை செய்வதற்கான உரிமத்தை சுகாதார அமைச்சே வழங்கியுள்ளது.

பிளாஸ்டிக் பொருட்களை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யும்போதும் மறுசுழற்சி செய்யும்போதும், அவை உருகும் போதும் வெளியேறும் வாயுக்கள் நச்சுத் தன்மை உடையன. சுவாசிக்கின்ற ஊழியர்கள், அருகில் வசிக்கும் மக்கள் தோல் நோய் முதல் புற்று நோய் வரை பல்வேறு நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.

மூச்சுக் குழாய் பாதிப்பு, குடல் புண், செரிமானமின்மை, நரம்புத் தளர்ச்சி, ரத்த சிறுநீரகச் செயல் குறைபாடு, நோயெதிர்ப்பு ஆற்றல் குறைபாடு போன்ற பல்வேறு தாக்கங்கள் உண்டாகின்றன. பிளாஸ்டிக் பொருட்களை எரிப்பதால் டயொக்ஸின் எனும் நச்சுப் புகை வெளிவருகின்றது. அது உடல் ஆரோக்கியத்திற்கு மிக ஆபத்தானது. பொலித்தீன் உறைகளால் சுத்தப்பட்டு வரும் உணவுப் பொருட்களான சொக்லெட், பால்கோவா போன்றவற்றில் பொலித்தீன் வேதிப்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# எமது சிந்தனைகள் மாற வேண்டும்

இலங்கை முஸ்லிம்களாகிய நாம் எமது சிந்தனைகளை குறித்த வரையரையொன்றிற்குள் சுருக்கி விடக் கூடாது. நாம் சிறுபான்மையினம் என்ற அடிப்படையில் சிந்திக்கக் கூடாது. இந்நாட்டின் சக பிரஜைகள், இலங்கையர்கள் என்ற அடிப்படையில் சிந்திக்க வேண்டும். அது எமது நடத்தைகளில் தெரிய வேண்டும். எல்லாப் பிரச்சினை களின் போதும் நாம் முன்னிற்க வேண்டும். நாட்டில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் பொழுது ஒரு சாராரை சாடை காட்டும் சமூகமல்ல நாம். நாட்டு மக்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றும் சமூகம்.

எமது கல்வி முறையில் பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் சிங்களப் பாடசாலை, தமிழ் பாடசாலை, முஸ்லிம் பாடசாலைகள் என்பதாகப் பிரிந்துள்ளன. அது எமது அடையாளத்தை பாதுகாப்பதற்குரிய அமைப்பாக இருந்த போதிலும் சமூகத்தில் எல்லோரும் குறுக்கிடும் வகையில் சகல சமூகங்களையும் உள்ளடக்கியதொரு கலப்புப் பல்கலைக்கழகங்களைப் போன்று பாடசாலை களும் அமையப்பெற்றால் வெகு தூரத்திற்கு எமக்கு மத்தியிலான சந்தேகப் பார்வைகள், அந்நியத் தன்மைகள் இல்லாமல் போகும். இது எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி கல்வியலாளர்கள் சிந்திக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது.

நாம் ஒருவருக்கு நபி(ஸல்) அவர்கள் பற்றிய புத்தகமொன்றை அன்பளிப்புச் செய்து, அதன் மூலம் நபியவர்கள் இப்படித் தான் வாழ்ந்தார்கள், அல்லாஹ்வின் தூதர் இப்படித்தான் இருந்தார்கள் என்ற ரீதியில் சொல்ல முனைவதைக் காட்டிலும் நபியவர்களுடைய முன்மாதிரி களை எமது வாழ்க்கைக்கூடாக அடுத்தவர்களுக்கு விளங்கும் அமைப்பில் வாழ்ந்து காட்ட வேண்டியதே நல்லது என நான் கருதுகின்றேன்.

அந்த வகையில் எமது பள்ளிவாயல்கள் முன்மாதிரியாக அமைய வேண்டும். இஸ்லாத்தில் நாம் பிறப்பால் முஸ்லிம்களானோம் என்பதற்கு அடுத்தவர்களிடமிருந்து தூரமாகி ஒரு வரையறைக்குள் வாழ வேண்டியதில்லை. இஸ்லாம் எமக்கு அவ்வாறு கூறவில்லை. எமது பள்ளிவாயல்கள் கூட சமூக மட்டத்தில் வெளிப்படை யானதாக அமைதல் வேண்டும். பள்ளிவாயல்களில் ஐந்து நேரம் போய்த் தொழுதோம், முடித்தோம், மூடிவிட்டோம் என்று இருக்காமல், ஏனையவர்களுக்கும் முஸ்லிம்களின் பள்ளிவாயல் தொடர்பில் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் அமைய வேண்டும்.

நபியவர்கள் வாழ்ந்த காலத்தில் வெளிநாட்டுத் தூதுவர்களை பள்ளிவாயலில் சந்தித்தார்கள். அப்போது பள்ளிவாயல்கள் சமூக மத்திய நிலையங்களாக (Social Centre) காணப்பட்டன. எல்லாப் பள்ளிவாயல்களும் இவ்வகையிலேயே அமைய வேண்டும் என்பதை பற்றி சிந்திக்கக் கூடிய காலமே இது.

எமது நடத்தைகள், எமது பாடசாலைகள், எமது பள்ளிவாயல்கள் எல்லாவற்றிற்கூடாகவும் நாம் யார் என்கின்ற செய்தியை அடுத்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நாம் தனிமைப்பட்டு ஒரு வரையறைக்குள் முடங்கிக் கிடக்கும் சமூகமாக இருக்கக் கூடாது. இது சிந்திக்க வேண்டிய காலம்.

இலங்கையில் பெரும்பாலான இடங்களில் பள்ளிவாயல் கள் பெரிதாகக் கட்டப்பட்டுள்ளன. இருந்த போதிலும் பெண்களுக்கான தொழுகை இடங்கள் பிரத்தியேகமாக சிறியதொரு இடத்தில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. சமூகத்திற்கு நாம் ஏன் வேறுபாட்டை காட்ட வேண்டும். பெண்களை நாம் ஏன் இரண்டாம் பட்சமாக மதிக்க வேண்டும். பெண்களுக்கும் கௌரவமான அமைப்பில் ஒரு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஏனைய சமூகங்கள் எம்மை பற்றி தவறாகப் புரிந்துகொள்ளும் வகையில் வேறுபாட்டை காட்டக் கூடாது. மார்க்க அறிஞர்கள் இது பற்றி சிந்திக்க வேண்டும்.

நோன்பு காலங்களில் ஜனாஸா தொழுவதற்கு நகர்ப் புறங்களிலுள்ள பள்ளிவாயல்களுக்கு பெரும்பாலானவர்கள் தங்களது வாகனங்களை வீதிகளில் நிறுத்தி விட்டு தொழுகைக்காக ஓடுகிறார்கள். இது சிறியதொரு விடயம். ஆனாலும் இதற்கூடாக நாம் சமூகத்திற்கு ஒழுக்கமற்ற சமூகம் என்னும் தவறான செய்தியையே வழங்குகிறோம்.

ஆடம்பரத்திற்காக, அடுத்தவர்களுக்கு காண்பிப்பதற்காக பள்ளிவாயல்களுக்கு முன்னாலுள்ள வீதிகளில் சிலர் வாகனங்களை நிறுத்திச் செல்வார்கள். பொலிஸில் பிடிபடும்போது எவ்வளவாவது கொடுத்து நிலைமையை சமாளிப்பார்கள். பல விடயங்களில் எமது சமூகத்தினர் குறுகிய வழிமுறைகளுக்கூடாக நிலைமையை சமாளிப்பவர்கள் என்கின்ற மனப்பதிவு அடுத்த சமூகத்திற்கு மத்தியில் உள்ளது.

எமது நடத்தைகள் தொடர்பில் மீளச் சிந்திக்க வேண்டும். அப்போது இஸ்லாம் தொடர்பில் நல்லதொரு புரிதலும் கௌரவமும் அடுத்த சமூகத்தினரிடம் ஏற்படும்.

# பள்ளிவாசலில் மினாராக்கள்...

லபீஸ் ஷஹீத்



அண்மையில் லைன் பள்ளியில் கட்டப் பட்டு வரும் மினாராக்களை அகற்றுமாறு சிங்க'லே' இனவாதிகள் ஆர்ப்பாட்டம் செய் ததை அடுத்து, சிறுபான்மை முஸ்லிம் வாழ் வமைப்பு குறித்தும், மஸ்ஜித்களின் கட்டிடக் கலை அலங்காரங்கள் குறித்தும் சமூக ஊடகங் களில் மெல்லமாய் ஒரு விவாதம் கிளம்பி யுள்ளது.

சிலர் பள்ளிவாசல் மினாராக்கள் என்ப வையே இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) காலத்தில் இல்லாத நூதன அனுஷ்டானங்கள் -பித்ஆ- ஆகவே அவற்றை நாம் முற்றிலும் தவிர்ந்து கொள்ள வேண்டும் என்றும், வேறு சிலர் மினாராக்கள் அமைப்பதற்கான பொரு ளாதார செலவீனங்களையும் முஸ்லிம் சமூகத் தின் வறுமை பிரச்சினையையும் ஒப்பிட்டு அதனடிப்படையில் இவற்றை பேச வேண் டும் என்றும் கூறுகின்றனர்.

எல்லாவிதமான உரையாடல்களையும் தொகுத்துக் கொண்டுதான் தீர்வு பற்றி சிந் திக்க வேண்டும் என்பதால், இந்த முரண் உரை யாடல்கள் பற்றி நாம் கரிசனத்தில் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை மறுப்பதற் கில்லை.

இறைத்தூதர் அவர்கள் மஸ்ஜித்களின் கட்டி டக்கலை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எந்த வரையறைகளையும் முறைமை களையும் நியமனம் செய்யவில்லை. அல் குர்ஆன் மற்றும் ஹதீஸ்களில் இது பற்றிய வெளிப்படையாகவோ அல்லது மறைமுக மாகவோ எந்தக் கட்டளையும் சார்ந்த சுட்டல் கள் இல்லை. இவற்றை இஸ்லாம் மனித அனுபவத்திற்கு என்று விட்டு வைத்துள்ளது.

மனிதனுக்கு இயல்பாக இருக்கும் சிருஷ்டி கர ஆற்றல், அழகுணர்ச்சி போன்றவற்றை இஸ்லாம் மறுக்கவில்லை. எனவே கட்டிடக் கலை அலங்காரங்கள் தொடர்பில் ஒவ்வொரு பண்பாடும், கலாச்சாரமும் அவற்றுக்கு என்று இருக்கும் பிரத்யேகமான வடிவங்களை கையாளலாம். இது தொடர்பில் எந்த பிரச்சி னையும் இல்லை. இதனால்தான் இஸ்லாம் அழுத்தமாக வேரூன்றிய அரேபியா, துருக்கி, பாரசீகம், வட ஆப்பிரிக்க, மத்தியாசியா போன்ற பிராந்தியங்களில் அவையவையிற் கென்றே தனித்துவமான கட்டிடக்கலை மரபு கள் உள்ளன.

இந்த முஸ்லிம் பண்பாட்டின் மத்திய நிலையங்கள் வீழ்ச்சியுற்றாலும் அந்த கட்டிடக் கலை சார்ந்த வடிவங்களை இன்றும் நாம் குறிப்பிட்ட பகுதிகளில் காணலாம். பாரசீகத் திலும், துருக்கியிலும் ஓங்கி உயர்ந்திருக்கும் இறையில்லங்கள் முஸ்லிம் கட்டிடக்கலை யின் சிறப்புக்கு சாட்சி. அந்தலூஸ் - முஸ்லிம் ஸ்பெயின் - நாகரீகத்தின் கட்டிடக்கலை அலங் காரங்களை இன்னும் நவீன ஸ்பெயின் முற்றிலும் உதறித் தள்ளிடவில்லை.

உண்மையில் இந்த கட்டிடக்கலை மரபினை இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்பி யல்பாக கொள்ள முடியுமா, அல்லவா என்று முஸ்லிம் புலமைத்துவ வட்டாரங்களில் ஒரு விவாதம் இருக்கிறது. மௌலானா மௌதூதி யின் கருத்தில் இந்த கட்டிடக்கலை அலங் காரங்கள் சார்ந்த விடயங்களை இஸ்லாமிய நாகரிகத்தின் சாதனையாக கொண்டிட முடி யாது. ஆனால் அல்லாமா ஷிப்லி நுஃமானி, பேராசிரியர் ஸெய்யித் அமீர் அலி போன்ற வர்களின் கருத்தில் இந்த கட்டிடக்கலையும் நாகரிகத்தின் பேரங்கங்களில் ஒன்றே.

முஸ்லிம் கலைப் பண்பின் தூலமான அடையாளம் தான் இவர்களை பொறுத்தவரை யில் கட்டிடக்கலையும். பல்வேறு வகையான கலாச்சாரம், பண்பாடுகளை தனக்குள் உள் ளீர்த்த இஸ்லாத்தின் அகிலத்துவ பரந்து, நெகிழ்ந்த தன்மையையும் விசாலமான இஸ் லாத்தின் சமத்துவ நோக்கையுமே இந்த கட்டி டக்கலை சார்ந்த அடையாளங்கள் வெளிப் படுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆக பிரச்சினையின் தன்மை முஸ்லிம் கட்டிடக்கலையின் பண்பு எதுவென்பதல்லா மல் ஒரு சிறுபான்மை சமூகத்தின் உறுப்பி னர்கள் என்ற வகையில் எமது வாழ்வொழுங்கு அடுத்தவர்களை எந்தளவுக்கு அசௌகரியத் துக்குள் தள்ளுகிறது, பன்மைத்துவம் சார்ந்த பண்பாட்டுத் தகவமைப்பை உறுத்துகிறது போன்ற கோணங்களுக்குள் தான் நுழைய வேண்டும். இவற்றுடன் முஸ்லிம் சமூகத்தின் பொருளாதார பிரச்சினைகளையும், மினாராக் கள் அமைக்கும் செலவுகளையும் பற்றிய ஒப்பீடுகளையும் இணைத்துக் கொள்ளலாம்.

மஸ்ஜித்களுக்கு என்று ஒரு பிரத்யேக கட்டிடக்கலை அலங்காரம் இல்லையென்பதை நாம் ஒத்துக் கொள்ள முடிகிறது என்றாலும் நூற்றாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வரும் ஒரு பண்பாட்டம்சத்தை நாம் கை விட்டு விட வேண்டும் என்று கோருவது எந்த விதத்திலும் நியாயமானதல்ல. முஸ்லிம் சமூகத்தின் இருப்பு என்பதனை நாம் வெற்று உயிர் வாழ்க்கை என்று புரிந்து கொள்ள வேண்டுமா? கலாச்சாரம், பண்பாடு, உணவு மாதிரிகளை விட்டு விட்டால் எமது தனித்துவம் என்ன வாகும்?

உண்மையில் எமது வாழ்வமைப்பு சில சிக் கல்களை கொண்டது என்பதில் சந்தேகம் இல்லை. அவை தனியாக உரையாடப்பட வேண்டியவை. ஆனால் யுத்த வெற்றிக்குப் பிறகான பெரும்பான்மை வாதமும், உலகளா விய அரசியல் பிரச்சினையான இஸ்லாம் போபியாவும் இணைந்து உருவாக்கியுள்ள 'அந்நியர் குறித்த அச்சம்' பற்றியே நாம் முன்னுரிமை அளித்து விவாதிக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் வாழ்ந்து வரும் நிலையில், மிக அண்மைய அரசியல் தோற்றப் பாடான இனவாதத்தை வைத்து ஆயிரம் ஆண்டு கால பண்பாட்டுத் தொடரை குற்றத் தன்மை கொண்டதாக மாற்றுவது எந்த வகை யிலும் நீதியானதல்ல. உண்மையில் சக வாழ் வுக்கு எதிரானது இந்த பெரும்பான்மை யினரின் இனவாதமே என்பதை பொதுச் சமூகத்தில் பரப்புவதன் ஊடாகவே நாம் இந்த நெருக்கடியை வென்று வர வேண்டும். சாத்தி யமான வழிமுறையும் அதுதான்.

குறிப்பு - மினாராக்களை அமைப்பதன் பொருளாதார செலவினங்களை முஸ்லிம் சமூகத்தின் வறுமையை ஒழிக்க பயன்படுத்த லாம் என்பது ஒரு நேர்த்தியான அணுகுமுறை கொண்ட வாதமே. ஏனெனில் மினாராக்கள் முஸ்லிம் பண்பாட்டின் அம்சங்களில் ஒன்று தானே தவிர இஸ்லாமிய ஷரீஆவின் ஒரு பகுதி யல்ல. கால, இட, பரிமாணங்களை கணக்கில் கொண்டு இந்த பிரச்சினைகளை நாம் பேசிட வேண்டும்.

# ஒட்டுண்ணிகளின் சொகுசு வாகன விளையாட்டு




தமிழில்: அபூபத்ஹான்

ஜனவரி 08 மற்றும் ஆகஸ்ட் 17 ஆகிய தினங்களில் தம்மை அதிகாரத்திற்கு கொண்டு வந்த பொதுமக்களுக்கு நல்லாட்சி அரசாங்கம் அன்று தொடக்கம் இன்று வரை அவமானத்தை ஏற்படுத்தியது ஓரிரு தடவைகள் அல்ல.

அந்தப் பொதுமக்களுக்கு ஏற்படுத்திய மிகப் பிந்திய அவமானம் 1.1 பில்லியன் ரூபாய் பெறு மதியான ஆடம்பர வாகனங்கள் தொடர்பான சம்பவமாகும்.

அமைச்சர்கள் சாதாரண நிலையிலான வசதி மிக்க வாகனங்களைப் பயன்படுத்துவது குறித்து நாட்டு மக்கள் அந்தளவு எதிர்ப்புக் காட்டுவார் கள் என எண்ண முடியாது. தமது பணியின் அளவுக்கு ஏற்ப அவ்வாறானவர் களுக்கு வசதி மிக்க வாகனமொன்றைப் பயன் படுத்துவதற்கு உள்ள சந்தர்ப்பத்தைப் பறிக்க யாரும் தயாராக மாட்டார்கள். எனினும், பிரச்சினை அதுவல்ல.

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தைத் துரத்து வதற்கு எடுத்துக் காட்டப்பட்ட ஒரு காரணம் தான் தமது சொகுசுக்காக பொதுமக்களின் பணத்தைக் கொள்ளையடித்து அவர்கள் செயற் பட்ட முறையாகும். உதாரணமாகக் கூறின், அமைச்சர் பசில் ராஜபக்ஷ தனக்கிருந்த உ... மேலதிகமாக மேலும் அதிசொகுசான, குண்டு துளைக்காத பதிநான்கு வாகனங்களைப் பயன்படுத்தினார். அவ்வாறான கிரிமினல் குற்றத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதனாலேயே நாட்டின் பெரும்பாலான மக்கள் இந்த ஒட்டுண்ணிகளை சிம்மாசனத்திலிருந்து துரத்தியது தொடர்பாக இன்னும் பெருமைப் படுகின்றனர்.

ஒரு புறம் பொதுமக்களுக்குத் தமது வாழ்க் கைச் செலவைத் தாங்கி கொள்ளுமாறு கூறிக் கொண்டு, மறுபுறம் தமது சொகுசுக்காக பொது மக்களின் பணத்தை ஈடுபடுத்துவதன் மூலம் ராஜபக்ஷ முறைமையிலான இழிவான ஒரு முயற்சியில் தற்போது நல்லாட்சி அரசாங்கமும் ஈடுபட்டுள்ளதாகவே தெரிகிறது.

உண்மையில் அரசாங்கம் பொருளாதார சிக்க லொன்றில் மாட்டிக் கொண்டுள்ளது. அதற்காக செலவுகளைக் குறைக்க வேண்டியிருப்பதோடு, வருமானங்களை அதிகரித்துக் கொள்ள வேண்டி யுள்ளது. அவ்வாறு நாட்டின் செலவுகளைக் குறைப்பதற்கும், வருமானங்களை அதிகரித்துக் கொள்வதற்காகவுமே அரச உத்தியோகத்தர்களு க்கு ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை கிடைக் கும் வரையறுக்கப்பட்ட தீர்வை வரியுடன் கூடிய வாகன அனுமதிப் பத்திரத்தினை அரசாங்கம் இடைநிறுத்தியது.

... வரவு-செலவுத் திட்டத்தின் பின்ன ரான காலப்பகுதியினுள் அரசாங்கம் பல்வேறு வரிகளைத் தொடர்ச்சியாக அதிகரித்தது. வெட் வரியை நூற்றுக்கு 11 இலிருந்து 15 வரை அதிகரித்தமையும், சில துறைகளுக்குப் புதிதாக வெட் வரி விதிக்கப்பட்டமையும் காரணமாக குறிப்பிடத்தக்க பொருளாதார சிக்கலில் பொது மக்கள் தள்ளப்பட்டனர். எவ்வளவு தான் இல்லை என்று கூறினாலும், சாப்பாட்டுப் பார்சல் வரை இந்த வெட் அதி கரிப்பு கீழ் நோக்கி வந்துள்ளது.

வெட் வரி அதற்குரிய பொருள், சேவை வகைகளுக்கு மாத்திரம் அறவிடப்படுகிறதா, அல்லது அதில் உள்ளடங்காத பொருள் சேவைகளுக்கும் வர்த்தகர்களினால் அற விடப்படுகிறதா என்பதைத் தேடிப் பார்ப்பதற் காவது அரசாங்கத்திடம் ஒரு பொறிமுறை யைக் காணக் கிடைக்கவில்லை. தொலைபேசி தொடர்பாக அதிகரிக்கப்பட்ட வரிகளுக்கு நாட்டின் குறிப்பிடத்தக்களவான இளைய தலைமுறையினர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அத்தோடு, மூலதன வரியும் அமுலாக ஆரம் பித்துள்ளது.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை முஸ்லிம்களிடையே நிலைத்திருக்கக்கூடிய ஒரு சமூக உணர்வும் அடையாளமும் கட்டியெழுப்பப்பட வேண்டும்


## ஆதம்பாவா சர்ஜூன்

விரிவுரையாளர், அரசறிவியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்


ஆதம்பாவா சர்ஜூன் அவர்கள் அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை கமு/அட்டப்பள்ளம் விநாயகர் வித்தியாலயத்திலும், இரண்டாம் நிலை மற்றும் உயர்நிலைக் கல்வியை கமு/அல்-அஷ்ரப் தேசிய பாடசாலையிலும் கற்றுள்ளார். தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் (B.A) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் முதுமாணிப் பட்டத்தையும் (M.A) கொழும்பு பல்கலைக்கழகத்தில் தத்துவ இளமாணி (M.Phil) பட்டத்தையும் பிரித்தானிய பிராட்போர்ட் (Bradford) பல்கலைக்கழகத்தில் இரு வருட பட்டமேற்படிப்பு டிப்ளோமாவையும் பூர்த்தி செய்துள்ளார்.

கடந்த 14 ஆண்டுகளாக பல்கலைக்கழக விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் இவர், ஆரம்பத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி, தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார். முஸ்லிம் அரசியல் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ள விரிவுரையாளர் சர்ஜூன் அவர்கள், தற்போது மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தில் கலாநிதிக் கற்கைக்கான ஆய்வினை மேற்கொன்டுவருகிறார்.

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

- **அரசியல் துறையில் உங்களது நூல்கள், ஆக்கங்கள் பற்றி குறிப்பிடுங்கள்**

இதுவரை இரண்டு நூல்கள் வெளியிட்டிருக்கிறேன். 'அரசியலுக்கோர் அறிமுகம்' மற்றும் 'சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள்' என்பவை அவை. உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயனுள்ள நூல்கள் இவை. இதுவரை சர்வதேச தரத்திலான 16 ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மேலும் பல கட்டுரைகளும் வெளியிட்டிருக்கிறேன். அதிகமானவை முஸ்லிம் சமூகப் பிரச்சினைகள் மற்றும் முஸ்லிம் அரசியல் சார்ந்த விடயங்களாக உள்ளன. இன்னும் பல நூல்களுக்கும் கட்டுரைகளுக்குமான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

- **முஸ்லிம்களின் அரசியல் குறித்த பல ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டுள்ளீர்கள். அதில் முஸ்லிம் சுயாட்சி குறித்த ஆய்வொன்றை முதுமானிப் பட்டத்திற்கு சமர்ப்பித்துள்ளதாக அறிகிறோம். அவ்வாய்வு பற்றி சற்று குறிப்பிட முடியுமா?**

உயர் கல்வி மட்டத்திலான எனது ஆய்வுகள் எல்லாமே முஸ்லிம் அரசியல் சார்ந்தனவாகவே உள்ளன. எனது இளமானிப் பட்டத்துக்காக 'முஸ்லிம் அரசியலில் அஷ்ரப்பின் தலைமைத்துவம்' குறித்து ஒரு விமர்சன பகுப்பாய்வினைச் செய்திருந்தேன். அஷ்ரப் குறித்த ஆரம்ப கால ஆய்வுகளில் இது முக்கியமானது.

அஷ்ரப்பின் முழு வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் முஸ்லிம் அரசியலில் அவரது தலைமைத்துவத்தின் தாக்கம் பற்றியும் பேசுகிறது. எனது M.Phil பட்டத்துக்காக 'முஸ்லிம் சுயாட்சிக் கோரிக்கை' பற்றிய ஆய்வினை மேற்கொண்டேன். முஸ்லிம் சுயாட்சி குறித்த முதலாவது ஆழமான ஆய்வு இது எனக் குறிப்பிடலாம்.

இவ்வாய்வு முஸ்லிம் சுயாட்சிக் கோரிக்கை தோற்றம் பெற்றதற்கான காரணிகள், முஸ்லிம் சுயாட்சிக் கோரிக்கையின் மாறிச் சென்ற வளர்ச்சிப் போக்கு (changing dynamics) சமாதான செயன்முறையில் அக்கோரிக்கை உள்வாங்கப்பட்ட விதம் (nature of accommodation), தொடர்ந்தேர்ச்சையாக முஸ்லிம் சுயாட்சிக் கோரிக்கை விமர்சனத்துக்கு உள்வாங்கப்பட்டு புறமொதுக்கப்படுவதற்கான காரணிகள் என பல விடயங்களைப் பற்றி பகுப்பாய்வு செய்கிறது.

முஸ்லிம் சுயாட்சி எனும் விடயம் முறையான வகையில் எண்ணக்கருப்படுத்தப்படவில்லை. பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு வடிவங்களில் முன்வைக்கப்பட்டிருக்கிறது என்பதும், முஸ்லிம் சுயாட்சிக்கான அரசியல் வழக்காடல் (political advocacy) தொடர்ச்சியானதாகவும் போதுமான வகையிலும் இருக்கவில்லை, அது தேர்தலை மையப்படுத்தியதாக இருந்தது என்பதும், அஷ்ரபுக்கு பின்னரான முஸ்லிம் அரசியலின் உடைவு (fragmentation / split) அதன் அரசியல் வழக்காடல் ஆற்றலையும் சமாதான செயல்முறைக்குள் உள்வாங்கப்பட்டு பரிசீலிக்கப்படுவதையும் மிகவும் பலவீனப்படுத்தியது என்பதும், போருக்குப் பின்னரான கிழக்கின் புதிய அரசியல் சூழ்நிலை முஸ்லிம் சுயாட்சியின் தேவையை கேள்விக்குறியாக்கி நிற்கிறது என்பதும், ஆனால் கிழக்கில் இன்னும் முஸ்லிம்களிடையே சுயாட்சிக்கான அவா உள்ளது என்பதும் இந்த ஆய்வினூடாக கண்டுகொள்ளப்பட்டது. இது 2013 இல் முடிக்கப்பட்ட ஓர் ஆய்வு. தற்போதைய நிலமைகளில் சற்று வேறுபாடு காணப்படலாம்.

- **சுயாட்சி கோரியதொரு சமூகம் ஆயுத ரீதியில் தோற்கடிக்கப்பட்டுள்ளது. பல்லின மக்கள் வாழும் இலங்கை சூழலில் நல்லிணக்கம் குறித்த கதையாடல்கள் வலுத்து வரும் இவ்வேளையில், முஸ்லிம் சுயாட்சிக் கோரிக்கை எந்தளவுக்குச் சாத்தியப்படும்?**

பல்லின குழுக்களிடையே அதிகார முரண்பாடும் போராட்டமும் வலுவடையும்போது நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பேணிக் கொண்டு முரண்பாட்டை தீர்ப்பதற்கான வழிமுறைகளாக சமஷ்டி, சுயாட்சி, அதிகாரப் பரவலாக்கம் போன்றன சர்வதேச அளவில் கையாளப்படுகின்றன. இலங்கையிலும் அம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஆனால் இலங்கை விடயத்திலுள்ள பிரதான பிரச்சினை என்னவெனில், மேற்படி எண்ணக்கருக்கள் தவறாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கின்றமையாகும். எல்லா சமூகத்திலுள்ள அரசியல்வாதிகளும் தலைவர்களும் மக்களிடத்தில் மேற்படி எண்ணக்கருக்களை தவறான வடிவத்திலேயே கொண்டு சேர்த்திருக்கிறார்கள். சுயாட்சி என்பது தனிநாட்டுக்கான வழி என எல்லோரும் புரிந்திருக்கிறார்கள். இது தவறானது. முதலில் அவ்வெண்ணக்கருக்கள் நாட்டைப் பிரிப்பதற்கானவைகள் அல்ல என்பதை ஏற்றுக் கொண்டால்- அவை வேற்றுமையிலும் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகள் என்பதில் தெளிவு ஏற்பட்டால் வடகிழக்கு முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல இந்த நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார மட்டத்தில் மிகவும் பின்தங்கியிருக்கின்ற மலையக மக்களுக்கும் வட-கிழக்கிலே வாழ்கின்ற சிங்கள மக்களுக்கும் அவர்களை பலப்படுத்துவதற்காக சுயாட்சி அலகுகளை ஏற்படுத்த முடியும். அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்தில் சமஷ்டி மற்றும் சுயாட்சி குறித்த தெளிவான புரிதல்கள் போருக்குப் பின்னரான அரசியல் தீர்வு விடயத்தில் முக்கியத்துவமிக்கனவாகவுள்ளன.

- **கல்முனை அல்லது கரையோர நிர்வாக மாவட்ட கோரிக்கை பற்றி நீங்கள் மேற்கொள்கின்ற ஆய்வின் உள்ளடக்கத்தை சுருக்கமாக குறிப்பிட முடியுமா?**

எனது கலாநிதி பட்டத்துக்காக கல்முனை நிர்வாக மாவட்டக் கோரிக்கையைப் பற்றி ஆழமாக ஆய்வு செய்துகொண்டிருக்கிறேன். கிட்டத்தட்ட முடியும் கட்டத்தில் உள்ளது. அம்பாறை மாவட்டத்தின் கரையோரத்திலுள்ள தமிழ்பேசும் மக்கள் விசேடமாக முஸ்லிம்கள் தனியான நிர்வாக மாவட்டம் ஒன்றைக் கோரத் தூண்டிய காரணிகள், அக்கோரிக்கை எதிர்நோக்கி நிற்கும் சவால்கள், புதிய அம்மாவட்டத்தை உருவாக்குவதிலுள்ள சவால்கள், பிரச்சினைகள் மற்றும் மாவட்டம் உருவாக்கப்படுவதால் ஏற்படும் சாதக பாதகங்கள் என்பனவற்றை இவ்வாய்வு ஆராய்கிறது.

முஸ்லிம் சுயாட்சிக் கோரிக்கை போன்றதே கல்முனை அல்லது கரையோர மாவட்டக் கோரிக்கையும். அஷ்ரபிற்குப் பின்னரான அரசியலில் இக்கோரிக்கை பிரபல்யம் பெற்றது. ஆனால் முறையற்ற அல்லது தவறான எண்ணக்கருவாக்கலாலும் (அதாவது முஸ்லிம் பெரும்பான்மை மாவட்டம் எனக் கோருவது) போதியளவு அரசியல் ஆதரவு மற்றும் வழக்காடல் (advocacy) இல்லாமை என்பனவற்றாலும் இக்கோரிக்கை பல்வேறு எதிர்ப்புக்களையும் சவால்களையும் சந்தித்ததுடன் தொடர்ச்சியாக புறமொதுக்கப்பட்டும் வந்திருக்கிறது.

முஸ்லிம் அரசியலைப் பொறுத்தவரை மிகவும் உணர்வுபூர்வமான ஒரு விடயமாக இக்கோரிக்கை இருந்து வருகின்ற போதிலும் முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்கு, குறிப்பாக SLMC தலைவர்களுக்கு இம்மாவட்டத்தை உருவாக்கிக் கொள்வதற்காக சாதகமான சந்தர்ப்பங்கள் பல உருவாகியிருந்த போதிலும் அவர்கள் அச்சந்தர்ப்பங்களை சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதே உண்மை.

உட்கட்சிப் பூசல்களும் பதவி, அதிகார மோகமும் இம்மாவட்டதை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை அக்கட்சியினரிடையே வலுவடையச் செய்து அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் தக்கவைத்துக் கொள்வதற்குமான ஓர் ஆயுதமாக கல்முனை மாவட்ட விவகாரத்தை மேலோங்கச் செய்திருக்கிறது. முஸ்லிம் சுயாட்சி கோரிக்கை போலவே இப்போது கல்முனை கரையோர மாவட்டம் பற்றி பேசுவதற்கு முஸ்லிம் அரசியல் வாதிகளுக்கு அவசியமில்லை. அதற்கு இன்னொரு தேர்தல் வர...

- **இலங்கை முஸ்லிம் சமூகம் குறித்த உங்களுடைய அவதானங்கள் எவ்வாறுள்ளது? இச்சமூகத்தில் எவ்வாறான மாற்றங்கள் நிகழ வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

இலங்கை முஸ்லிம்களிடையே நிலைத்திருக்கக்கூடிய ஒரு சமூக உணர்வும் அடையாளமும் கட்டியெழுப்பப்பட வேண்டும். நெருக்கடியான நிலைகளில் மட்டுமே இந்த உணர்வும் அடையாளமும் அவர்களிடம் தற்காலிகமாக உருவாகிறது. பின்னர் அவர்கள் பிரதேச ரீதியாகவும் அரசியல் சார்பு ரீதியாகவும் பிரிந்து சிந்திக்கின்றனர்; செயற்படுகின்றனர். இது முஸ்லிம்களது பல்வேறு பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வை காண்பதற்கு சவாலாக அமைகிறது.

உதாரணமாக, வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம்களைப் பற்றி கிழக்கிலோ அல்லது மற்றைய பகுதியிலோ உள்ளவர்கள் தற்போது அதிகமாக பேசுவதில்லை. அவர்களும் இலங்கை முஸ்லிம் சமூகத்தின் ஒரு பகுதியினர். கடந்த 25 வருடங்களுக்கு மேலாக உள்நாட்டில் அகதிகளாக வாழ்கிறார்கள். அவர்களது சொந்த, பாரம்பரிய மண்ணுக்கு திரும்புவது என்பது பெரும் போராட்ட மிக்கதாகவே உள்ளது.

ஆனால் இது குறித்த கவலை ஏனைய பகுதி முஸ்லிம்களிடம் தற்போது அதிகளவில் இல்லை. இது விடயத்தில் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் ஒற்றுமையற்றே செயற்படுகின்றன. இவ்விடயம் முஸ்லிம் சமூகத்தின் பொதுப் பிரச்சினையாக பார்க்கப்பட்டு அவர்களுக்காக குரல் கொடுக்கும் மனோநிலை முஸ்லிம் சமூகத்தில் வலுவாக்கப்பட வேண்டும்.

அவ்வாறே, மற்றய இனக்குழுக்களுக்கு தனித்துவமாய் அமைவதுபோன்ற பல விடயங்கள் முஸ்லிம் சமூகத்தில் இல்லாதிருக்கிறது. உதாரணமாக சொன்னால் கலாசார ஆடை அடையாளத்தை குறிப்பிடலாம். எல்லா தனித்துவமான இனக்குழுமங்களும் தங்களுடைய கலாசார விடயங்களை பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் முயற்சிக்கின்றன. கலாசார அம்சங்கள் ஓர் இனத்தின் அடையாளத்தை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்கை ஆற்றுகின்றன.

ஆனால் ஒரு தனியான இனமாக நிலைநிறுத்திக் கொள்வதில் பெரும் போராட்டத்தை எதிர்கொள்ளும் முஸ்லிம் சமூகம் தங்களுக்கென்று ஓர் அடையாள ஆடையை முன்னிலைப்படுத்துவதில் பின்நிற்கிறது. முஸ்லிம்களுக்கு ஓர் அடையாள ஆடைதான் இப்போதைய அவசியத் தேவை என்பது எனது உறுதியான வாதமல்ல. முஸ்லிம்கள் தங்களுடைய இனத்தின் அடையாளத்தை மற்ற இனத்தவர்களுக்கு

(பக்.14)

## எழுவாய், பயமிலை



அபூ ஷாமில்

# அனர்த்தம் உதவுவது போல...

'அடி உதவுவது போல அண்ணன் தம்பி கூட உதவ மாட்டார்கள்' என்று சொல்லுவார்கள். முஸ்லிம் சமூகத்தின் அண்மைக் காலச் செல்நெறியில் அனர்த்தங்கள் உணர்த்தியது போல வேறு எதுவுமே முஸ்லிம்களின் பலத்தை உணர்த்தவில்லை என்று தான் சொல்ல வேண்டும். அந்தளவுக்கு முஸ்லிம் சமூகத்துக்கு அனர்த்தங்கள் செய்த உதவிகள் அனந்தம்.

மஹிந்த ஆட்சியில் தாண்டவமாடிய பொதுபலசேனா அனர்த்தம் சிதைந்து போயிருந்த முஸ்லிம் சமூகத்தை கட்டியெழுப்பியது. சமூகத்துக்குள்ளால் உள்ள ஒவ்வொரு பிரிவினரையும் எதிரிகளாகப் பாவித்து வந்த சமூகத்துக்கு ஒரு பொது எதிரி கிடைத்து விட்டது. அரசியல், சமூகத் தலைமைகளைத் தாண்டி சமூகம் தன்னால் ஒன்றுபட்டது. ஒரு பாரிய அசுரனைத் தோற்கடித்து நாட்டின் போக்கையே முஸ்லிம் சமூகம் மாற்றிக் காட்டும் அளவுக்கு இந்த அனர்த்தங்களின் தாக்கம் பாதிப்புச் செலுத்தியது.

இன்றுடன் (ஜூன் 15) இரண்டு வருடங்களைப் பூர்த்தி செய்கின்ற அளுத்கமவின் கறுப்பு ஜூன் நிகழ்வுகள் அனர்த்தங்களின் விளைவுகளின்போது தொழிற்படுவதற்கு சமூகத்துக்கு பயிற்சியளித்தது. நாடு முழுவதிலும் இருந்து சமூகம் கொண்டு வந்து கொட்டிய உதவிகள் பாதிக்கப்பட்டவர்களை மெய்சிலிர்க்க வைக்கும் அளவுக்கு இருந்தன. முஸ்லிம் சமூகம் கொண்டு வந்து குவித்த உதவிகளால் ஆறு மாதங்களுக்கு மேலாகியும் தாம் தமது வாழ்க்கையை கொண்டு நடத்தியதாக ஒரு ஆசிரியை கூறியது நினைவுகூரத்தக்கது. அதே போல நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து அர்த்தமுள்ள வகையில் பங்கீடு செய்வதற்கு சமூகம் இதிலே பயிற்சி எடுத்தது. இதற்கென உருவாக்கப்பட்ட ADF நிறுவனம் இதில் பெரும் பங்காற்றியது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தமது சொந்தங்களைத் தாண்டி அடுத்த சமூகத்தினருக்கும் அல்லது தமக்கு எதிராகச் செயற்பட்ட சிலருக்கும் தமது நேசக்கரங்களை நீட்டுவதற்கு முஸ்லிம் சமூகம் பக்குவப்பட்டு சக்தி பெற்றிருப்பதை எடுத்துக் காட்டியிருந்தது. இன, மத, பிரதேச வேறுபாடுகளையெல்லாம் புறந்தள்ளி, நாடு என்ற வகையில் முஸ்லிம் சமூகம் முன்னின்று உழைத்தது. ஊடகங்களின் இருட்டடிப்புக்களையும் தாண்டி நிவாரணங்களால் பயன்பெற்றவர்களின் உள்ளங்களில் ஊடுருவும் அளவுக்கு இந்த அனர்த்தம் முஸ்லிம் சமூகத்துக்கு உதவியது.

கொஸ்கம ஆயுதக் களஞ்சிய வெடிப்பு அனர்த்தம் நடைபெற்ற போது முஸ்லிம் சமூகம் அனர்த்தங்களை சாதகமாக எதிர்கொள்வதற்கான தனது பக்குவத்தை எடுத்துக் காட்டியது. பாதுகாப்புக்காக தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறுமாறு உத்தரவு வந்தவுடன் எங்கே செல்வது, எப்படிச் செல்வது என்ற எதுவித நிலைப்பாடும் இன்றி மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். இருட்டில், மழையில் குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு பெண்களும் வயோதிபர்களும் பாதுகாப்புக்கான இடந்தேடி இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். பூகொட கிராமத்திலிருந்த முஸ்லிம் குடும்பங்கள் வெளியேறி வருகின்றன என்ற செய்தி கிடைத்ததுமே பக்கத்தில் இருந்த முஸ்லிம் கிராமங்கள் தயார் நிலைக்குத் தாவின.

பூகொடைக்கு அண்மையில் இருந்த மல்வானை மக்கள், வெள்ளப் பாதிப்பிலிருந்து தற்போதுதான் மீண்டு வருகின்ற நிலையிலும், பாதிக்கப்பட்டு வருபவர்களுக்காக பள்ளிவாசல்களையும் பாடசாலைகளையும் தயார்படுத்தி வைத்திருந்தார்கள். பக்கத்தில் இருந்த கஹட்டோவிட்ட, திஹாரிய, கல்எளிய மக்கள் இடம்பெயர்ந்து வருபவர்கள் போக்குவரத்துச் செய்வதற்கான வாகன ஒழுங்குகளில் ஈடுபட்டார்கள். இன்னும் சில இளைஞர்கள் வெறிச்சோடிப் போயிருந்த அந்த ஊரைப் பாதுகாக்கவென அந்த ஊரிலே இரவெல்லாம் விழித்திருந்தார்கள்.

இப்படிப் பல வழிகளிலும் பலரும் இந்த அனர்த்தத்தை எதிர்கொண்டார்கள். ஒவ்வொரு அனர்த்தமும் முஸ்லிம் சமூகத்துக்கு, அதனது இருப்புக்கு பல உதவிகளைச் செய்து வருகிறது. ஒவ்வொரு அனர்த்தங்களின் போதும் சமூகம் ஒருபடி முன்னேறிச் செல்கிறது. தன்னை ஒழுங்குபடுத்துவதில், நாட்டின் விவகாரங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில் அது முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களின் அடிவருடிகளும் முஸ்லிம் சமூகத்தை கொச்சைப்படுத்தும் விதமாக நடந்து கொண்டிருக்கையில் முஸ்லிம் சமூகம் தனது நல்ல பண்பாடுகளை ஆயுதமாக எடுத்து முஸ்லிம் சமூகத்தை தலைநிமிர்த்தும் போராட்டத்தில் இறங்கியிருக்கிறது. ஏனைய எல்லா வழிகளும் மூடப்பட்டாலும் நல்ல பண்பாடுகள் மூலம் முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் நல்லதொரு இடத்தைப் பிடிக்க முடியும் என இந்திய அறிஞர் அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் சொன்ன வார்த்தைகள் மெய்ப்பட்டு வருகின்றன.

வியாபாரத்தின் போது நல்ல பண்பாடுகளைக் காட்டியதன் விளைவினாலேயே முஸ்லிம் சமூகத்துக்கு சிங்கள மன்னர்களின் அரசாங்கத்தில் சிறந்த இடம் கிடைத்தது. மீண்டும் அதற்கான வாய்ப்பு மலர்ந்திருக்கிறது. இந்த நல்ல பண்பாடுகளை முஸ்லிம்களின் வியாபாரத்திலும், பேச்சிலும் நடத்தையிலும் தொடர்ந்து காட்ட முடியுமானால் ஒரு நல்ல நாகரிகத்தை நாட்டுக்கு வழங்கியவர்கள் என்ற பழம்பெருமையை மீட்டு, மீண்டும் தலை நிமிர்ந்து வாழ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குக்கரைக்கான நீர் விநியோகத்தை துண்டிக்கின்றது இஸ்ரேல்



புனித ரமழான் மாதத்தின் ஆரம்பத்திலிருந்தே மேற்குக்கரையின் சில பகுதிகளுக்கான நீர் விநியோகத்தை சியோனிஸ அரசு துண்டித்துள்ளதனால் பல்லாயிரக்கணக்கான மேற்குக்கரை மக்கள் குடிநீர் இன்றி அவதியுறுவதாக கவலை வெளியிடப்படுகின்றது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக்கரையின் பெரும்பாலான பகுதிகளுக்கு இஸ்ரேலின் தேசிய குடிநீர் கம்பனி தனது நீர் விநியோகத்தை நிறுத்தி வைத்துள்ளது. ஜெனின் நகரசபை உள்ளிட்டு நப்லூசை சூழவுள்ள பல கிராமங்களும் சல்பீத்தை சூழவுள்ள மேலும் பல கிராமங்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. பலஸ்தீன் நகரங்களுக்கும் மாநகரங்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யும் மிகப் பிரதானமான மெகொரட் கம்பனி விநியோகத்தை நிறுத்தியுள்ளது.

பலஸ்தீன் நீரியல் துறைத் தலைவர் ஐமன் ரபி இது குறித்து கருத்து வெளியிடுகையில் கடந்த 40 நாட்களாக சில இடங்களில் மக்கள் குடிநீரைப் பெறுவதற்கான வாய்ப்பு மறுக்கப்படுவதாகக் குறிப்பிட்டார்.

நாளொன்றுக்கு 10 லீற்றர் குடிநீர் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையாக உள்ளது. 40,000 மக்களைக் கொண்டுள்ள ஜெனின் நகரத்தில் அரை வாசிப் பேரே குடிநீரைப் பெறுகின்றனர். ரமழான் மாதத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப்பாட்டுக்கு குறிப்பிட்ட இக்கம்பனியே காரணம் எனக் கூறப்படுகின்றது.

1967 இலிருந்து காஸாவுக்கும் மேற்குக்கரைக்குமான குடிநீர் வசதியை இஸ்ரேல் கட்டுப்படுத்தி வருகின்றது. மேற்குக்கரையிலுள்ள ஒரு பலஸ்தீனர் ஒரு நாளைக்கு 60 லீற்றர் நீரைப் பயன்படுத்தும் அதேவேளை, இஸ்ரேலியப் பிரஜை 350 லீற்றர் தண்ணீரைப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.

# சர்வதேசப் பார்வை

# வன்முறையை இஸ்லாத்துடன் தொடர்புபடுத்த வேண்டாம்

**– ஒபாமா**



அமெரிக்காவில் நடைபெறும் வன்முறைச் சம்பவங்களுக்கும் இஸ்லாத்திற்கும் இடையில் எந்தத் தொடர்புமில்லை. குறிப்பிட்ட தனிநபர்களின் வன்முறை நடத்தைகளை ஒரு மதத்துடன் தொடர்புபடுத்துவது பாரிய பின்விளைவுகளையே கொண்டு வரும் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஒலாண்டோவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை ஜனாதிபதி வேட்பாளர் ட்ரம்ப் இஸ்லாமிய தீவிரவாதம் என வர்ணித்தமைக்கு ஒபாமா பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புச் சபையோடு பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஒபாமா ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டார். ஒலாண்டோ துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 49 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ISIS இயக்கத்துடன் தொடர்பான உமர் சித்தீக் மதீன் எனப்படும் நபரே துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் என கூறப்படுகின்றது.

ஏற்கனவே இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் வன்முறையோடு இணைத்து பிரச்சார மேடைகளில் சூடு பறக்கப் பேசி வரும் டொனால்ட் ட்ரம்ப், தற்போது நடந்து முடிந்துள்ள சம்பவத்தை தனது அரசியல் பிரச்சாரத்திற்கு சாதகமாய் பயன்படுத்தி வருகிறார். இத்தருணத்திலேயே ஒபாமாவின் கருத்து வெளிவந்துள்ளது.

ஜனாதிபதி ஒபாமா மேலும் கருத்து வெளியிடுகையில், கொலையாளி சமூகத்தில் விரக்திப்பட்ட, தீவிரவாத சிந்தனையால் பாதிக்கப்பட்ட ஓர் இளைஞன். அவருக்கென்று தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம். அதற்கும் இஸ்லாத்திற்கும் இடையில் தொடர்பில்லை. இஸ்லாத்திற்கு இவ்வாறு முத்திரை குத்துவதால் நடக்கப் போவது என்ன? அது ஏதேனும் மாற்றத்தைக் கொண்டு வந்து விடுமா? ISIS இன் தீவிரத்தைக் குறைத்து விடுமா? நிச்சயமாக இல்லை. இது டொனால்ட் ட்ரம்ப் இன் அரசியல் கோஷம். அமெரிக்க புலனாய்வு மற்றும் இராணுவப் படையினர் எதிரிகள் யார் என்பதை தெளிவாக அறிவர். நாட்டைப் பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, சிரியா, ஈராக், லிபியா ஆகிய நாடுகளில் ISIS இற்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் யுத்தம் வெற்றி பெற்று வருவதாகவும் அவ்வியக்கம் தனது கட்டுப்பாட்டிலிருந்த அரை வாசி நிலத்தை இழந்துள்ளதாகவும், சிரியாவில் தொடர்ந்தும் பின்னடைவுகளை எதிர்கொண்டு வருவதாகவும் ஒபாமா அங்கு கூறினார்.

"சுருக்கமாகச் சொல்வதாயின், ISIS இற்கு எதிரான எமது கூட்டணி தொடர்ந்தும் போராடி வருகின்றது என்றார் ஒபாமா. அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் டொனால்ட் ட்ரம்ப் இதுவரை நிகழ்த்தி வந்த ஆவேசமான உரைகளுக்கு ஒபாமா பதிலளித்திருப்பது இதுவே முதன் முறையாகும்.

# பஹ்ரைனில் ஷீஆ எதிரணிக்கு நீதிமன்றத் தடை




பஹ்ரைன் நீதிமன்றம் நாட்டின் பிரதான ஷீஆ எதிர்க்கட்சியின் செயல்பாடுகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது. அல் விபாக் எனப்படும் எதிர்க்கட்சியை பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் வன்முறைகளுடன் தொடர்புபடுத்தியுள்ள நீதிமன்றம், அக்கட்சியை பஹ்ரைனின் அரசியல் சட்டத்தின் கீழ் கலைத்து விடுவதற்குச் சார்பான தீர்ப்பொன்றை வெளியிட்டுள்ளது.

பஹ்ரைனில் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் வெளிநாடுகளைத் தலையிடச் செய்து வன்முறைச் சூழலொன்றை இக்கட்சி உருவாக்கி வருவதாக குற்றம் சாட்டப்படுகின்றது. உத்தியோகபூர்வ பஹ்ரைன் செய்தி நிறுவனம் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

அந்நாட்டின் நீதித் துறை இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், விபாக் கட்சி மீதான இடைக்கால தடையுத்தரவு தீவிரவாதத்தை ஒழிப்பதற்கான செயல்பாடுகளில் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளது. நபீல் ரஜப் எனப்படும் மனித உரிமை செயற்பாட்டாளரை பஹ்ரைன் பாதுகாப்புப் படையினர் கைதுசெய்ததை அடுத்தே நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு வெளியாகியுள்ளது.

அரசாங்கத்தின் அனுமதியின்றி ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்துவது, ஊர்வலம் செல்வது பஹ்ரைனில் தடுக்கப்பட்டுள்ளது. அந்நாட்டில் எதிர்க்கட்சிகள் வன்செயலில் ஈடுபடுவதற்கு ஈரான் தூண்டுதல் அளித்து வருவதாக அரசாங்கம் குற்றம் சாட்டுகின்றது.

# இடம் பெயரும் அகதிகள் கடலில் மூழ்கிப் பலி

ஈராக் மற்றும் சிரியாவிலிருந்து துருக்கிய கடற் பரப்பினூடாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குள் அகதிகளாய் செல்ல எத்தனிக்கும் சிரிய மற்றும் ஈராக்கியர்கள் கடலில் படகு மூழ்கி பலியாகும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் லிபியாவின் மேற்குப் புற நகரமான ஸுவாராவில் 133 பேரின் உடல்கள் கரையொதுங்கியுள்ளதை அந்நாட்டின் அரசாங்கம் உறுதி செய்துள்ளது. குழந்தைகள் மற்றும் பெண்களின் எண்ணிக்கையே அதில் கணிசமானவை என லிபியாவின் கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, சில கிழக்கைரோப்பிய நாடுகளின் அகதிகளின் வருகையைக் கட்டுப்படுத்துவதற்கு தமது எல்லைப் புறங்களை மூடி வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அன்பார் மாகாணத்தில் சுன்னிகளைத் தாக்கும் ஷீஆ படையினர்

தாயிஷ் பயங்கரவாதிகளை அழித்தொழிக்கின்றோம் என்ற பெயரில் அன்பார் மாகாணத்தில் ஊடுருவியிலுள்ள ஈராக்கின் ஷீஆ அரச படையினர் அங்கு பொதுமக்கள் மீது சரமாறியாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



குறிப்பாக, பலூஜாவில் பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதனால் 49 சுன்னி முஸ்லிம்கள் உயிரிழந்துள்ளதோடு 643 பேர் காணாமல் போயுள்ளனர். பலூஜா நகரை ISIS பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக ஈராக்கிய படையினர் கூறுகின்றனர். ஆனால், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஈராக்கிய படையினர் சுன்னி முஸ்லிம் தலைவர்களையும் செயற்பாட்டாளர்களையும் இலக்கு வைத்து வருவதாக குற்றம் சுமத்தப்படுகிறது.

பலூஜாவின் வடக்கிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள சக்லாவியா பிரதேசத்தில் நிகழ்ந்த சிவிலியன்களுக்கு எதிரான வன்முறைகள் திட்டமிட்டு நடத்தப்பட்டவை. அதில் அநியாயமாகக் கொல்லப்பட்டவர்கள் சுன்னி சமூகத்தைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள். அவர்கள் ஈராக்கிய அரச படைகளிடம் சரணடைந்த பின்னரே கொல்லப்பட்டுள்ளனர். ஈராக்கிய அரச படையினர் முற்றிலும் ஷீஆக்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஈராக்கில் ISIS பயங்கரவாதிகளை இலக்கு வைத்தல் என்ற பெயரில் சுன்னி முஸ்லிம்கள் திட்டமிட்டு வேட்டையாடப்படுகின்றனர். இது குறித்து விசாரணை வேண்டும் என அந்நாட்டின் சுன்னி உலமாக்கள் வேண்டியுள்ளனர்.

# 2015 இல் உலகில் ஆகக் கூடுதலான ஆயுதக் கொள்வனவு செய்த நாடாக எகிப்து கருதப்படுகின்றது



The Global Defence Trade எனப்படும் சர்வதேச நிறுவனம் கடந்த வாரம் வெளியிட்டுள்ள அறிக்கையில் 2015 இல் ஆயுதக் கொள்வனவு நாடுகளின் பட்டியலில் எகிப்து 4 ஆவது இடத்தில் உள்ளது என்று தெரிவித்துள்ளது. அவ்வாண்டில் 65 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (6500 கோடி அமெரிக்க டொலர்) எகிப்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளது. 2014 ஆம் ஆண்டை விட இது 6.6 பில்லியனால் அதிகரித்துள்ளது எனவும், கடந்த தசாப்தத்தில் எகிப்து ஆயுதக் கொள்வனவுக்காக செலவிட்ட மிகப் பெரும் தொகை இது எனவும் அந்த அறிக்கை கூறுகின்றது.

2015 இல் ஆயுதக் கொள்வனவில் முதலிடம் பெறும் நாடு சவூதி அரேபியாவாகும். அது எகிப்தை விட இரண்டு மடங்கு தொகையை ஆயுதக் கொள்வனவுக்குச் செலவிடுகின்றது. போர் விமானங்கள், அப்பாச்சி எலிகொப்டர்கள், ஆளில்லா யுத்த விமானங்கள், கடலில் சிறிய ரக போர் விமானங்களை சுமக்கும் பாரிய கப்பல் என்பவற்றுக்கே எகிப்து இவ்வளவு தொகை செலவிடு கின்றது. ஜனநாயகத்தை ஆயுதங்களால் அழிக்க நினைக்கும் ஆட்சியாளர்களுக்கு ஆயுதங்களே மூலதனம் என்பதற்கு எகிப்து ஓர் உதாரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> தேன் எடுத்தவன் புறங்கையை நக்குவது இயல்பு. அதிகாரத் தேன் கூட்டை முர்ஸியிடமிருந்து அபகரித்த ஸீஸி, அமெரிக்க சியோனிஸ சப்பாத்துக் கால்களை நக்குவதும் இயல்பே. ஆனால், அதற்கு எகிப்தியர்கள் கொடுக்கும் விலை மிகப் பாரியது.

# ஸீஸியின் அரசியல் சூது:

# துரோகம் வெட்கமறியாது

**றஊப் ஸெய்ன்**

எகிப்தில் நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி ஒருவருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதிப்பதாயின் அதற்கு அந்நாட்டின் தலைமை முப்தியின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இதன்படி 2013 ஜூலையில் பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி முர்ஸி அவர்களுக்கு அந்நாட்டின் இராணுவ குற்றவியல் நீதிமன்றம் முடிவுசெய்துள்ள மரண தண்டனைத் தீர்ப்புக்கு முப்தி ஷவ்கி அல்லாம் தனது ஒப்புதலை இரகசியமாக அனுப்பி வைத்துள்ளார்.

கெய்ரோவைத் தளமாகக் கொண்ட மிஸ்வாரி இணையத்தளம் வெளியிட்டுள்ள இச்செய்தியால் அறபுலகத்தின் மனச்சாட்சி ஒரு கணம் உறைந்து போனது. இதற்கு முன்னர் முர்ஸியை மீளவும் பதவிக்குக் கொண்டு வர வேண்டும் என அகிம்சை வழியில் பேரணி நடத்தியவர்கள் தஹ்ரீர் சதுக்கத்தில் வைத்து படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் கொல்லப்படுவதற்கு முன்னர் அவர்களைக் கொல்லலாம் என பத்வா வழங்கியவர் அலி ஜும்ஆ எனும் ஒரு தறுதலை என்பதை நினைவுகூர வேண்டும்.

அறபு நாடுகளின் அந்தப் புரங்களில் ஒய்யாரமாக வீற்றிருந்து மன்னர்கள் வழங்கும் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டே அவர்களது அராஜகங்களுக்குக் குடைபிடிக்கும் இத்தகைய 'முப்திகளுக்கு' (போலிகளுக்கு ஒரு நீண்ட பட்டியல் உள்ளது.

வாதி அல் நத்ரூத் சிறையிலிருந்து தப்பித்தவர்கள் என இராணுவ நீதிமன்றம் கூறும் பலருக்கு இதுபோன்ற மரண தண்டனை தீர்ப்பாகியுள்ளது. 'Arabi 21' எனும் எகிப்தின் இணையத் தளம் ஸீஸியிற்கும் ஷவ்கி அல்லாம் என்பவருக்கும் இடையில் நிகழ்ந்த தொடர்பாடல்களை வெளிப்படுத்தியுள்ளது.

முர்ஸியுடன் சகோதரத்துவ அமைப்பின் மூத்த தலைவர்களான கலாநிதி இஸாம் அல் இர்யான், ஸஅத் அல் கத்தானி போன்றோரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். ஆட்சியாளர்களுக்குத் துதி பாடும் உள்ளூர் ஊடகங்கள் வாதி அல் நத்ரூத் விவகாரத்தை 'Big Escape' என்றே அறிக்கையிடுகின்றன.

பொறியியலாளர் கைரத் ஷாத்திர், முஹம்மத் அல் பல்தாஜி, அஹ்மத் அல் அப்த் அல் அதி, செய்யித் முஹம்மத் இஸ்லாஹி, மிதுவல்லி ஸலாஹுத்தீன், அம்மார் முஹம்மத் அஹ்மத், பாயித் அல் பன்னா, அஹ்மத் ரஜப் ஸுலைமான், அல் அஸ்ஸான் முஹம்மத் அல் கைராத், ஸஅத் அத்தீன் அல் ஷாத்திர், ஸுன்தூஸ் ஆஸிம், அபூபக்கர் கமால், அஹ்மத் முஹம்மத் ஹாகிம், ரிழா பஹ்மி கலீல், முஹம்மத் உஸாமா, இமாதுத்தீன் அலி அத்வா, முஹம்மத் ஸய்யான் போன்ற இன்னும் பலரின் மரண தண்டனை தீர்ப்புக் குறித்தும் ஷவ்கி அல்லாமின் ஒப்புதலுக்கான உத்தியோகபூர்வக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் அரசியல் சூதாட்டக் களத்தில் அன்றாடம் நிகழ்ந்து வரும் அபூர்வமான மாற்றங்கள், ஸீஸியின் கபட நாடகங்கள், ஜனநாயக மறுப்பு நடவடிக்கைகள், மனித உரிமை மீறல்கள் எதுவுமே ஜனநாயகக் காவலர்களின் மனச்சாட்சியை உறுத்தவில்லை என்பது ஆச்சரியத்திற் குரியதல்ல. எகிப்தின் நீண்ட அரசியல் வரலாறு அராஜகத்தோடும் அநீதிகளோடும் பின்னிப் பிணைந்தது. எகிப்தியர்கள் பெரும்பாலும் உண்பதற்கு மட்டுமே வாயைத் திறக்கும் அளவு கருத்துச் சுதந்திரத்தின் குரல் வலை குரூரமாக நசுக்கப்படுகின்றது. ஜனநாயக விழுமியங்கள் புதைகுழிக்கு அனுப்பப்படுகின்றன.

ஒரு பாதாள உலகக் கும்பலின் தலைவன் போன்று செயற்படும், ஸீஸியின் இந்த ஜனநாயக விரோத அடக்குமுறைகளுக்கும் ஒடுக்கு முறைகளுக்கும் முண்டுகொடுப்பவர்கள் யார் என்பது தான் ஆச்சரியமான கேள்வியாகும்.

ஒரு புறம் அறபிகளின் வாசற்படியில் அவர்களின் நிலங்களை விழுங்கி, ஜெரூசலத்தின் மலைக் குன்றின் மேல் அமர்ந்திருக்கும் சியோனிஸப் பூதம். இன்னொரு புறம் ஜனநாயகம் குறித்து வாய் கிழியப் பேசும் ஒபாமா நிர்வாகம். அதற்கு அப்பால் ஜனநாயக பூர்வமான ஆட்சி எந்த அறபு நாட்டிலும் உருவாகி விடக் கூடாது என்பதில் குறியாய் உள்ள பாலைவன நரிகள்.



2013 ஜூலைக்குப் பின்னர் எகிப்தின் பொருளாதாரம் அதல பாதாளத்திற்கு சென்று கொண்டிருக்கிறது. நாட்டில் வேலையில்லாதோரின் தொகை விமானம் போல் உயர்கின்றது. சுற்றுலாத் துறை பாரியளவு வீழ்ச்சி கண்டுள்ளது. அரச நிறுவனங்கள் செயலிழந்து போயுள்ளன. நீதிமன்றங்கள் தமது சுயாதீனத்தை இழந்து செத்துக் கிடக்கின்றன. உலக மக்களின் கவனத்தை இந்த உள்ளகப் பின்னடைவிலிருந்து திசை திருப்புவதற்கு அப்பாவி இஸ்லாமியவாதிகள் மீதான பிடியை ஸீஸி இறுக்குகின்றார்.

சிறைச்சாலையிலிருந்து சிலர் தப்பிச் செல்வதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஜனாதிபதிக்கு மரண தண்டனைத் தீர்ப்பளிக்கும் ஒரே நாடு எகிப்தாகவே இருக்க முடியும். இஸ்லாமிய எழுச்சிக்கும் உலக நாகரிகத்திற்கும் பங்களிப்புச் செய்கின்ற பெரும் அறிவியல் மேதைகளை இராணுவம் சட்டையைப் பிடித்து இழுத்துச் சென்ற சரித்திரம் எகிப்தில் தான் நடந்தது.


உலக வர்த்தக மையம் தாக்கப்பட்ட போது அமெரிக்கா சீறி எழுந்தது. நாம் எல்லோரும் அதை ஒரு போர் என்று கணிப்போமானால் எகிப்தின் இராணுவப் புரட்சியை அதற்குப் பிந்திய நிகழ்வுகளை அதை 100 மடங்காகப் பெருக்கிய மற்றொரு கொடூரப் போர் என்றே கொள்ள வேண்டும். எகிப்தியர்கள் மூச்சுத் திணறி வாழ்வா, சாவா என்ற ஜீவ மரணப் போரில் தத்தளிக்கையில் அப்பாவி இஸ்லாமியவாதிகள் மீது இவ்வளவு பெரிய கொடூரம் கட்டவிழ்க்கப்படுகிறது எனின், எகிப்திய மனச்சாட்சிக்கு என்ன பெயர் வைப்பது?

குடிமக்களின் நலன் காக்கும் தேச பக்தியை ஸீஸி எப்போதேனும் காட்டியிருக்கிறாரா? ஸீஸியின் ஆற்றாமையை, அரசியல் இயலாமையை முறிந்து தொங்கும் அவரது தேசத்தின் முதுகெலும்பை கிசிச்சையளிக்க முடியாமல் எகிப்தின் ஒட்டுமொத்த எதிரிகளும் ஏதோ இஸ்லாமியவாதிகள் என்பது போலவே தனது 'பிர்அவ்னிய்யத்தை' கட்டவிழ்க்கின்றார் அவர். இது குறித்து அறபு நாடுகளின் அசைவற்ற தன்மைக்கு உவமைகளைத் தேடுவது கடினமாகும்.

தேன் எடுத்தவன் புறங்கையை நக்குவது இயல்பு. அதிகாரத் தேன் கூட்டை முர்ஸியிடமிருந்து அபகரித்த ஸீஸி, அமெரிக்க சியோனிஸ சப்பாத்துக் கால்களை நக்குவதும் இயல்பே. ஆனால், அதற்கு எகிப்தியர்கள் கொடுக்கும் விலை மிகப் பாரியது.

ஸீஸி இன்று எகிப்தின் அரசியல் சூதாட்டக் களத்தில் எந்த உறுத்தலும் இல்லாமல் தான் செய்வதெல்லாம் கர்ண கொடூரமான குற்றங்கள் என்பதைத் தெரிந்துகொண்டே அவற்றை பச்சையாகச் செய்வதுதான் ஆச்சரியமளிக்கின்றது.

ஸீஸி ஊழலின் ஊற்றுக் கண், அராஜகத்தின் ராஜன், துரோகத்தின் தொண்டன், இஸ்ரேலின் கோவேறு கழுதை, வன்மத்தின் இமயம், தேசிய கொள்ளைக்காரன், இப்படி எந்தப் பெயர் வைத்தாலும் அவரது மனித இனத்தின் மீதான கொலைக் குற்றங்களுக்கு அவை ஈடாகாது.



எகிப்தில் இஸ்லாமியவாதிகள் இழைத்த குற்றம் என்ன? நாட்டை ஜனநாயகமயப்படுத்தல், பொருளாதார செழிப்பை உருவாக்கல், அறவியல் ஆய்வு முயற்சிகளை மேம்படுத்தல், விவசாயத்தைக் கட்டியெழுப்பல், ஒழுக்கமும் நேர்மையும் கொண்ட ஓர் உன்னத சமூகத்தை உருவாக்கல், பன்மைத்துவத்தை அங்கீகரித்தல், ஜனநாயகப் பெறுமானங்களுக்கு மதிப்பளித்தல். இவற்றுக்காகவே அவர்கள் உழைத்தனர். அதற்காக 80 ஆண்டு காலம் முன்னைய ஆட்சியாளர்களால் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். ஒடுங்கிய சிறைகளில் தள்ளப்பட்டனர். தூக்கிலிடப்பட்டனர். இன்றும் இதே வகையான கொலை வெறிகளை ஆட்சியாளர்களிடமிருந்து அவர்கள் எதிர்கொள்கின்றனர். முடிவே இல்லாமல் தொடரும் இந்த சோக நாடகம் எப்போது முடிவுக்கு வரும் என்பதே மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் முன்னால் எழும் கேள்வியாகும்.

எகிப்தை பற்றிப் படர்ந்துள்ள மதச்சார்பின்மை, நாஸ்திக இடதுசாரியம், கட்டற்ற ஊழல், வினைத்திறனற்ற நிர்வாகம், ஒழுக்கப் பண்பாட்டுச் சீர்குலைவுகள், பாரிய பொருளாதாரப் பின்னடைவு இவை குறித்து அந்நாட்டின் முப்திகளது கண்கள் திறக்கவில்லை. இஸ்லாத்திற்காக எல்லாத் தியாகங்களையும் செய்த இஹ்வான்களுக்கு மரண தண்டனை வழங்குவதே எகிப்தின் மீட்சிக்கான ஒரே வழி என்று செயல்படுவது எவ்வளவு பெரிய கொடுமை. எவ்வளவு பெரிய முட்டாள்தனம்.

எகிப்தில் இலட்சக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அதில் கொலைக் குற்றம் புரிந்தோரும் உள்ளனர். அவர்கள் யாரையும் அவர்களது உறவினர்கள் சென்று பார்வையிட அனுமதி உள்ளது. ஆனால், கடந்த ஆறு மாதங்களாக ஜனாதிபதி கலாநிதி முர்ஸி அவர்களை சென்று பார்வையிட அவரது குடும்பத்தவர் எவருக்கும் அனுமதியில்லை. முர்ஸி இப்போது எந்தச் சிறையில் உள்ளார். அவரது உடல், உள நிலைமைகள் எவ்வாறு உள்ளது என்பது பற்றி அவரது குடும்பத்திற்கு எதுவும் தெரியாது.

சிறையில் மூன்றாவது ரமழானை எதிர்கொண்டுள்ள முர்ஸியின் குடும்பம் சமீபத்தில் இராணுவ ஆட்சியாளர்களுக்கு வரைந்துள்ள நீண்ட கடிதத்தில், இது குறித்து தமது ஆழ்ந்த கவலைகளை வெளியிட்டுள்ளது. அவரை இழந்த துயரில் தோய்ந்து போயிருக்கும் அவரது குடும்பத்தின் வலியையும் வருத்தத்தையும் ஆவி தொலைத்து நடத்தி வரும் போராட்டத்தையும் உணரும் நிலையில் ஆட்சியாளர்கள் இல்லை.

எகிப்தின் உண்மையான போர்க் குற்றவாளி ஸீஸியே. அவர் ஒரு தேசத் துரோகி. தேசத்தை அமெரிக்காவிடம் அடகு வைத்தவர். சியோனிஸ்டுகளுக்கு சேவகம் புரியம் ஒரு கைக்கூலி. எகிப்தில் முதலில் தூக்கிலிடப்பட வேண்டியவர் யார் என்று கேட்டால் சாதாரண பள்ளி மாணவர்களே ஸீஸி என்பார்கள். இது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

ஆனால், இந்த அரசியல் உண்மையிலிருந்து உலகக் கவனத்தை திசை திருப்புவதில் உள்ளூர் ஊடகங்கள் மட்டுமன்றி, ஸீஸியிற்கு முண்டு கொடுக்கும் முப்திகளும் அணி திரள்வதுதான் ஆச்சரியமானது.

எகிப்தின் நீதித்துறை எவ்வளவு தூரம் அரசியல் மயமாகியுள்ளது என்பதற்கு சமீபத்திய அதன் போக்குகள் தெளிவான சான்றுகளாகும். ஸீஸியை நோக்கி எகிப்தியர்கள் எழுப்ப வேண்டிய கேள்விகள் பல. கேள்விகளை முன்வைக்கும் மக்களின் ஒவ்வொரு செயல்பாடுமே போராட்டமாக மாறுகின்றது. விடுதலை வந்து சேரும் என்ற கனவை விட விடுதலைக்கான அன்றாட போராட்டங்களை வகுப்பதே உடனடியான தேவையாகும். உரிமைப் போராட்டங்களை மறந்து விட்டு, சலுகைகளோடு காலம் கடத்தலாம் எனக் கனவு காணும் எந்தவொரு சமூகமும் விடிவை நோக்கி நகர்வது ஒருபோதும் சாத்தியமில்லை.

நீதியை குழிதோண்டிப் புதைக்கும்
நன்முறையை எகிப்து உலகிற்கு அளிக்கும்
ஆம், எகிப்து உலகிற்கு அளிக்கும்
ஆம், எகிப்து உலகிற்கு அளித்து விட்டது
இனி நாம் குனிந்த தலைகளோடு
வெட்கித்து நிற்போம்.
நீதி தேவதை கண்களைத் திறக்கும் வரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளுத்கம வன்முறை விட்டுச்சென்ற தடயங்கள்



ஷெட்டி ரம்ஸி

பௌத்த பேரினவாத சக்திகள் அளுத்கமையில் அரங்கேற்றிய கலவரத்திற்கு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. கடந்த ராஜபக்ஷ ஆட்சி பீடத்தின் பூரண அனுசரனையில் நிகழ்த்தப்பட்ட இவ்வன்முறையில் இருவர் கொல்லப்பட்டார்கள். பலர் காயமுற்றார்கள். 400 கோடிக்கும் அதிகமான சொத்துகள் சூறையாடப்பட்டுள்ளது. குற்றவாளிகள் வெளிப்படையாக தென்பட்ட பொழுதிலும் பாதிக் கப்பட்டவர்களுக்கு இதுவரையில் நீதி நிலை நாட்டப்படவில்லை. ஒரு ஆட்சிபீ டத்தையே மாற்றிவிட வழிகோழிய இவ்வன்முறை விட்டுச்சென்ற தடயங்கள் கொஞ்சநஞ்சமல்ல. நல்லாட்சியிலும் இவர்களுக்குரிய நீதி நிலைநாட்டப்படுவதாக தெரியவில்லை. விஷேட அதிரடிப்படையினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் காலொன்றை இழக்க நேரிட்ட அப்கர், ஈராண்டுகள் கடந்தும் தனக்கு நீதி கிடைக்கவில்லை என்பதாக தனது உளக்குமுறல்களை வெளிப்படுத்துகிறார். ஊர்மக்களை காப்பாற்ற பள்ளியின் முன் பாதுகாப்புக்கு நின்ற 21 வயதையுடைய அப்கர்,தனக்கு நேர்ந்த அவலங்களை பின்வருமாறு அடுக்குகிறார்.



அப்கர்

''அவரவர் பகுதிகளை பாதுகாக்குமாறும் பெண்களை பள்ளியில் வந்திருக்குமாறும் பெரியபள்ளியில் அறிவிக்கப்பட்டது. பெண்கள்,சிறுவர்களை பள்ளிக்குள் பாதுகாப்பாக இருக்கவைத்து விட்டு நாம் வெளியே பாதுகாப்புக்கு நின்றோம். பள்ளியிலிருந்த பெண்களுக்கு நாம் உணவு ஏற்பாடு செய்துகொண்டிருந்த பொழுது 9:30 மணியளவில் திடீரென ஒரு கூட்டம் உடைத்துக்கொண்டு வந்தது. அவர்களை நாம் துரத்தினோம். பள்ளியின் இமாம் 5 தடவைக்கு மேல் விஷேட அதிரடிப் படையினருக்கு அழைப்பை ஏற்படுத்தியிருந்தார். வருவதாக கூறிய அவர்கள் வரவில்லை. 11:00 மணியளவில் இன்னொரு கூட்டம் வந்தது. அவர்களையும் நாம் விரட்டி னோம். மூன்றாவது தடவையாக STF வந்தது. பாதுகாப்புக்கு வந்தார்கள் என நாம் நினைத்தோம். வீதி விளக்குகளை உடைத்தார்கள். எமது திசையை நோக்கி பாரிய வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. ஒன்றும் விளங்கவில்லை எமக்கு. எங்கும் செல்ல முடியவில்லை. எம்மை நோக்கிச் சுட்டார்கள். எனது காலில் சூடுபட்டது. சம்பவத்தில் எனது வலது கால் பாதிக்கப்பட்டது.

சம்பவ தினத்தில் நான் நாகொடை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டேன். அவ்வேளையில் அங்கு சில தேரர்கள் வந்து சிகிச்சையளிக்க இடமளிக்கவில்லை. வைத்தியர்களுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். எனக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் தரவில்லை. என்னை கொழும்பு மருத்துவமனைக்கு மாற்றவில்லை. மறுநாள் பணம்செலுத்தியே என்னை மருத்துவமனையிலிருந்து வெளியே எடுத்தார்கள். இல்லாவிட்டால் நான் உயிருடன் இருந்திருக்க வாய்ப்பில்லை. 18 நாள் ஐசியுவில் வைத்தார்கள். உங்களது கால் வெட்டப்பட வேண்டிய தொரு காலல்ல. கிரிமி நுழையும் வகையில் கீறி வைத்திருந்ததாக கொழும்பில் எனக்கு சிகிச்சையளித்த வைத்தியர் கூறியிருந்தார்.

நான் இக்ரா தொழில்நுட்ப கல்லூரியில் கற்றவன். அங்கு எனக்கு தொழில் கிடைத்தது. என்னால் போக முடியவில்லை. எனக்கு ஜேர்மன் கால் பொருத்தப்பட்டுள்ளது. அந்தக் காலால் நடமாடுவது கடினம். ADF இனால் பணம் கிடைத்தது. எனது சகோதரர் தர்கா நகரிலுள்ள சிங்களப் பாடசாலை யொன்றிலேயே கற்று வந்தார். அவரை அங்குள்ளவர்கள் இனவாதக் கண் கொண்டு பார்க்க ஆரம்பித்தனால் களுத்துறையிலுள்ள பாடசாலை யொன் றிற்கு அவரை மாற்றினோம்.''

அப்கரின் ஆதங்கம் இவ்வகையில் உள்ளபொழுது கலவரத்திற்கு பின்னர் இரண்டு வருடங்களை கடந்துள்ள தர்கா நகரின் தற்போதைய நிலைமைகளை பிரதேசவாசி ஒருவரிடம் கேட்டறிந்தோம்.

''15ம் திகதி வபாத்தானவர்களின் பெயரில் குர்ஆன் ஓதும் நிகழ்வு வெலிப்பிட்டிய பள்ளிவாயலினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் ஒரு சுமுகமான நிலைக்கு வந்துள்ளார்கள். பழைய பாணியில் பலிவாங்க வேண்டும் என்ற எண்ணங்கள் மக்களிடம் இல்லை. அவ்வப்போது சிறு சிறு சம்பவங்கள் இடம்பெற்றாலும் அது பாரியளவில் மோதல்களாக இல்லை. அவர்களும் நன்றாக பயந்து போயுள்ளார்கள். ஏனெனில் சம்பவத்தோடு தொடர்புற்றவர்கள் சிலர் திடீர் விபத்துக்களில் இறந்தார்கள். இது அல்லாஹ்வின் சாபம் என அவர்கள் கூறுகிறார்கள். இறந்தவர்களின் ஆவி உலகில் நடமாடுவதாக சிங்களவர்களிடம் ஒரு நம்பிக்கை உள்ளது. அதனால் அவர்கள் பயந்து போயுள்ளார்கள்.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்தில் வைத்து சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவருக்கு பிரைன் கியுமர் ஏற்பட்டது. தேரர்களை அழைத்து மந்திரங்களை செய்தும் குணமாகவில்லை. அவர் இறந்து போனார். இதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் பழிவாங்கப்படுவார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அவர்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.''

அளுத்கமை கலவரத்திற்கு காரணமானவர்களுள் ஒருவரான பதிராஜகொடை விகாரையின் தேரரது நடவடிக்கைகள் எவ்வாறுள்ளது என ஒருவரிடம் கேட்டபோது அவர், ''தற்பொழுது பதிராஜகொடை பன்சலையின் தேரர் மானசீக ரீதியாக நன்றாக பாதிக்கப்பட்டுள்ளார். முன்னர் அவர் எமது ஊரைத் தாண்டிச் செல்லும் போது முறைத்துக் கொண்டு செல்வார். தற்பொழுது அவர் அப்படியில்லை. சிங்கள தம்பியா என்று ராஜிதவுக்கு ஏசியிருந்தார். தற்பொழுது ராஜிதவுடன் இணைந்துள்ளார். பொது வேலைகளை செய்து கொண்டுள்ளார். அவருடைய வேகம் குறைந்து விட்டது''.

அளுத்கம அபிவிருத்தி நிதியத்தின் பணிகள் எவ்வாறுள்ளன என பொது மக்களிடம் விசாரித்த பொழுது அந்நிறுவனம் தொடர்பிலான பொதுவான சில பலவீனங்களை கூறியுள்ளார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுத்த உதவிகள் சரியாக அவர்களிடம் போய்ச் சேரவில்லை என்றும் இன்னும் சிலருக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளதெனவும் தெரிவித்தார்கள். மசூரா அமைப்பில் நிறைய உலமாக்களை இணைத்துக் கொள்ளாமலும் ஊர் முக்கியஸ்தர்களை கவனத்திற்கொள்ளாமலும் கொழும்பிலுள்ளவர்களை அந்நிறுவனத்தின் முக்கிய பொறுப்புக்களுக்கு இணைத்துக் கொண்டிருப்பதாகவும் விமர்சித்தார்கள். அத்தோடு பாதிக்கப்படாதவர்களுக்கும் நிறைய கொடுத்துள்ளதாகவும் பாதிக்கப் பட்ட சிலருக்கு இன்னும் முழுமையான உதவிகள் வழங்கப்படவில்லை என்றும் 5 லட்சம் தேவையானவர்களுக்கு 3 லட்சம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தார்கள்.

ADF இற்கு கிட்டத்தட்ட நான்கைந்து கோடி ரூபா பணத்தொகை வந்திருக்கும் என பிரதேசவாசி ஒருவர் எம்மிடம் தெரிவித்திருந்தார். ADF தற்பொழுது Ladies Empowering Centre ஒன்றை அல்ஹம்ரா பாடசாலைக்கு அருகாமையில் ஆரம்பித்துள்ளது. பெண்கள் மேம்பாட்டுக்குரிய பணிகள் இதற்கூடாக முன்னெடுக்கப்படுகிறது. இறுதியாக அவர்கள் ஒரு பாடசாலைக்கு தலா 5 லட்சம் ரூபா வீதம் என்ற ரீதியில் பிரதான மூன்று பாடசாலைகளுக்கு Behavior Change Programs நடாத்துவதற்கு வழங்கியுள்ளார்கள்.

அளுத்கமை சம்பவம் தொடர்பிலான எந்தவொரு வழக்கும் நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இன்னும் முன்னெடுக்கப்படவில்லை. அபசரண விவகாரம் மாத்திரமே விசாரனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அது தவிர எமது சமூகத்தோடு தொடர்புபட்ட எந்தவொரு வழக்கும் இன்னும் விசாரனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. ராஜபக்ஷ காலப்பதியில் அதற்குரிய சாட்சிகள் திருடப்பட்டுள்ளதாகவும் பொலிஸில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறுமாறு தொலைபேசி வாயிலாக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் இப்பாதிப்புக்களுக்குரிய நிவாரணங்கள் கிடைக்குமென் மக்கள் எதிர்பார்த்துள்ளனர். எனவே, அளுத்கமவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் உரிய பதில்களை வழங்க வேண்டியது ஒரு பொறுப்புவாய்ந்த ஜனநாயக நாட்டின் தார்மீக கடப்பாடாகும்.

---

மிப்றாஷ் முஸ்தபா

# இனவாதிகளால் குறிவைக்கப்படும் முஸ்லிம்கள் நல்லாட்சியிலும் தொடர்கிறது...

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அண்மைக் காலமாக முஸ்லிம்களை குறிவைத்து பௌத்த பேரினவாதிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கசப்பான சம்பவங்கள் நாட்டின் அமைதி மற்றும் தேசிய நல்லிணக்கத்தில் மீண்டும் சிக்கலான நிலைமைகளைத் தோற்றுவித்துள்ளன. கடந்த ஆட்சிக் காலத்தில் பௌத்த அடிப்படைவாதிகளால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்த முஸ்லிம்கள் இந்த நாட்டில் அமைதியாகவும் ஏனைய இனங்களோடு சகவாழ்வோடும் வாழ வேண்டும் என்பதற்காக ஆட்சி மாற்றமொன்றுக்கு வழிகோலினர். துரதிஷ்டவசமாக நல்லாட்சி என்ற கோஷத்தோடு அரியணை ஏறிய இந்த அரசாங்கத்திலும் முஸ்லிம்களுக் கெதிராக இனவாத செயற்பாடுகள் தலைதூக் கியிருப்பதனால் முஸ்லிம் சமூகம் நல்லாட்சி அரசாங்கத்திலும் நம்பிக் கையிழக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.





வெலிமடை முஸ்லிம் பாடசாலை நிர்மாணத்திற்கு எதிரான பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு, கண்டி லைன் மஸ்ஜித் மினாரா நிர்மாணத்திற்கெதிரான ஆர்ப்பாட்டம் மற்றும் தெஹிவளை பாத்யா மாவத்தை பள்ளிவாயல் விஸ்தரிப்புப் பணிகளுக்கு பொலிஸ் மற்றும் பௌத்த பிக்குகளின் இடையூறு என்பனவே கடந்த சில வாரங்களில் இந்த நாட்டில் பெரிதும் பேசுபொருளாக அமைந்த விடயங்களாகும். இனவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் பல்லின சமூகங்கள் வாழும் இந்த நாட்டில் மக்களிடையே குரோதத்தையும் காழ்ப்புணர்ச்சியையும் ஏற்படுத்தி இந்த நாட்டில் அமைதியற்ற சூழலை உருவாக்குவதற்கான முயற்சியாகவே நோக்க வேண்டும்.

வெலிமடை பாடசாலை நிர்மாணத் திற்கெதிரான பேரினவாதிகளின் எதிர்ப்பு மிகக் கீழ்தரமான ஒரு நடவடிக்கையாகும். வெலிமடை பிரதேச முஸ்லிம் மாணவர்கள் தரம் 1 முதல் 12 வரை வெலிமடை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலேயே கல்வி கற்று வருகின்றனர். இதனால் ஏற்பட்ட இட நெருக்கடி மற்றும் பாடசாலை விஸ்தரிப்புக்கான காணி போதாமை போன்ற காரணங்களால் ஆரம்பப் பாடசாலையொன்றை வேறொரு இடத்தில் நிர்மாணிக்க ஊவா மாகாண கல்வி அமைச்சு அனுமதியளித்தது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா முதலமைச்சரின் பங்கேற்புடன் நடைபெற இருந்த நிலையில், புதிதாக அமையவுள்ள பாடசாலை அரபுக்கல்லூரி என்ற பௌத்த அடிப்படைவாதிகளின் போலிக்குற்றச்சாட்டினால் குறித்த நிகழ்வு இரத்துச் செய்யப்பட்டதுடன் நிர்மாணப் பணிகளும் ஒத்திவைக்கப்பட்டன.

அதேபோல, கண்டி லைன் மஸ்ஜித் மினாரா நிர்மாணப் பணிக்கு எதிராக கடந்த 05ம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டமும் இனவாதிகளது காழ்ப்புணர்வின் விளைவாக ஏற்பட்ட ஒரு செயற்பாடேயாகும். குறித்த மினாரா எந்தவகையிலும் தலதா மாளிகையின் உயரத்துடன் தொடர்புபடாத நிலையில் முஸ்லிம்கள் திட்டமிட்டு தலதா மாளிகையின் உயரத்தை விஞ்சுமளவிற்கு பள்ளியைக் கட்டுகின்றனர் என்ற பொய்ப் பிரச்சாரம் இந்த நாட்டில் சக வாழ்வை நேசிக்கும் அனைவரையும் கவலை கொள்ளச் செய்யும் செய்தியாகும். மாநகர சபையிலிருந்து கிடைத்த எழுத்து மூலமான மினாராவுக்கான தடை உத்தரவு வாக்குறுதியை அடுத்து' குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை வகித்த பௌத்த பிக்கு கூறிய வார்த்தைகள் மிகப் பாரதூரமானவையாகும். ''இதன் பின்னர் ஒரு செங்கல்லாவது உயர்த்தப்படுமாயின் மினாரா மட்டுமல்ல, இங்கு ஒரு பள்ளிவாயல் இருந்ததற்கான அடையாளத்தையே இல்லாமலாக்கி விடுவேன்'' என்ற எச்சரிக்கை யுடனேயே அவர் ஆர்ப்பாட்டக்காரர்களை அழைத்துச் சென்றார்.

இந்தப் பிரச்சினை ஓய்வதற்குள்ளால் தெஹிவளை பாத்யா மாவத்தை பள்ளிவாயல் விஸ்தரிப்புப் பணிகளுக்கு பௌத்த பிக்குகள் மற்றும் பொலிஸாரினால் ஏற்படுத்தப்பட்ட இடையூறுகள் முஸ்லிம்களிடத்தில் பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் குர்ஆன் மத்ரஸாவாக இயங்கிய குறித்த [illegible] முஸ்லிம்களின் அன்றாட தொழுகை நடவடிக்கைகளுக்கு பள்ளிவாயலொன்றுக்கான அவசியம் உணரப்பட்டமையால் வக்பு சபையில் பள்ளிவாயலாக பதிவு செய்யப்பட்டது. நோன்பு காலத்தில் தமது வணக்க வழிபாடுகளை நிறைவேற்ற இடம் போதாமையினால் நிர்வாகம் பள்ளிவாயலை விஸ்தரிக்க முடிவு செய்து தெஹிவளை - கல்கிஸை மாநகர சபையிடம் அனுமதி கோரியிருந்தது. இதற்கான அனுமதி கிடைத்து கடந்த வாரமளவில் பள்ளிவாயல் விஸ்தரிப்பு வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் பௌத்த பிக்குகள் இந்தப் பகுதியில் பள்ளிவாயலொன்று இயங்க முடியாது எனக் கூறி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். பௌத்த பிக்குகளின் இந்த முறையற்ற நடவடிக்கைக்கு தெஹிவளை பொலிஸாரும் சார்பாக இருந்தமையானது பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

அந்தவகையில் மீண்டும் இந்த 'நல்லாட்சி' அரசாங்கத்தில் முஸ்லிம்களுக் கெதிரான இத்தகைய இனவாதிகளின் செயற்பாடுகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. நாட்டின் சட்டத்தையும் ஒழுங் கையும் பொலிஸார் மற்றும் பௌத்த பிக்கு கள் கையிலெடுத்திருப்பதனையும் எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. பிரதமர் முஸ்லிம்களின் விவகாரத்தில் நல்லிணக்கத்தை நிலை நிறுத்த உறுதியாக இருக்கின்றார். முஸ்லிம்களின் சமயக் கடமைகளுக்கு எந்தத் தரப்பினாலும் இடையூறு ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இராஜாங்க அமைச்சர் பௌஸியிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறிய வார்த்தைகள் ஆறுதல் அளிக்கின்றன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்படவில்லை.

மாறாக இனவாத செயற்பாடுகளுக்கு துணைபோனமைதான் அவரது தோல்விக்குக் காரணம். இனவாத செயற்பாடுகளை இந்த நாட்டில் இல்லாதொழித்து மக்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. இவை அனைத்தையும் நிறைவேற்றி அமைதிமிக்க நாட்டை உருவாக்குவதற்கு இந்த அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே மக்களினது எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலஸ்தீன் யாருடையது? வரலாற்று வாதங்கள்



யூ.கே.றமீஸ்
விரிவுரையாளர்,
பாதிஹ் கல்வி நிலையம்.

பலஸ்தீன் தம்முடையது என்ற கருத்தை உருவாக்க யூதர்கள் இருவகையான வாதங்களை முன்வைக்கின்றனர். **ஒன்று:** மத ரீதியானது. இதற்கான மறுப்புக்களை கடந்த இதழில் நோக்கினோம். **அடுத்தது:** வரலாற்று ரீதியானது. அவர்களது வரலாற்றை அடிப்படையாக கொண்ட வாதங்களையும் அவை எத்துணை போலியானது என்ற அதற்கான மறுப்பையும் இந்த இதழில் நோக்குவோம்.

**வரலாற்று வாதங்கள்**

யூதர்கள் வரலாற்றை மையமாகக் கொண்டு பலஸ்தீன் தமது தாயக பூமி என்று வாதிடுகின்றார்கள். யூத வரலாறும், அவர்களது முதுசங்களும், சிலாசனங்களும் பலஸ்தீன் வரலாற்றுடன் கலந்திருப்பதாக கூறுகின்றார்கள். யூதர்கள்தான் பலஸ்தீனின் ஆரம்பக் குடிகள், ஏனையவர்களை வந்தேறு குடிகளாக கருதுவார்கள். அவர்கள் வழிப்போக்கர்கள் மாத்திரமே என்பது யூத கருத்தாகும். தாவூத் (அலை) சுலைமான் (அலை) போன்றோர்கள் பலஸ்தீனை ஆட்சி செய்தமையும், யஹூதா, இஸ்ராஈல் என்று இரு இராச்சியங்களை யூதர்கள் பலஸ்தீனில் ஆட்சி செய்தமையையும் இதற்கான ஆதாரமாக காட்டுவார்கள்.

முதலில் இன்றைய யூதர்களை பனூ இஸ்ரவேலர்களின் வழித்தோன்றல்களாக நாம் கருதுவதில்லை. இன்றைய யூதர்கள் பனூ இஸ்ரவேலர்களின் வழித்தோன்றல்களோ நபிமார்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தவர்களின் வழித்தோன்றல்களோ அல்லர். பனூ இஸ்ரவேலர்களுடனான போராட்டம் வரலாற்று ரீதியானது. இவ்வகையில் தௌஹீதை சுமந்த சமூகம் அன்றிலிருந்து இன்று வரை தொடர்கிறது.

**எது எவ்வாறாயினும் அவர்களது வாதங்களுக்கான பதிலை சுருக்கமாக கீழ்வருமாறு நோக்கலாம்.**

1. பலஸ்தீனில் மனிதர்கள் இருந்துள்ளார்கள் என்பது மிகவும் புராதன வரலாற்றுடன் தொடர்பு படுகிறது. சுமார் 1 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் மனிதர்கள் இருந்ததாக நம்பப்படுகிறது. உலகின் புராதன நகரமாக கருதப்படுகின்ற ஜெரிக்கோ நகரத்தை பலஸ்தீனர்கள் கி.மு 8000 களில் உருவாக்கியதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அரபு தீபகற்பத்திலிருந்து கன்ஆனியர்கள்தான் பலஸ்தீனுக்கு முதலில் சென்றுள்ளார்கள். இது கி.மு 2500 களில் நிகழ்ந்துள்ளது. கன்ஆனியர்களின் நாடு / பூமி என்றுதான் பலஸ்தீன் பெயர் பெற்றிருந்தது. இவர்கள்தான் அதிகமான பலஸ்தீன கிராமங்களையும் நகரங்களையும் உருவாக்கினார்கள். கி.மு 2000களில் 200க்கும் மேற்பட்ட கிராமங்களையும், நகரங்களையும் உருவாக்கியுள்ளார்கள். ஷகீம் நகர் ( நாபுல்ஸ், பிலாதா) மீஸான், அஸ்கலான், அகா, ஹீபா, கலீல், உஸ்தூத், ஆகிர், பிஃரு ஸப்உ,பெத்லஹேம் (பைது லஹ்ம்) போன்ற பல நகர்களை உருவாக்கியுள்ளார்கள்.

மிக நம்பிக்கையான வரலாற்றாசிரியர்களின் கருத்துப்படி இன்றைய பலஸ்தீனர்கள் குறிப்பாக குரவிய்யீன்கள் கன்ஆனியர்களின் வம்சாவளியினர் ஆவர். இவர்கள்தான் பழைய குடிகளின் இன்றைய தொடர்கள். அங்கிருந்த குடிகளுடன் இஸ்லாத்தின் வெற்றியை தொடர்ந்து இஸ்லாம் இணைந்து கொண்டது. அறபிகள் இணைந்து கொண்டார்கள். இரு சாராரும் கலந்துவிட்டார்கள். இன்றைய பலஸ்தீனர்கள் குறைந்தது 4500 வருட வரலாற்றை கொண்டவர்கள். இக்காலப் பகுதியில் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறவும் இல்லை. வெளியேற்றப்படவும் இல்லை. (மௌஸூஅது பலஸ்தீனிய்யா) பாகம்-1 பக்கங்கள் 13-19 / 361,362/ பாகம் 3 பக்கம் 271-281

2. கி.மு 1900களில்தான் இப்றாஹீம் (அலை) அவர்கள் பலஸ்தீனுக்கு வந்தார்கள். அது ஒரு வளமான பூமியாக இருந்ததாகவும் அது ''கன்ஆனியரின் பூமி'' என்றும் தௌராத் ஏற்றுக்கொள்கிறது.

மேலும், தனது மனைவி சாராவை அடக்கம் செய்வதற்காக அங்கிருந்தவர்களிடம் பூமியை இப்றாஹீம் (அலை) வாங்கினார். இப்றாஹீம் (அலை) அவரது மகன் இஸ்ஹாக் (அலை) அவரது பேரன் யஃகூப் (அலை) போன்றோர்களும் அதே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் அல் மஸ்ஜிதுல் இப்றாஹீமி அமைந்துள்ள இடம்தான் அந்த இடம் என்றும் நம்பப்படுகின்றது.

யஃகூப் (அலை) அவர்களின் சந்ததிகள் / இஸ்ராஈல் என்றும் அழைக்கப்படுவர்) மூஸா (அலை) வரும்வரை எகிப்திலே பரம்பரை பரம்பரையாக தொடர்ந்திருந்தார்கள். அவர்தான் பனூ இஸ்ரவேலர்களை புனித பூமிக்கு செல்வதற்கு கி.மு 1250களில் அழைப்பு விடுத்தார்கள். ஆனால், அவர்கள் மறுத்து விட்டார்கள். கி.மு 1000களில் பலஸ்தீனின் குத்ஸ் நகரத்தை சூழவுள்ள மேட்டுப்பாங்கான பகுதிகளையும் வட பலஸ்தீனின் சில நிலங்களையும் ஆக்கிரமித்துக்கொள்ள முடியுமாக இருந்தது.

(தொடரும்)

---

# பாலைவனச் சிங்கம்

## நைல் நதிக் கரையினிலே...



**(சுலைமான் ஹாதிர்) - வரலாற்று நவீனம்**

அங்கம் - 9 - ஹமதானி

சென்றவார தொடர்...

இத்தகைய பெண்களைப் போல் முகத்தை சிடுசிடுக்கவில்லை செய்யிதா நமீஸா. மாறாக (அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன்) என்று சொல்லி அவளது பொறுப்பிலே விட்டுவிட்டு சாந்தி அடைவாள். எத்துணை வறுமைக்குத்தான் உட்பட்டாலும் நமீஸா தனது பிள்ளைகளுக்கு ஹராம் கலப்பதிலிருந்து மிகுந்த கரிசனையுடன் இருந்தாள். அவள் ஊட்டிய ஹலாலான உணவினால் சுரக்கும் இரத்தத்திலிருந்து உரம்பெற்றுத்தான் இன்று சுலைமான் அமானுஷ்யமான காரியங்களை சாதிக்கும் வீரனாகத் திகழ்கிறான்.

சுலைமானைப் போலவே நமீஸா அவனது தங்கையான ஆயிஷா அர்வாவையும் இலட்சிய இஸ்லாமியப் பெண்ணாக வளர்ப்பதில் கவனம் செலுத்தினாள். நமீஸா எப்போதும் அவர்களுக்கிடையில் தாரதம்மியம் காட்டியதில்லை.

''முத்தம் கொடுப்பதில் கூட குழந்தைகளுக்கிடையில் பாரபட்சம் காட்ட வேண்டாம்'' ( அல்-ஹதீஸ்) இந்த ஹதீஸை அவள் தனது கல்பிலே பசுமரத்தாணியாகப் பதித்து வைத்திருந்தாள். தொழுகை விரிப்பான முஸல்லாவிலே அமர்ந்து நமீஸா இவ்வாறு சிந்தனை வயப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்பொழுது''டொக்..டொக்'' என வாசல் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. ஆயிஷா அர்வா மிக அடக்கமாக வந்து கதவைத் திறந்தாள். வெளியே நின்ற ''ஆமினா குதுப்'' ''அஸ்ஸலாமு அலைக்கும் உள்ளே வரட்டுமா? என்றாள். ஆயிஷா அர்வா மலர்ந்த வதனத்துடன்.. ''வஅலைக்குமுஸ்ஸலாம்.. வாங்கோ மாமி'' என வரவேற்றாள் பின் உள்ளே சென்று, ''உம்மி மாமி வந்திருக்காங்க!'' என தாயை அழைத்தாள்.

செய்யிதா ஆமினா குதுப் உள்ளே நுழைந்தார். ஆயிஷா அர்வாவின் குரலால் சிந்தனை கலைந்த செய்யிதா நமீஸா முஸல்லாவிலிருந்து எழுந்து நழுங்கி இருந்த ஆடைகளை சரி செய்து கொண்டு வாசற்பக்கம் சென்று செய்யிதா ஆமினா குதுபிற்கு ஸலாம் கூறி வரவேற்றாள். பரஸ்பரம் இருவரும் குசலம் விசாரித்துக் கொண்டனர்.

செய்யிதா ஆமினா குதுப் ஒரு விதவை. அவர் ஒரு கலாநிதியும் தான். அந்த வட்டாரத்தில் இஃவான் இயக்கத்தின் மாதர் பிரிவின் தலைவியும் கூட. கடந்த இரு வருடங்களுக்கு முன் தனது கணவனை இழந்தார் கலாநிதி ஆமினா குதுப். அவர் கணவர்தான் ஷஹீத் ஸனாநீரி. ஆப்கானிஸ்தானில் பிரிந்து போராடிய பல்வேறு இஸ்லாமியக் குழுக்களையும் ஒன்றுபடுவதற்காக பாடுபட்டார். இதன் காரணமாக ஸியோனிஸ்டுகளின் கைப்பாவையான எகிப்திய அரசு இவர் மீது போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி சிறையில் தள்ளியது. பின் அவரைக் கொடுமை யிழைத்துக் கொலை செய்துவிட்டு நீர்த்தடாகத்தில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டதாக உலகுக்குக் காட்டியது. அன்னாருக்கு அல்லாஹ் சுவனபதியை வழங்குவனானக! ஆமின்.

கலாநிதி ஆமினா குதுப் வட்டாரத்துப் பெண்களின் துன்பங்கள், கஷ்டங்கள் எல்லாவற்றிலும் ஒன்றிக் கலந்து தானும் பங்கெடுத்தாள். முஸ்லிம்களினதும் குறிப்பாகப் பெண்களினதும் விடயத்தில் கலாநிதி ஆமினா குதுப் அத்துணை சிரத்தை காட்டக் காரணம் ரஸூல் (ஸல்) அவர்களின் அந்தப் பொன் மொழி அவளில் ஏற்படுத்திய தாக்கமாகும்.

من أصبح ولم يهتم بأمر المسلمين فليس منهم ( البيهقي)

''யார் பொழுது புலர முஸ்லிம் சமூகத்தின் விடயத்தில் கரிசனை காட்டவில்லையோ அவன் அவர்களைச் சார்ந்தவனல்லன்'' (பைஹகி)

எனவேதான் போலும் இன்றும் விடிந்ததும் விடியாததுமாக சுலைமான் ஹாதிரின் விடயத்தை அறிய அவனின் தாயைத் தேடி வந்திருக்கிறாள் போலும்!

சுலைமானின் வீட்டின் வலப்பக்கத்தில் ஒரு பெரிய அறை. இடப்பக்கத்தில் ஒரு சின்ன அறை. அவற்றுக்கிடையே நடை. அதைக் கடந்து சென்றால் தாழ்வாரம். நமீஸா செய்யிதா ஆமினா குதுபை அந்தத் தாழ்வாரப் பக்கமாக அழைத்துச் சென்று அமரவைத்தாள். இருவரிடையேயும் பேச்சு மொட்டவிழ்த்து விரியத்தொடங்கியது.

''சகோதரி நமீஸா! உங்கள் மகன் சுலைமானைப் பற்றி புதிய விடயங்கள் ஏதும் எட்டியதா? சுலைமான் உல்லாசப் பயணிகளைத்தான் சுட்டு இருக்கிறான் என்று பொய்யைப் பரப்பி விட்டிருக்கிறார்களே..! என்றாள் கலாநிதி ஆமினா குதுப்.

''ஆமாம். சகோதரியே! ஆனால் நிச்சயமாக சுலைமான் அநியாயமாக உல்லாசப் பயணிகளை கொன்றிருக்க மாட்டான். அவனிலே எனக்கு நிறைய நம்பிக்கை உண்டு.''

''அப்படியாயின் கொல்லப்பட்டவர்கள் ஒரு வேளை உளவாளிகளாகத்தான் இருக்க வேண்டும். எமது இயக்கத்தின் இரகசியத் துப்பறியும் பிரிவு அடிக்கடி இஸ்ரவேலிலிருந்து மொஸாட்டின் கைக்கூலிகள் தேசசஞ்சாரிகள் வேடத்தில் நாட்டினுள் நுழைவதாகக் கூறி எச்சரித்துள்ளனர்.'' என்று செய்யிதா ஆமினா குதுப் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, உள்ளத்திலே நிறைந்து கிடக்கும் கவலைகளை எல்லாம் படம்பிடித்துக் காட்டும் விதத்தில் ''உம்'' என்ற ஒரு பெருமூச்சு செய்யிதா நமீஸாவின் செண்பக மொட்டு நாசியிலிருந்து வெளியேறியது.

பின்''அப்படிக் கூட இருக்கலாம். ஆமினா! எப்படியும் சுலைமான் அநியாயமாக மரணங்களை ஏற்படுத்தி இருக்க மாட்டான் என்பதே எனது முடிவு. அவன் இராணுவ சேவைக்குப் போகும் போது அவனுக்கு அஸ்மா நாயகியின் அந்த உபதேசத்தை சொல்லித்தான் அனுப்பினேன் அஸ்மா (ரழி) தனது மகன் அப்துல்லாஹ் பின் சுபைரை கொடுங்கோலன் ஹஜ்ஜாஜ் பின் யூஸுபிற்கு எதிராக போராட அனுப்பிய போது கூறிய அந்த உபதேசத்தைத்தானே!'' ''ஆமாம்! அதைத்தான் ஆமினா!

(தொடரும்)


**இக்கதை 1986இல் எழுதப்பட்டது. அப்பொழுது இருந்த களநிலைமையை வைத்தே எழுதப்பட்டுள்ளது என்பதை வாசகர்கள் கவனத்தில்கொள்ளவும் (ஆர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை



# ரமழானின் கடைசிப் பத்து இஃதிகாப்





முஹம்மத் பகீஹுத்தீன்

ஒரு மனிதன் தனது பொது வாழ்வின் சந்தடிகளை விட்டுத் தூரமாகி, அல்லாஹ்வை நெருங்கும் நோக்கில் தூய்மையான எண்ணத்துடன் இறைவழிபாடுகளில் ஈடுபடுவதற்காக பள்ளிவாசலில் தனித்திருத்தலே இஃதிகாப் என்பதாகும். இது ஒரு சுன்னத்தான அமலாகும். குறிப்பாக ரமழான் மாதத்தில் அதிகூடிய முக்கியத்துவம் செலுத்தப்பட வேண்டிய ஒரு வணக்கமாகும்.

### இஃதிகாப் பற்றிய அல்குர்ஆன் வசனங்கள்

நபி இப்ராஹீம் (அலை) அவர்களும் இஸ்மாயீல் (அலை) அவர்களும் இஃதிகாப் என்ற வணக்க வழிபாட்டை கடைப்பிடித்து வந்ததாக ஸூறா பகறாவின்-125 ஆம் வசனம் தெளிவுபடுத்துகிறது. அவ்வாறே மர்யம் (அலை) அவர்கள் மஸ்ஜிதுல் அக்ஸாவில் இஃதிகாப் இருந்த வரலாற்றை ஸூறா ஆல-இம்ரான் எடுத்தியம்புகிறது.

எனவே இஃதிகாப் என்பது முன்னைய நபிமார்கள் காலம் தொடக்கம் நபிகளாரின் காலம் வரை வாழையடி வாழையாக வழிபட்டு வந்த ஒரு மகத்தான வணக்கம் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

### இஃதிகாப் குறித்து வந்துள்ள ஹதீஸ்கள்

இஃதிகாப் இருப்பது நபிகளார் விட்டுச் சென்ற மிகவும் விருப்பத்திற்குரிய ஒரு சுன்னத்தான நற்செயலாகும். இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள், "இது குறித்து வந்த ஹதீஸ்கள், ஸலபுஸ் ஸாலிஹீன்களது நடைமுறைகளை கூர்ந்து அவதானிக்கும்போது முஸ்லிம்கள் இதனை எப்படி விட்டுவிட்டார்கள் என்பது எனக்கு பெரும் வியப்பாகவே உள்ளது. அபூ பக்கர் பின் அப்துல் ரஹ்மான் (ரழி) அவர்களைத் தவிர வேறு யாரும் இஃதிகாப் இருப்பதை விட்டதாக நான் கண்டதே இல்லை. நிச்சயமாக இது கஷ்டம் என்று கருதியே முஸ்லிம்கள் விட்டு விட்டிருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்கள்.

ரமழான் மாதத்தின் கடைசிப் பத்தில் நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருப்பார்கள் என அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (புகாரி)

நபி (ஸல்) அவர்கள் மரணிக்கும் வரை ரமழான் மாதத்தின் கடைசிப் பத்தில் இஃதிகாப் இருக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் மரணித்த பிறகு அவர்களின் மனைவிமார்கள் இஃதிகாப் இருந்தார்கள் என ஆயிஷா (ரழி) அறிவித்துள்ளார்கள். (புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு ரமழான் மாதமும் பத்து நாட்கள் இஃதிகாப் இருப்பார்கள். மரணித்த வருடத்திலே இருபது நாட்கள் இஃதிகாப் இருந்தார்கள் என அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி)

(நோன்பின்) கடைசிப் பத்து வந்து விட்டால் நபி (ஸல்) அவர்கள் இரவெல்லாம் விழித்திருந்து அமல் செய்வார்கள். தன் குடும்பத்தையும் அமல் செய்வதற்காக எழுப்பிவிடுவார்கள். தன் மனைவி மார்களிலிருந்து தூரமாகி விடுவார்கள் என ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

### இஃதிகாப் இரண்டு வகைப்படும்

**1) வாஜிப்:** யார் இஃதிகாப் இருப்பதாக நேர்ச்சை வைக்கின்றாரோ அவர் மீது இஃதிகாப் வாஜிபாகும். உமர் (றழி) அவர்கள் மஸ்ஜிதுல் ஹராமில் ஒரு நாள் இரவு முழுவதும் இஃதிகாப் இருப்பதாக நேர்ச்சை வைத்தது பற்றி நபி (ஸல்) அவர்களிடம் வினவியபோது "உங்களது நேர்ச்சையை நிறைவேற்றுங்கள்" என்று நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் புகாரி.)

**2) சுன்னத்தான இஃதிகாப்:** ஒருவர் நன்மையை நாடியும், இறை திருப்தியை வேண்டியும் பள்ளிவாசலில் இஃதிகாப் இருப்பது விரும்பத்தக்க ஒரு அமலாகும்.

### இஃதிகாப் இருப்பதற்கான காலம்

இஃதிகாப் இருப்பதற்கென்று குறிப்பிட்ட காலம் கிடையாது. எப்போதும் இருக்கலாம். எவ்வளவு நேரமும் இருக்கலாம். ஆனால் இஃதிகாப் இருப்பதை நேர்ச்சை மூலம் தனக்கு கடமையாக்கிக் கொண்டவர் குறிப்பிட்ட அந்தக் காலப் பகுதியில் இஃதிகாப் இருப்பது கட்டாயமாகும்.

சுன்னத்தான இஃதிகாப் இருப்பவர்களுக்கு கால வரையறை கிடையாது. இஃதிகாப் இருக்கும் நிய்யத்தோடு கொஞ்சம் நேரம் பள்ளி வாசலில் தங்கியிருந்தாலும் அது நிறைவேறும். அவ்வாறே ஒரு நாள் இஃதிகாப் இருப்பதாக நிய்யத் வைத்த நிலையில் இடையில் முறித்துக் கொள்ளவும் முடியும்.

ஒருவர் ஒரு நாள் இஃதிகாப் இருப்பதாக நிய்யத் வைத்தால், அவர் மஃரிப் நேரத்துடன் ஆரம்பித்து மறுநாள் மஃரிப் நேரம் வரை இருக்க வேண்டும் என்பதே பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தாகும்.

ஆனால் பஜ்ர் நேரம் உதயமாக முன்னர் அவர் பள்ளிக்குள் நுழைந்து விட்டால் அதுவும் ஒரு நாளாக கணிக்கப்பட முடியும் என வேறு சில அறிஞர்கள் கருதுகின்றனர். காரணம் நபிகளார் (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்கும் நோக்கத்துடன் மஃரிப் நேரத்தில் மஸ்ஜிதில் நுழைந்தாலும் கூட பஜ்ர் தொழுகைக்கு பின்னரே இஃதிகாபை ஆரம்பித்தார்கள் என்பதை பின்வரும் ஹதீஸ் விளக்குகிறது.

"நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருப்பதற்கு நாடினால் பஜ்ர் தொழுகையை முடித்தவுடன் தனக்குரிய பிரத்தியேகமான இடத்தில் ஒதுங்கி விடுவார்கள்". அவ்வாறே இந்த ஹதீஸ் இஃதிகாப் இருப்பவர்கள் பஜ்ருக்கு பின் தனியான இடமொன்றை ஒதுக்கி அதில் தரிப்பதும் நபி வழி என்பதையே காட்டுகின்றது.

எனவே ஒரு நாள் இஃதிகாப் இருப்பது என்பது மக்ரிப் தொழுகையுடன் அல்லது சுபஹ் தொழுகையுடன் ஆரம்பித்து மறுநாள் மஃரிப் தொழுகையுடன் முடிப்பதாகும் என்று புரிந்து கொள்ள முடிகிறது.

### பஜ்ர் தொழுகையின் பின் பள்ளியில் தரித்திருத்தல்

யார் சுபஹ் தொழுகையை ஜமாஅத்துடன் தொழுதுவிட்டு பின்னர் சூரியன் உதிக்கும் வரை பள்ளிவாசலில் தரித்து அல்லாஹ்வை திக்ர் செய்வதில் திளைத்திருந்து, பின்னர் சூரியன் உதித்து ஒரு ஈட்டி அளவு நேரம் சென்றதன் பின் இரண்டு ரகஅத்கள் தொழுகின்றாரோ அவருக்கு பரிபூரணமான ஒரு ஹஜ்ஜும் உம்ராவும் செய்த நன்மை கிடைக்கும் என அனஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் திர்மிதியில் பதிவாகியுள்ளது. இது பொதுவாக தினமும் செய்யும் ஒரு சுன்னத்தான அமலாக இருந்தாலும் நோன்பு காலங்களில் இரட்டிப்பான நன்மையை தரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

### இஃதிகாபின் றுக்னுகள் (கடமைகள்)

**1) நிய்யத்:** எல்லா செயல்களும் எண்ணங்களைப் பொறுத்தே அமைகின்றன என்ற ஹதீஸ் நிய்யத் கட்டாயம் என்பதை வலியுறுத்து கின்றது.

**2) பள்ளிவாசலில் தரித்திருத்தல்:** குறிப்பிட்ட பள்ளியொன்றில் தரிக்கும் போது அல்லாஹ்வுக்காக இஃதிகாப் இருக்கின்றேன் என்ற எண்ணத்தை வரவழைப்பது கட்டாயமாகும்.

### இஃதிகாப் இருக்கும் பள்ளிவாசல்கள்

இஃதிகாப் இருப்பதற்கு பொருத்தமான இடம் பள்ளிவாசலே என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் குறிப்பிடுகிறது. "இன்னும் நீங்கள் பள்ளிவாசலில் தனித்து இஃதிகாபில் இருக்கும் போது உங்கள் மனைவியருடன் கூடாதீர்கள்." (ஸூறா பகறா: 187)

இந்த அல்குர்ஆன் வசனம் இஃதிகாப் இருக்குமிடம் மஸ்ஜித் என்று மட்டுமே கூறுகிறது. எனவே ஜும்மா பள்ளியில் மாத்திரம் அல்லது மக்கா, மதீனா, மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாசல்களில் மாத்திரம் அதற்குரிய இடம் என வரையறை எதுவும் கிடையாது. ஏனைய பள்ளிவாசல்களை விட இந்த மூன்று பள்ளிவாசல்களும் மிகவும் சிறப்புக்குரியன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இமாம் அபூ ஹனீபா, இமாம் அஹ்மத் போன்றோரின் கருத்துப் படி ஐவேளை தொழுகை நடைபெறுகின்ற எந்த பள்ளிவாசலிலும் இஃதிகாப் இருக்கலாம். இமாம் ஷாபிஈ, இமாம் மாலிக் போன்றோரின் கருத்துப்படி "எந்த பள்ளிவாசலிலும் இஃதிகாப் இருக்கலாம். அங்கே ஐவேளையும் தொழுகை நடைபெற வேண்டும்" என்ற நிபந்தனை கூட கிடையாது. ஆனால், ஜும்ஆ தொழுகை நிறைவேற்றப்படும் பள்ளிவாசலில் இஃதிகாப் இருப்பது மிகவும் சிறந்ததாகும். காரணம் ஜும்ஆ தொழுகைக்காக வெளியேறிச் செல்லும் தேவை கூட ஏற்படாது.

### பெண்கள் இஃதிகாப் இருத்தல்

நபி (ஸல்) அவர்கள், மரணிக்கும் வரை ரமழான் மாதத்தின் கடைசிப் பத்தில் இஃதிகாப் இருக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். அவர்கள் மரணித்த பிறகு அவர்களின் மனைவிமார்கள் இஃதிகாஃப் இருந்தார்கள் என ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ் ஆண்களைப் போன்றே பெண்களும் பள்ளிவாசல்களில் இஃதி காப் இருப்பது சுன்னத்தான ஒரு அமல் என்பதை தெளிவுபடுத்த போதுமாகும். இது பொதுவான சட்ட ஒழுங்காகும். அதுவே பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துமாகும்.

ஆனால் பெண்கள் தங்களது வீடுகளில் தொழுகைக்காக ஒதுக்கியுள்ள அறைகளில் இஃதிகாப் இருக்க முடியும் என சில அறிஞர்கள் கூறியுள்ளனர். புனித ரமழான் மாதத்தின் மகத்தான பாக்கியங்களை அடைந்து கொள்வதில் பெண்களுக்கான வாய்ப்பு வசதிகள் மூடப்படக் கூடாது என்பதே இந்த அபிப்பிராயத்தை கொண்டுள்ள அறிஞர்களின் நியாயமாகும். இறை தொடர்பும், உளத்தூய்மையும் இஃதிகாபின் பிரதான இலக்காகும். பெண்களின் தொழுகை அறையில் இஃதிகாப் இருப்பதால் இந்த நோக்கம் நிறைவேறுகிறது.

ஹனபி மத்ஹபின் கருத்துப்படி பெண்கள் [illegible] இருப்பதை விட தங்களது வீட்டு தொழுகை அறையில் இருப்பதே மிகவும் சிறந்ததாகும் என்றும் கூறியுள்ளனர்.

இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் கருத்து வேறுபாடுகள் சமூகத்திற்கு அருளாகவே உள்ளன. நெருக்கடியான சந்தர்ப்பங்களில் பரந்து விரிந்த பாதைக்கு அது வழிகாட்டுகின்றது. எனவே கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப அந்த கருத்து வேறு பாட்டின் உச்ச பயனை அடைவது எமது கடமையாகும்.

### நோன்பும் இஃதிகாபும்

ரமழான் நோன்பு காலத்திலும் ரமழான் அல்லாத காலத்திலும் இஃதிகாப் இருக்கலாம். ரமழான் காலத்தில் இஃதிகாப் இருப்பது மிகச் சிறந்தது. ரமழான் இறுதிப் பத்தில் இஃதிகாப் இருப்பதில் நபி (ஸல்) அவர்கள் கூடிய கரிசனை காட்டியுள்ளதோடு அதனை தூண்டியுமுள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்கள் நோன்பின்றி இஃதிகாப் இருந்ததில்லை என ஆயிஷா (றழி) அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸ் இஃதிகாப் இருப்பதற்கு கட்டாயம் நோன்பு வைக்க வேண்டும் என்பது பொருள் அல்ல. அது ஒரு நிபந்தனையுமல்ல. காரணம் நபி (ஸல்) அவர்கள் ஷவ்வால் மாதத்தில் நோன்பின்றி 10 நாட்கள் இஃதிகாப் இருந்ததாகவும் இமாம் புகாரி (ரஹ்) தனது ஸஹீஹ் புகாரியில் ஒரு ஹதீஸை பதிவு செய்துள்ளார்கள். எனவே ரமழான் அல்லாத மாதங்களில் இஃதிகாப் இருப்பவர் விரும்பினால் நோன்பு பிடிக்கலாம். விரும்பினால் நோன்பின்றி இஃதிகாப் இருக்கலாம். இருப்பினும் நோன்புடன் இஃதிகாப் இருப்பது மிகவும் விரும்பத்தக்கதாகும்.

### இஃதிகாப் ஏன்? எதற்கு?

மனித உள்ளம் அல்லாஹ்வை நோக்கி பயணிப்பது ரப்பானிய பயணமாகும்.' அந்த ரப்பானிய பயணத்தை மேற்கொண்டு இறை தொடர்பை அதிகரித்து, உள்ளத்தை சீர்செய்து கொள்வதே இஃதிகாபின் மிகப் பிரதான நோக்கமாகும். அவ்வாறே கடைசிப் பத்தில் இஃதிகாப் இருப்பதால் புனித லைலதுல் கத்ர் இரவை அடைந்து கொள்ள முடியும். மேலும் உலக விவகாரங்களில் ஈடுபடுவதை குறைத்துக் கொண்டு பற்றற்று வாழ பழகுவதுடன் ஆசைகளை விட்டு தூரமாகி நோன்பைப் பாதுகாத்துக் கொள்ளவும் இஃதிகாப் உதவுகிறது.

### இஃதிகாப் இருக்கும் போது

இஃதிகாப் இருப்பதிலிருந்து முழுமையான நன்மையை அடைந்து கொள்ள விரும்பும் ஒருவர் வீணான பேச்சுக்களை விட்டும் தவிர்ந்து கொண்டு தொழுகை. குர்ஆன் ஓதுதல், திக்ர் செய்தல் போன்ற இபாதத்களிலேயே கழிக்க வேண்டும். தனியாக இஃதிகாப் இருப்பது போலவே கூட்டாகவும் பலர் சேர்ந்து இஃதிகாப் இருக்கலாம். ஆனால் கூடிக் கதைத்து அதன் பலனை இழந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குழுக்களாக இருந்து குர்ஆன் விளக்கங்களை, சன்மார்க்க சட்டங்களை, ஸீராவை மற்றும் பயனுள்ள புத்தகங்களையும் படிக்க முடியும்.

### இஃதிகாப் இருப்பவரை பாதிக்காத செயற்பாடுகள்

1. தேவைக்காக வெளியேறுதல்: நபி (ஸல்) அவர்கள் இஃதிகாப் இருக்கும் சமயத்தில் தேவையின் நிமித்தம் நபியவர்களிடம் வந்த அவர்களது மனைவி ஸபிய்யா (றழி) அவர்களை வீடுவரை சென்று வழியனுப்பினார்கள்.
2. முடி களைதல், நகம் வெட்டுதல், தலை சீவுதல்; இது போன்ற சுத்தம் பேணும் விடயங்களில் ஈடுபடலாம்.
3. உண்ணுதல், பருகுதல், தூங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்.
4. ஜும்ஆ தொழுகைக்காக, நோயாளியை தரிசிப்பதற்காக, ஜனாஸாவில் கலந்து கொள்வதற்காக வெளியேறுவதை அலி (றழி) அவர்கள் விரும்பத்தக்கதாகக் கருதியுள்ளார்கள்.
5. சில ஸஹாபாக்கள் இஃதிகாபின் போது சமூக நலப் பணிகளில் கூட ஈடுபட்டுள்ளார்கள்.

இங்கு ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்வது சிறந்தது. உண்மையில் இஸ்லாத்தில் துறவரம் என்பது கிடையாது. இஃதிகாப் என்ற பெயரில் சமூக உறவை முற்று முழுதாக அறுத்து விடக் கூடாது என்பதையே இது காட்டுகின்றது. நோன்பும் இஃதிகாபும் அல்லாஹுதஆலாவை நெருங்கும் முக்கியமான வணக்கங்களில் உள்ளதாகும். எனினும் இஸ்லாத்தின் தனிப்பண்புகளில் ஒன்றான சமநிலை பண்பை பேணும் வகையில் தான் இஃதிகாபுக்கான நபிகளாரின் வழிமுறை அமைந்துள்ளது.

### இஃதிகாபை முறிக்கும் கருமங்கள்

எந்தத் தேவையுமின்றி வேண்டுமென்றே பள்ளியில் இருந்து வெளியேறுதல், மதம் மாறுதல், மயக்கம் அல்லது மனநோய் காரணமாக புத்தி நீங்குதல், ஹைழ், நிபாஸ் ஏற்படுதல், உடலுறவு கொள்ளுதல் ஆகிய, ஐந்து விடயங்களும் இஃதிகாபை முறிக்கும் கருமங்களாகும்.

### இஃதிகாபின் விளைவுகளும் மனித வாழ்வில் அது விட்டுச் செல்லும் தடயங்களும்

இஃதிகாப் தேவையற்ற சகவாசம், அதிகமாக தூங்குதல், நாவினால் ஏற்படும் பாவங்களிலிருந்து பாதுகாப்பு வழங்குவதுடன் இறை நினைவோடு வாழ்வதற்கும் அல்குர்ஆன் ஓதுவதற்கும் அல்லாஹ்வை பற்றி சிந்திப்பதற்கும் அதிகமாக தொழுவதற்கும், இன்னும் பல வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் துணை செய்கின்றது.

மேலும் மஸ்ஜித் சூழலில் வாழ விரும்பும் மனப்பாங்கு உருவாகுவதுடன் என்றும் எப்போதும் உள்ளம் மஸ்ஜிதோடு தொடர்பு கொண்டு வாழ வழி செய்கிறது. அவ்வாறே தொழுகை நேரங்களை அவதானத்துடன் எதிர்பார்த்துக் காத்திருத்திருக்கும் அடியானாக மாறுவது இஃதிகாப் விட்டுச் செல்லும் தடயங்களில் ஒன்றாகும். மேலும் அல்குர்ஆனுடனான தொடர்பு பலம் பெறுவதுடன் மனக் கட்டுப்பாட்டிற்கும் பொறுமை காப்பதற்கும் இஃதிகாப் பயிற்சியளிக்கின்றது. பாவங்களை விட்டும் தூரமாகி தினமும் தௌபா, இஸ்திஃபார் செய்யும் மனிதனாக மாறுவதும் இஃதிகாப் மனித வாழ்வில் ஏற்படுத்தும் விளைவுகளே. அதன் விளைவுகளின் சிகரமாக மனிதன் காசு கொடுத்து வாங்க முடியாத நிம்மதியும் மன அமைதியும் பரிசாக கிடைக்கிறது.

### இஃதிகாப் இருக்க நிய்யத் வைத்துள்ளவர்களின் கவனத்திற்கு

முறையாக விடுமுறை எடுக்காமல் தொழிலை விட்டு விட்டு அல்லது பெண்கள் தமக்குள்ள கடமையான பணிகளை கவனிக்காமல் இஃதிகாப் இருப்பது அங்கீகரிக்க முடியாத செயலாகும். ஒரு சுன்னத்தான அமலை செய்வதற்காக அதைவிட முதன்மைப்படுத்த வேண்டிய கடமைகளை விட்டு விடுவது தவறாகும். எனவே இந்த விடயத்தில் நலன்களை எடை போட்டுப் பார்த்து முன்னுரிமை வழங்க வேண்டிய விடயத்தில் கவனமெடுத்து நடந்து கொள்ள வேண்டும்.

### தியானமும் இறைவன் பால் ஒதுங்குவதும்

நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்வில் இரண்டு குகையில் நுழைந்துள்ளார்கள். ஒன்று நபித்துவம் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலும் எதிர்பால் கவர்ச்சியும்



முறைசார் கல்வியில் ஈடுபட்டுள்ள மாணவ மாணவிகளின் கற்றல் செயற்பாட்டில் எதிர்பால் கவர்ச்சி ஏற்படுத்தும் எதிரிடையான தாக்கம் குறித்து சில ஆய்வுகள் நடந்துள்ளன. இன்றைய சமூக அமைப்பில் எதிர்பால் கவர்ச்சியைத் தூண்டும் காரணிகள் பல. சமூக வலைத்தளங்களின் பெருக்கம் அதன் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக மாறியுள்ளது. கூட்டுக் குடும்ப அமைப்பு, அதீத நகரமயமாக்கம், நெருக்கமான குடியிருப்புகள், மாறி வரும் பெண்கள் உடையமைப்பு, சினிமா, தொடர் நாடகங்கள் என எதிர்பால் கவர்ச்சியைத் தூண்டும் காரணிகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது.

எல்லா வற்றுக்கும் முத்தாய்ப்பு வைப்பது போல் அமைவது பாடசாலைகளில் காணப்படும் ஆண்-பெண் கலவன் வகுப்பறைகளாகும். பெரும்பான்மையான கலவன் பாடசாலைகளில் தரம் 7 இற்குப் பின்னர் எதிர்பால் கவர்ச்சி சார்ந்த சிக்கல்கள் மாணவர்களின் கற்றலை பல்வேறு வழிகளில் பாதிக்கின்றது.

சினிமாக் கைத்தொழில் இளசுகளை மையப்படுத்தியே திரைப்படங்களை தயாரித்து வெளியிடுகின்றது. பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகம் என அன்னைத்து வகை கல்வி நிறுவனங்களிலும் ஆசிரியரை கேலி செய்யும் காட்சிகளோடு மாணவ-மாணவிகள் காதல் செய்யும் காட்சிகளும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

வகுப்பறைகளில் காதல் அரும்பு விட்டு வளர்கின்றது. சினிமாவின் செயற்கை இருட்டில் காட்டப்படும் காதல் காட்சிகளை நிஜ உலகில் காண்பதற்கு மாணவர்கள் உந்தப்படுகின்றனர். அதனால் அனாவசியமான விடயங்களில் மனதைக் குவித்து, தமது கல்வியைப் பாழ்படுத்திக் கொள்கின்றனர். ஏற்கனவே நாம் கற்றலில் கவனம் வகிக்கும் பங்கினை விரிவாக ஆராய்ந்தோம்.

மாணவர்களின் கவனத்தை திசை திருப்பும் பலமான காரணிகளில் ஒன்றாகவே எதிர்பால் கவர்ச்சி அமைந்துள்ளது. கட்டிளமைப் பருவத்தில் சுரக்கும் ஹோமோன்களின் தாக்கமே இதற்குப் பின்புலமாக உள்ளது. கற்றலில் மிகப் பெரும் கவனக் கலைப்பான் இதுவென்றே அடையாளப்படுத்தலாம். இலட்சியத் துடிப்பும் மன வலிமையும் அற்ற மாணவர்கள் இந்த வலையில் இலகுவாக விழலாம்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் கலவன் வகுப்பறைகளைச் சேர்ந்த 50 மாணவர்கள் (தரம் 7,8 ஐச் சேர்ந்தவர்கள்) ஓர் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 35 பேர் ஏதோவொரு வகையில் எதிர்பால் கவர்ச்சி சார் பிரச்சினைக்கு உட்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் பெரும்பான்மையும் கற்றலில் பின்னடைந்திருந்தனர்.

உயர் வகுப்பு மாணவர்களிடையே இதன் தாக்கம் அதிகமாக உள்ளது. எனவே மாணவர்கள் ஒன்றை சிந்திக்க வேண்டும். ஹோமோன்களின் தாக்கத்திற்கு உட்பட்டு, கற்றலையும் உயர் பெறுபேறுகளையும் அதற்கு விலையாகக் கொடுத்து எதிர்கால வாழ்வை மொத்தமாகவே பாழ்படுத்த வேண்டியதில்லை. இது ஒரு வயதுக் கோளாறு. அதிலிருந்து மாணவர்கள் தப்பித்துக் கொள்ளலாம். மன உறுதியோடும் நம்பிக்கையோடும் கற்றலில் கவனம் செலுத்தலாம்.

கற்கும் காலங்களில் சினிமாவை அதிகம் பார்ப்பதை தவிர்ப்பதோடு, ஆன்மீக விடயங்களில் மாணவர்கள் அதிகம் ஈடுபாடு கொள்ள வேண்டும். அப்போதே இந்தப் பிரச்சினையிலிருந்து விடுபடலாம். அனாவசியமான இந்த நெருக்கடியினால் பாடசாலைக் கல்விக்கே இடையில் முற்றுப் புள்ளி வைத்த மாணவர்கள் உள்ளனர். சில மாணவர்கள் பாடசாலைகளையே அடிக்கடி மாற்றிக் கொள்கின்றனர். குடும்ப ரீதியான தகராறுகளுக்கும் இது இட்டுச் சென்றுள்ளது.

பருவத்தை அறிந்து பயிர் செய்தல் வேண்டும். மாணவ பருவத்திலுள்ளவர்களின் பணி திறமையாகக் கற்பதே. கற்பதில் மனம் முக்கியமானது. அதன் ஒருமுகப்பாடும் கவனக் குவிவும் இழக்கப்படும்போது வினைத் திறனுள்ள கற்றலை எதிர்பார்க்க முடியாது. எனவே, மாணவர்கள் இவ்விடயத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

# கணக்கியல் கற்கைநெறிகள்

**ஹனான் அஷ்ராவி**

உலகம் மிக வேகமாக மாறி வருகின்றது. மாற்றம் என்பதைத் தவிர ஏனைய எல்லாமே மாற்றம் பெற்று வருகின்றது. புதிய சவால்கள், அறைகூவல்கள், புத்தாக்கங்கள் என மாற்றத்தின் பரிமாணங்கள் பல. உலகம் இன்று விரும்பியோ விரும்பாமலோ முதலாளிய பெருச்சாளிகளின் கைகளில் சிக்கி விட்டது. முதலாளியம் இன்று இரு தூண்கள் மீது எழுந்து நிற்கின்றது. ஒன்று முகாமை, மற்றொன்று முகாமை கணக்கியல்.

மிகப் பிரமாண்டமான கம்பனிகளின் வகைதொகையற்ற இலாபத் திரட்டலை கணக்கீடு செய்ய நிபுணத்துவம் வாய்ந்த கணக்காளர்கள் தேவை. ஒரு காலத்தில் கணக்குப் பிள்ளைகளாகவும் முகாமையாளர்களாகவும் இருந்து ஆற்றிய பணிகளை இப்போது முகாமைக் கணக்காளர் (Management Accountant) செய்கின்றனர். இத்தகைய கணக்காளர்களுக்கு ஓர் உலகத் தரப்படுத்தலும் (Standardization) பூகோள வலையமைப்பும் (Global Network) உருவாக்கப்பட்டுள்ளது.

(CIMA, Charted Institute of Management Accountancy, AAT) Association of Accounting Technicians ஆகிய இரண்டும் 170 இற்கும் மேற்பட்ட நாடுகளை தளமாகக் கொண்டு பல்லாயிரக்கணக்கான அங்கத்தவர்களோடு செயல்படுகின்றது. மட்டுமன்றி, எதிர்காலத்தில் நிபுணத்துவம் வாய்ந்த கணக்காளர்களை உருவாக்கும் நோக்கில் அது சார்ந்த கற்கைநெறிகளையும் வழங்கி வருகின்றது.

International Federation of Accountants அமைப்பின் அங்கத்துவத்தையும் இவை பெற்றுள்ளன. உலகின் பல்வேறு நாடுகளில் மூன்றாம் நிலைக் கல்வியை வழங்கும் முதன்மை நிறுவனங்களாகவும் இவை மாறியுள்ளன. AAT Sri Lanka கணக்கியல் துறையில் தொழிற் தகைமையை வழங்கும் பிரதான நிறுவனங்களில் ஒன்று. இதன் தலைமை நிறுவனம் ஐக்கிய இராச்சியத்தை தளமாகக் கொண்டது. கணக்கியலில் சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றது. இலங்கையில் 1987 இல் லண்டன் கணக்கியல் நிறுவனத்தின் மாதிரிகளைத் தழுவி உருவாக்கப்பட்டது. சமீபத்தில் தர மேம்பாட்டிற்கான ISO சான்றிதழையும் பெற்றுக்கொண்டது.

இலங்கையில் இது லண்டன் AAT நிறுவனத்தின் வழிகாட்டல்கள் மற்றும் ஒத்துழைப்புடன் நடுத்தர மட்ட கணக்காளர்களை (Middle Level Accounts) உருவாக்கி வருகின்றது. மாணவர்கள், தொழில் கொள்வோர், பொதுமக்கள் ஆகியோரை இலக்காகக் கொண்டு வளங்கள், தகவல்கள் பயிற்சியின் மூலம் கணக்காளர்களை உருவாக்கி வருகின்றது.

தற்போது நாரஹென்பிடியில் இலங்கையின் தலைமைக் காரியலயம் இயங்கி வருகின்றது. கால் நூற்றாண்டு காலமாக இலங்கையில் பணியாற்றுவரும் AAT இல் கணக்கியல் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் இன்று அரச, தனியார் துறைகளில் தேர்ந்த கணக்காளர்களாக தொழில்புரிந்து வருகின்றனர்.



AAT கணக்கியல் கற்கைகளும் பரீட்சைகளும்

அடிப்படை மட்டம் (Foundation Level), இடைநிலை மட்டம் (Intermediate), இறுதி நிலை (Final) என மூன்று கட்டங்களாக பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. மாணவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில், தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்றலாம். வருடத்தில் இரு முறைகள் பரீட்சை நடைபெறும். ஜூன், டிசம்பர் ஆகிய இரு மாதங்களிலுமே இவ்வாறு பரீட்சை நடைபெறுகின்றது. ஒவ்வொரு மட்டத்திற்குமான காலப் பகுதி ஆறு மாதங்கள் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் ஒன்றரை ஆண்டுகளில் முழுக் கற்கைநெறியையும் அதாவது மூன்று மட்டங்களையும் பூர்த்தி செய்யலாம்.

க.பொ.த. சாதாரண தரத்தை பூரணப்படுத்தியவர்கள், உயர் தரத்தைப் பூரணப்படுத்தியவர்கள் என அனைவரும் விண்ணப்பிக்கலாம். உயர் தரத்தில் வணிகத் துறையில் கற்ற மாணவர்கள் ஒரு வருடத்தில் முழுக் கற்கைநெறியையும் பூரணப்படுத்தலாம். ஏனெனில், அடிப்படை மட்டம் (Foundation Level) அவர்களுக்கு அவசியமில்ல. உயர் தரம் எழுதி விட்டு முடிவுகளுக்காக காத்திருக்கும் மாணவர்கள் தமது நேர காலத்தை வீணடிக்காமல் இக்கற்கைக்கு விண்ணப்பிக்கலாம். சாதாரண தரத்தில் ஆறு பாடங்கள் சித்தியடைந்த மாணவர்களும் AAT கணக்கியல் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்.

ஒரு கம்பனியில் Accountant Clerk, Audit Clerk, Book Keeper ஆக ஐந்தாண்டு கால அனுபவம் கொண்டவர்களும் Accountant Trainee ஆக பணியாற்றியவர்களும் அல்லது அதற்கு நிகரான உயர் கல்வித் தகமை கொண்டோரும் தம்மை AAT கணக்கியல் கற்கை மாணவர்களாக பதிவு செய்து கொள்ளலாம்.

**விண்ணப்பிக்கும் முறை**

பதிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் மற்றும் மாணவர் கையேட்டினை AAT Sri Lanka தலைமை காரியலயம், மாத்தறை, குருணாகல், யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை (பக்.14)

# மீள்பார்வை 20 ஆவது ஆண்டு நிறைவில்...

2000 களின் தொடக்கம் மறக்க முடியாத ஒரு தசாப்தம். அதன் ஆரம்பத்தில் கிடைத்த பயண அனுபவங்கள் தனித்துவமானவை. முஸ்லிம் சமூகம் குறித்துகள ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும் என்ற உந்துதல் நியாயமான தொலைவு பயணம் செய்ய வைத்துள்ளது. மரபிலும் பண்பாட்டுத் தொடர்ச்சியிலும் உள்ள தீராத அக்கறை, மக்களின் வாழ்வியல் கோலங்களைத் தேடி அலையும் பற்றுறுதியைத் தந்தது. அதன் மூலம் அபூர்வமான சம்பவங்கள், மறக்க முடியாத மனிதர்கள், வெளிச்சம் படாத பக்கங்கள், வாழ்க்கைச் சித்திரங்களின் விசித்திரங்கள், இல்லாத மற்றொன்று என பல பொலிவான அனுபவங்கள் கிட்டியது.

பேரூந்தின் பக்கவாட்டில் ஜன்னலோரமாக அமர்ந்து, ஒரு கையில் பழைய நூலொன்றுடனும் மறு கையில் கெமராவுடனும் செய்யும் பயணம் சுவாரஸ்யமானது. நூலை மட்டுமன்றி, ஜன்னலுக்கு வெளியே தெரியும் மனிதர்களையும் வாசிக்கும் அனுபவம் செழுமையானது.

அக்கால கட்டத்தில் எகிப்தின் அரசியல் சிந்தனையாளர் கலாநிதி தாரிக் அல் பிஷ்ரி முஜ்தமஃ சஞ்சிகையில் எழுதி வந்த 'உம்மதீ பில் ஆலம்' (உலகில் எனது சமூகம்) எனும் பத்தியை வாசிக்கக் கிடைத்தது. அதன் பிரதி விம்பமாக 'இலங்கையில் எனது உம்மா' வைப் பற்றிய தேடல் அதிகரித்தது.

கலாசாரப் பன்மைகள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள், வட்டார மொழி வழக்குகள் குறித்து பண்பாட்டு மானிடவியல் சார்ந்த நூல்களைப் படித்திருக்கின்றேன். அவற்றை களத்திற்குச் சென்றே ஆய்வாளர்கள் தமது அக்கறைக்குரிய பேசுபொருளாக மாற்றியுள்ளனர். இதுவும் இப்பயணங்களின் பின்புலமாக இருந்திருக்கலாம்.

உலகை அதன் அனைத்துக் குறைகளோடும் நேசிக்கக் கற்றுத் தருபவை கள அனுபவங்கள்தான். ஒதுக்கப்பட்டோருடனும் ஒடுக்கப்பட்டோருடனும் விளிம்பு நிலையில் தத்தளிக்கும் மனித ஜீவிகளின் வாழ்வியல் கோலங்களுடனும் நம்மை அடையாளப்படுத்திக் கொள்வதிலுள்ள மன நிறைவு தனித்துவமானது. இந்தப் பின்னணியிலிருந்தே எனது பயணம் தொடங்குகிறது.

2000 இன் தொடக்கத்தில் மாத்தறை மாவட்டத்திலுள்ள திக்வல்லையில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்தேன். அங்கு என்னிடம் அறபு, இஸ்லாமிய வகுப்புகளுக்கு வந்துகொண்டிருந்த 2 நண்பர்களிடம் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தை சுற்றிப் பார்க்க வேண்டும். அங்கு முஸ்லிம்கள் வாழும் இடங்களை அதன் சமூக, கலாசார நிலைமைகளை அறிய வேண்டும். குறிப்பாக, அதன் வரலாற்றைத் தேட வேண்டும் என்ற ஆர்வம் மேலிடுகின்றது எனக் கூறியபோது, உடனே அவர்கள் தமக்கும் அதில் ஈடுபாடு உள்ளதாகத் தெரிவித்தனர்.

நாம் அங்கு செல்லலாம். நமக்குத் தெரிந்த நண்பர்கள் சிலரும் அங்கு உள்ளனர். தேவையானால் அவர்களின் உதவியையும் பெற்றுக்கொள்ளலாம் என்று ஆலோசனை கூறினர். அவர்கள் என் வேண்டுதலை இவ்வளவு சீக்கிரமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் எண்ணவில்லை.

கையில் ஒரு சிறிய பை. அதற்குள் திணிக்கப்பட்ட சில வெள்ளைக் காகிதங்கள். ஒரு சிறிய கெமரா. எழுதுவதற்கு ஒரு பேனை. அருந்துவதற்கு ஒரு தண்ணீர் போத்தல். இவைதான் எமது பயணச் சாதனங்கள். முதலில் ஹம்பாந்தோட்டை நகர், தொடர்ந்து மலேகொலனி, நலகம, யகஸ்முல்ல, வீரகெடிய என பயணம் தொடர்ந்தது.

நகர்ப் புறம் தவிர்ந்த முஸ்லிம்கள் வாழும் ஏனைய அனைத்து இடங்களும் கிராமியத் தன்மை கொண்டவை. பழமையும் பாரம்பரியமும் மண்டிக் கிடக்கும் மண். மக்கள் மிகுந்த ஓய்வுடனும் தன்னியல்போடும் அங்கு வாழ்கின்றனர். வாழ்க்கை மீது உண்மையான பிடிப்பு அவர்களுக்கு இருக்கின்றது.

முடிமூடி அணியாத மனிதர்கள் அவர்கள். தமது சொந்தப் பெறுமானங்களுக்கு ஏற்ப வாழ்கின்றனர். அடுத்தவர்களுக்காக வாழும் தேவை அற்றவர்கள் அவர்கள். ஏழ்மை இருந்தாலும் எளிமை அவர்களின் வாழ்வோடு ஒட்டியிருக்கின்றது. அவர்களோடு பேசும்போதும் பழகும்போதும் இந்த உண்மை புலனாகின்றது.

மாவட்டம் முழுக்க கடும் வெயிலில் பசியோடும், சிலபோது தாகத்தோடும் அலைந்து திரிந்து சேர்த்த ஆவணங்கள், நேர்காணல்கள் எல்லாவற்றையும் தொகுத்து அறிக்கைப்படுத்தினேன். மீள்பார்வையில் ஆறு இதழ்களில் ஒரு தொடர் கட்டுரையாக அது பிரசுரமானது.

முழு மாவட்டத்தையும் சுற்றியதில் நலகம, யகஸ்முல்ல கிராமங்களுக்குச் சென்ற அனுபவங்கள் நீங்காத நினைவுகளாய் இன்னும் நெஞ்சில் எஞ்சியுள்ளது.

பிரதான வீதியிலிருந்து நலகமைக்கு 3 கி.மீ. தூரம் நடந்தே செல்ல வேண்டும். இரு பக்கங்களும் அடர்ந்த காடு. வனாந்திரங்களின் செறிவையும் சில்லுறுகளின் சில்மசங்களையும் பார்க்கும்போது இந்த வீதியில் ஒரு கிராமம் இருக்குமா என்ற சந்தேகம் முதலில் எழுந்தது. போகப் போக புதிர் அவிழ்ந்தது.

பொதுவாக இது போன்ற கோடிப் புற கிராமங்களுக்கு பொதுப் போக்குவரத்து வசதிகள் எதுவுமில்லை. மோட்டார் சைக்கிளில் அல்லது முச்சக்கர வண்டிகளில்தான் பயணம் செய்ய வேண்டும். வசதியற்றவர்கள் கால்நடையாகவே செல்ல வேண்டும். அந்த ஊருக்குச் செல்லும் பாதை அனுபவங்கள் எனது ஊரையே நினைவுபடுத்தியது. இரண்டு பக்கங்களிலும் சூரைச் செடி காய்த்துப் பழுத்திருந்தது. அவற்றைப் பிடுங்கி வாயில் போட்டுக் கொண்டே நடந்தோம்.

சூரை என்பது முட்கள் நிறைந்த நீள் வட்டவடிவான இலைகளைக் கொண்ட ஒரு செடியாகும். அதற்கு தமிழ் மரபில் சரியான பெயர் என்ன என்பது தெரியவில்லை. எங்கள் ஊரின் வட்டார வழக்கில் அதற்கு 'சூரை' என்று பெயர்.

யகஸ்முல்ல கிரர்மத்துக்குச் சென்றோம். அங்கு அணிவகுத்து நின்ற தென்னை மரங்கள் எங்களை ஆவலோடு வரவேற்றன. குளத்தில் மல்லாந்து தூங்கிய தாமரைகள் எமது வருகை கண்டு புன்னகைத்தன. ஒரு அழகான குளம். சூழவும் தென்னை மரங்கள். மரங்களுக்கிடையில் பக்கத்திலும் தூரமாகவும் சிறு சிறு வீடுகள். சுத்தமான காற்று. இயற்கையான வாழ்வு. இயல்பான மனித உறவுகள். எளிமையால் போர்த்தப்பட்டிருக்கும் சமூகம். இடையறாத உழைப்பு.

மறக்க முடியாத அனுபவங்களில் மற்றொன்று மலேகொலனி. நில்வளவ கங்கை ஊடறுத்து ஓடும் அழகிய கிராமம். நான் சென்றிருந்த காலம் அம்பலாந்தோட்டை நகரிலிருந்து இரு பக்கங்களிலும் கம்பி வலையால் மூடப்பட்ட லொறிகளின்தான் அங்கு செல்ல வேண்டும். பொதுப் போக்குவரத்து வாகனமாக அதுதான் அன்று இருந்தது. இரு பக்கவாட்டுகளிலும் அமர்ந்து செல்லும் மக்கள், முகத்திற்கு முகம் பார்த்துப் பேசி அனுபவங்களைப் பகிர்ந்து செல்வர்.

சிங்களத்தில் வெறுமனே சமாளிக்கத் தெரிந்த ஒரு காலகட்டத்தில் தனிச் சிங்கள ஆதிக்கமுள்ள ஒரு மாவட்டத்தை ஒரு குறிப்புப் புத்தகத்தோடு சுற்றி வந்த அனுபவம் சுவாரஸ்யமானது. போர் அப்போது மிகத் தீவிரமான நடைபெற்று வந்தது. தென்னிலங்கையில் தமிழில் பேசுபவர்களை சந்தேகத்தோடு பார்த்த காலமது.

இந்த எல்லா நெருக்கடிகளையும் கடந்து சென்ற அந்தப் பயணங்கள் ஈர்ப்பு விசையுடன் ஆக்க வேண்டிய இலக்கிய படைப்பின் பதிவுக்குத் தகுதியானவை என்பதை இப்போது உணர முடிகின்றது.

அபூ ஆகிப் ஸெய்ன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை... (7ம் பக்கத் தொடர்)

(7ம் பக்கத் தொடர்)

பாதிப்பில்லாமல் பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்பதே எனது கருத்து. தனது தனித்துவம் பற்றியும் மாறிக்கொண்டு செல்லும் உலகில் தமது இருப்பு பற்றியும் முற்போக்காக சிந்திக்க வேண்டிய தேவை முஸ்லிம் சமூகத்துக்கு இருக்கிறது.

- **முஸ்லிம்களின் பிரச்சினைகள் இன்று தேசிய மட்டத்தில் கலந்துரையாடப்படுவதில்லை. முஸ்லிம் சமூக அரசியல்வாதிகளும் இவற்றை கவனத்திற் கொள்ளாமல் இருந்து வரும் நிலையில் முஸ்லிம் சமூகத்திற்குள் ஒரு பொறி முறை உருவாக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்த உங்களுடைய நிலைப்பாடு என்ன?**


முஸ்லிம் சமூகமும் அரசியலும் பலமாக உடைவுக்குட்பட்டிருக்கிறது என்பதே இதன் பொருள். அரசியல் வாதிகளிடத்திலும் சமூக மட்டத்திலும் விழிப்புணர்வு ஏற்படாத வரையில் முஸ்லிம் சமூகப் பிரச்சினைகள் தொடர்ந்தும் கவனிப்பாரற்றே விடப்படும். இது முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமான ஒரு விடயமல்ல. தங்களது நேர்மையாலும் பழக்கவழக்கங்களாலும் இந்த நாட்டில் பல இனங்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று ஆட்சியாளர்களாலும் சலுகைகள் வழங்கப்பட்ட ஒரு சமூகமாக வாழ்ந்த பல நூற்றாண்டு வரலாறு இந்நாட்டு முஸ்லிம்களுக்கு உள்ளது.

இந்த நாட்டில் அரசியலிலும் முஸ்லிம் தலைவர்கள் முக்கிய பாத்திரத்தை வகித்திருக்கிறார்கள். இன்று முஸ்லிம்களுக்கு எதிராக பாரிய எதிர்ப்புக்களும் சவால்களும் எழுகிறது என்றால் அல்லது முஸ்லிம்களின் பிரச்சினைகள் கவனிக்கப்படுவதில்லை என்றால் அதற்கு முற்றாக ஆட்சியாளர்களையும் மற்றய இனத்தவர்களையும் குறைகூற முடியாது.

முஸ்லிம்களிடத்திலும் பல பிரச்சினைகளும் தவறுகளும் உள்ளன. சிறுபான்மைக்குள் சிறுபான்மையாக வாழும் ஒரு சமூகம் தமது இனத்துவ நலனைப் பேணிக் கொண்டு தேசிய மட்டத்தில் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது பற்றிய புரிதல் முஸ்லிம்களுக்கும் தேவையாகவுள்ளது.

- **நல்லாட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்த உங்களுடைய மனப்பதிவு என்ன?**

2015 இல் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் என்பது உள்நாட்டுப் போருக்குப் பின்னரான இலங்கையின் போக்கில் பாரிய திருப்புமுனையாகவே நோக்கப்படுகிறது. அபிவிருத்தி, சமாதானம் மற்றும் நல்லாட்சி என்பவற்றை கட்டியெழுப்புவதில் ஆட்சி மாற்றமும் புதிய அரசாங்கமும் முக்கிய பங்கினை ஆற்ற முடியும். ஆனால், துரதிஷ்டவசமாக தனியொரு கட்சிக்கு ஆட்சியமைப்



பதற்கான சந்தர்ப்பத்தை பொதுத் தேர்தல் பெற்றுக் கொடுக்காமையால் மக்களின் எதிர்பார்ப்புக்கள் கேள்விக்குறியாகி நிற்கின்றன.

ஜனாதிபதி மற்றும் பிரதமரது தேசிய அரசாங்க முயற்சி பாராட்டத்தக்கது. ஆனால், தேசிய அரசாங்கம் எனும் எண்ணக்கரு இலங்கைக்கு புதியது என்பதால் தற்போதைய அரசாங்கத்திலுள்ளவர்களும் கட்சி சார்பாகவே செயற்படுகின்றனர். தேசிய அரசாங்கத்தில் தேசியப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அரசாங்கத்திலுள்ள எல்லோரும் அவற்றை தீர்க்க ஒருமித்து முயற்சிக்க வேண்டும். ஆனால், தேசிய விடயங்கள் தொடர்பில் ஒரு கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவது என்பது அரசாங்கத்துக்குள் பெரும் பிரச்சினையாகவே உள்ளது. நல்லாட்சிக்கான முயற்சிகளுக்கும் அரசாங்கத்துக்குள்ளேயே பலர் சவால்களை ஏற்படுத்துகின்றனர்.

- **நல்லாட்சி அரசாங்கத்தின் கீழாலும் முஸ்லிம்களுக்கெதிரான இனவாதப் பிரச்சினைகள் மீளவும் துளிர்விட ஆரம்பித்துள்ளன. அதற்குரிய காரணம் என்ன? இனவாதப் பிரச்சினைகள் மூழாமல் இருப்பதற்கான சட்டங்கள் பலப்படுத்தப்பட வேண்டுமா?**

நாட்டில் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதாக அரசியல்வாதிகள் மார்தட்டிப் பேசினாலும் பயங்கரவாதமும் வன்முறையும் பல வழிகளில் வளர்வதற்கு யுத்தத்துக்கு பின்னரான ஆட்சியாளர்கள் வழி ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்கள். அத்தோடு மதத் தீவிரவாதம் மீள் எழுச்சி பெறுவதற்கும் வழிவிடப்பட்டிருக்கிறது.

இதன் விளைவே யுத்தத்திற்குப் பின்னரான முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான எதிர்ப்புணர்வும் வன்முறைகளுமாகும். பெரும் பலம்பொருந்திய ஒரு பயங்கரவாத இயக்கத்தை அழித்தொழித்தவர்களுக்கு இவற்றையும் இலகுவாக கட்டுப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அதிகாரத்தில் இருப்பதற்கான ஓர் ஆயுதமாக ஆட்சியாளர்கள் இவ்வழிமுறைகளைக் கையாண்டதால் தான் இவ்வளவு பாதகமான நிலை உருவானது. முஸ்லிம் அரசியலின் இயலாமையும் இதற்கு ஒரு காரணம்.

இன வன்முறைகள் எழாமலிருப்பதை அல்லது பயங்கரவாத செயற்பாடுகளை சட்டத்தால் மாத்திரம் கட்டுப்படுத்தி விட முடியும் எனச் சொல்ல முடியாது. பயங்கரவாத தடைச் சட்டம் அமுலிலிருந்த காலத்திலேயே மேற்படி சம்பவங்கள் நடந்தேறின. பயங்கரவாத சட்டத்தைப் பயன்படுத்தி சிறு குற்றங்கள் புரிந்த சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் கூட கைதுசெய்யப்பட்டு தண்டிக்கப்பட்ட வரலாறு உண்டு.

ஆனால் போருக்குப் பின்னரான காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்ட எந்த பெரும்பான்மை இனத்தவரும் கைது செய்யப்படவோ தண்டிக்கப்படவோ இல்லை. எனவே சட்டத்தின் முறையான, நேர்மையான அமுலாக்கமே இங்கு முக்கியமானது. பல்மத சகிப்புத் தன்மை குறித்த மதப்போதனைகளும் இனங்களுக்கிடையே மேற்படி முறுகல் நிலை அல்லது வன்முறை ஏற்படுவதை குறைக்க உதவலாம்.

- **இலங்கை சுதந்திரம் பெற்றபொழுது இலங்கையை விட பல நாடுகள் பின் தங்கிய நிலையில் காணப்பட்டன. அந்நாடுகள் இன்று அரசியல் பொருளாதார சமுக ரீதியில் பலம் பொருந்திய நாடுகளாக உள்ளன. இலங்கை ஏன் இன்னும் அவ்வாறானதொரு நிலையை எட்டவில்லை. அதற்குரிய காரணங்கள் என்ன?**

எங்களிடையே தேசிய உணர்வு இன்னும் முழுமையாக கட்டியெழுப்பப்படவில்லை. நாங்கள் இன்னும் இன ரீதியாகவே சிந்திக்கிறோம்- செயற்படுகிறோம். சுதந்திரத்தின் பின்னரான ஆட்சி முறை இந்த பிரிவினையையே எம்மிடத்தில் உரமூட்டியிருக்கிறது.

குறிப்பாக சிறுபான்மையினர் மத்தியில் தேசத்தை விட்டுப் பிரிந்து செல்லும் மனோநிலையும் செயற்பாடும் அதிகளவிலேயே உள்ளது. எம்மில் எத்தனை பேருக்கு எமது தேசிய கீதம் நினைவில் உள்ளது?. எத்தனை பேருக்கு அதைப் பாடும் போது தேசிய உணர்வு ஏற்படுகிறது?. எனவே முதலில் எம்மிடையே தேசிய உணர்வு கட்டியெழுப்பப்பட வேண்டும். இதற்கு முதற்படியாக எல்லோரையும் இலங்கைத் தேசத்தவர்கள் என்று ஏற்று அவர்களது தனித்துவமான இன, மத, கலாசார அம்சங்கள் அங்கீகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

நூற்றுக்கணக்கான இன, மொழிக் குழுக்களைக் கொண்டுள்ள பல ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய நாடுகளில் தேசிய உணர்வும் தேசிய ஒருமைப்பாடும் பலமாக கட்டியெழுப்பட்டிருக்கின்றன. தமக்கென்று ஒரு தனி மொழியே இல்லாமல் சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பல மொழி பேசும் பல இன மக்களிடையே ஒரே தேசியம் எனும் சிந்தனை பலமாக கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இரண்டே இரண்டு மொழி பேசும் நான்கு இனக் குழுக்களுக்குள் ஒரே தேசியம் எனும் சிந்தனையை கட்டியெழுப்புவதில் நாம் தோல்வியுற்றிருக்கிறோம்.

## ரமழானின்... (12ம் பக்கத் தொடர்)



கிடைப்பதற்கு முன்பு இறை வழிகாட்டலை தேடியும், திக்கற்ற மனித குலத்திற்கு ஒரு விடுதலை வேண்டுமே என்ற அவாவுடன் ஹிரா குகையில் ஒதுங்கி தியானம் செய்தார்கள். அது மனித வாழ்விற்கு விடுதலை வேண்டிய ஒரு தேடல். அதன் விளைவாக மனித இனத்துக்கே வழிகாட்டியான அருள் மறை அல்குர்ஆன் கிடைத்தது. ஹிரா தனிமையில் சிந்திப்பதற்கான, சுயவிசாரணைக்கான ஒரு குறிகாட்டி.

இரண்டாவது தௌர் குகை. ஹிஜ்ரத்தின் போது நபி (ஸல்) அவர்கள் 'பாதுகாப்பிற்காக ஒதுங்கிய குகை. இறைவன் பால் ஒதுங்க வேண்டும் என்பதற்கான குறிகாட்டியே இது.

எனவே ஒரு முஃமின் தனது வாழ்வில் இரண்டு குகைகளை தரிசிக்க வேண்டும். ஒன்று தனிமையில் சிந்திப்பதற்காக நாம் ஒதுக்கும் நேரம். அது நபிகளார் ஹிராவில் தியானம் செய்த நிகழ்வு எமக்கு தரும் பாடமாகும். மற்றது இறை வனிடம் சரணடைந்து அவனிடம் மாத்திரம் தஞ்சமடைந்து தனித்திருக்கும் நேரமாகும். இது தௌர் குகை தடயமாக விட்டுச் சென்ற பாடமாகும்.

தனிமையில் சிந்திப்பதற்கும் தியானிப்பதற்கும் அவ்வாறே படைத்த இறைவனை நினைத்து தனியாக ஒதுங்கி மண்டியிடுவதற்கும் சிறந்த சந்தர்ப்பமாக இஃதிகாப் காணப்படுகிறது.

எனவே, இறை நெருக்கத்தை நாடி இஃதிகாப் இருந்து தியானிப்போம். இறைவனிடம் பாவ மன்னிப்பை யாசிப்போம். மனதை இயக்கி வாழ்வை உயர்த்தும் ரமழானாக இந்த ரமழான் அமையட்டும். அதற்கு இறைவன் துணை புரிவானாக.

## கணக்கியல்... (13ம் பக்கத் தொடர்)

ஆகியவற்றில் அமைந்துள்ள பிராந்திய தகவல் மையங்களில் பெற்றுக் கொள்ளலாம். AAT Sri Lanka நாட்டின் பல்வேறு நகரங்களிலும் தனக்குரிய வள நிலையங்களையும் பரீட்சை நிலையங்களையும் கொண்டுள்ளது. மாவட்ட தகவல் நிலையங்களும் இயங்கி வருகின்றன.

பதிவு செய்தல், பரீட்சை எழுதுதல், பயிற்சி பெறல், விண்ணப்பங்களை ஒப்படைத்தல் என்பவற்றை இவற்றில் மேற்கொள்ளலாம். கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், குருணாகல், அனுராதபுரம், அம்பாறை, பதுளை, களுத்துறை, பொலன்னறுவை, மட்டக்களப்பு ஆகியவற்றில் AAT இன் பிராந்திய நிலையங்கள் அமைந்துள்ளன.

பிரதான காரியாலயம் AAT Sri Lanka, No. 540, Murulthnatta Ananda Nahimi Mawatha, Narahenpita, Colombo 05 என்ற முகவரியில் உள்ளது. 0112 559669 எனும் தொலைபேசியினூடாக மேலதிக தகவல்களைப் பெறலாம்.

## தீவிரவாதமும்... (1ம் பக்கத் தொடர்)



காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம், நீதி, உண்மை, நல்லிணக்கம், மீள்நிகழாமைக் கான ஆணைக்குழு, நீதிப் பொறிமுறை, நஷ்டஈட்டுக்கான அலு வலகம் போன்ற விடயங்கள் நிலைமாற்று கால நீதி எண்ணக் கருவில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் உள்ளடக்கப்பட வேண்டிய மேலதிக விடயங்கள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட மேற்படி செயலணியினர் சமூக நிறுவனங்களை அழைத்து கருத்துக்களைப் பெற்று வருகிறது. சகல சமூகங்களையும் சேர்ந்த பல நிறுவனங்கள் தனித்தனியே தமது யோசனைகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட இந்நிகழ்வில் பல முஸ்லிம் நிறுவனங்களும் யோசனைகளை முன்வைத்தன.

ஜமாஅதுஸ் ஸலாமாவின் சார்பில் டாக்டர் ஸைபுல் இஸ்லாம் முன்வைத்த யோசனைகளில் இவ்வாறான நிகழ்வுகள் மீள நிகழாமைக்கான பொறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும் என்றும், இவ்வாறான நிகழ்வுகளுக்கான மூல காரணம் கண்டறியப்பட்டு களையப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கென நியமிக்கப்படும் குழுவினரின் அதிகார எல்லை நாடு தழுவியதாக இருக்க வேண்டும் எனவும், எல்லா இனங்களையும் சமயங்களையும் சேர்ந்தவர்கள் இதில் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும், போதுமான அதிகாரம் இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டு ஏனைய நல்லிணக்கப் பொறிமுறைகளுடன் இயைந்து செல்லும் வகையில் இதன் செயற்பாடு அமைய வேண்டும் எனவும் ஜமாஅதுஸ் ஸலாமாவின் யோசனைகளில் முன்வைக்கப்பட்டிருந்தது.

வளர்ந்து வருகின்ற தீவிரவாதமும் வெறுப்புணர்வுமே இனங்களுக்கிடையிலான முறுகல்களுக்குக் காரணமாக அண்மைக்காலங்களில் அமைவதாகவும், இன நல்லிணக்கம் தொடர்பில் பாடசாலைப் பாடவிதானங்களில் உள்ளடக்குவது போன்ற முன்மொழிவுகளை முன்வைக்கின்ற அளவுக்கு குழுவின் பணி அமைய வேண்டும் எனவும் ஸலாமாவின் யோசனைகளில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## வழங்கிய... (1ம் பக்கத் தொடர்)

ஜெனீவாவில் ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 32ஆவது அமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய செய்யித் அல் ஹுஸைன், இலங்கையின் 30/1 பிரேரணையில் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை அமுல்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகளில், இடைமாற்றகால நீதி தொடர்பில் விரிவான திட்டமொன்று தேவையாகவுள்ளது எனவும், ஒருங்கிணைந்த செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும், சரியான செயற்பாடுகளை வரிசைக்கிரமமாக முன்னெடுப்பதற்கும் இது வழிவகுக்கும் என்றும் ஹுசைன் தெரிவித்தார். இதற்கு சகல இலங்கையர்களும் உள்வாங்கப்படுவதுடன், அவர்களின் அர்த்தமுள்ள பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக் காட்டினார்.

## ஒட்டுண்ணிகளின்... (6ம் பக்கத் தொடர்)

தாம் எவ்வளவு தான் கஷ்டங்களுக்கு உட் பட்டாலும் இந்த அனைத்தும் மேற்கொள்ளப்படுவது அரசாங்கத்திற்கு நாட்டினை நடாத்திச் செல்ல பணம் இல்லை என்பதனாலேயே என்பதைப் பொதுமக்கள் ஏற்றுக் கொள்வர். எனினும், தாம் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளும் போது ஒட்டுண்ணிகளான பொது மக்கள் பிரதிநிதிகள் குழுவொன்று பொது நிதியைத் தமக்கு மத்தியில் தாராளமாகப் பங்கிட்டு கொள்கிறார்கள் என்பதை அறியும்போது தான் அவர்களின் பொறுமை எல்லை கடந்து செல்கிறது.

அமைச்சர்கள் தமது கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக எவ்வளவுதான் பெருமையடித்தாலும், நியாயப்படுத்தினாலும், இவ்வாறான கடின சந்தர்ப்பத்தில், அனைவரும் சமமாக அர்ப்பணிப்பு செய்ய வேண்டிய சூழ்நிலையில், ஒன்று தசம் ஒரு பில்லியன் ரூபாய் மக்கள் பணத்தை செலவழித்து இருநூறு, முன்னூறு இலட்சங்களுக்கு அமைச்சர்களின் பயன்பாட்டுக்காக வாகனங்களைக் கொண்டு வருவது குறித்து, இந்த நாட்டு மக்கள் சாபமிடுகின்றனர் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தக் கடினமான காலப்பகுதியிலிருந்து அரசாங்கத்தை மீட்டெடுப்பதற்காக இவ்வசதிகளை நிராகரித்து முன்னுதாரணமொன்றை வழங்குகின்ற மக்கள் பிரதிநிதிகள் யாரும் பாராளுமன்றத்தில் இல்லையா? குறைந்தது உலக வங்கி தொடக்கம் பல நிறுவனங்களுக்கும், நாடுகளுக்கும் கடன்பட்டு, அன்றாட செலவினைத் தேடிக் கொள்ளும் இந்த வெட்கக்கேடான நிலைமையிலிருந்து மீளும் வரையாவது தமக்கு சொகுசான வசதிகளைப் பெற்றுக் கொள்வதனைப் பிற்போடுவதற்கு விருப்பமுள்ள மக்கள் பிரதிநிதியொருவர் இந்த நாட்டில் இல்லையா?

அவ்வாறானவர்கள் தான் இல்லாவிடின், நாட்டு மக்களுக்கு உள்ள கஷ்டங்கள் காரணமாக இந்த வெட்கமற்ற வாகன விளையாட்டை இடைநிறுத்த வேண்டும் என்று அவர்களுக்கு உத்தரவிடுவதற்காவது முதுகெலும்புள்ள தலைவர்கள் யாரும் அரசாங்கத்தில் இல்லையா?

ராவய ஆசிரியர் தலைப்பு - 2016.06.12

## பிளாஸ்டிக்.... (05 ஆம் பக்கத் தொடர்)

பொருளான பென்சின் வினை குளோரைட் கலந்து விடுகின்றது. இதனால் புற்றுநோய் கூட ஏற்படலாம் என எச்சரிக்கப்படுகின்றது.

எளிதில் மக்காத, சிதையாத பிளாஸ்டிக் பொருட்களால் கழிவுக் குழாய்கள், சாக்கடைகள், வாய்க்கால்களில் அடைப்பு ஏற்பட்டு, தேங்கி, துர்நாற்றம், நுளம்புப் பெருக்கம், நோய்கள் ஏற்படுகின்றன. நீர் வரத்துக் கால்வாய்களில் அடைத்துக் கொள்வதால் மழைக் காலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது.

மக்காத பிளாஸ்டிக் பொருட்கள் வேளாண்மை நிலங்களில் தங்கி, அதன் வளத்தைக் குறைத்து நஞ்சாக்குகின்றது. பயிர் வளர்ச்சியையும் பாதிக்கின்றது. கடற்கரையோரம்,



கடலில் எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் கடல் வாழ் உயிரிணங்களுக்கும் வனப் பகுதியில் வீசப்படுபவை வன விலங்குகளுக்கும் தீங்கு விளைவிக்கின்றன.

பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்ப்பதற்கு இதை விட வலுவான காரணங்கள் தேவையில்லை. இலங்கையின் புதிய ஜனாதிபதி சுற்றாடலைப் பாதுகாத்தல் தொடர்பான மிக கறாரான நிலைப்பாடுகளை எடுப்பதாகக் கூறி வரும் தருணத்திலேயே பிஸ்னஸ் டைம்ஸ் இலங்கைக்கு சுற்றாடலை மாசுபடுத்தும் நாடுகளின் தர வரிசையில் 5 ஆம் இடத்தை வழங்கியுள்ளது.

இலங்கையில் கடல் சூழலை பாதுகாப்பதற்கான அதிகார சபையொன்று தனித்து செயல்படுகின்றது. சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை நூற்றுக்கணக்கான அதிகாரிகளோடு செயல்படுகின்றது. ஆனால் இலங்கையில் திண்மக் கழிவுகளையும் குப்பைகளையும் முகாமை செய்வது பாரிய தேசிய பிரச்சினையாகவே நீடித்து வருகின்றது. குப்பையை முகாமை செய்யத் தெரியாத நாட்டில் முறையான அரச நிர்வாகத்தை எப்படி நாம் எதிர்பார்ப்பது?


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 077 9207569 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகப் பெரும் தோல்வியாளர்கள்

வாழ்க்கையில் யாரும் தோல்விய டைவதற்கு விரும்புவதில்லை. ஆனால், தோல்வியடையாமல் வெற்றி பெறுப வர்கள் மிகச் சிலரே. தோல்விகள்தான் வெற்றி பெறுவதற்கான பாடங்களை கற்றுத் தருகின்றன. எனவேதான், தோல்விகள் வெற்றிகளின் படிக்கட் டுகள் என்பார்கள்.

உலகில் மிகப் பிரபல்யமான வெற்றி யாளர்கள் தமது வாழ்வின் ஆரம்ப கட்டங்களில் எத்தகைய தோல்விகளை சந்தித்திருக்கின்றார்கள் என்பதை நாம் தெரிந்துக் கொண்டால் எமது தோல் விகள் ஒன்றும் தோல்விகளே அல்ல.

*01. பில்கேட்ஸ்*

உலகின் மிகப் பெரும் பணக்காரர்களில் ஒருவராக ஒரு தசாப் தத்திற்கு மேல் இருந் தவர். மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் உரிமையாளர். ஆனால், இவர் 1970களில் ஹாட் வெர்ட் பல்கலைகழகத்தி லிருந்து தனது பட்டப்ப டிப்பை இடைநடுவில் கைவிட்டவர்.

**02. ஆப்ரகாம் லிங்கன்**

இவர் தனது பாடசாலை கல்வியை ஐந்து வருடங்கள் கூட தொடராதவர். அவர் 12 தேர்தல்களில் போட்டியிட்டு தொடர்ச்சியாக தோல்வியடைந்தார். ஆனால், ஐக்கிய அமெரிக்காவின் 16 ஆவது ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று அந்நாட்டின் ஜனாதிபதியானார்.

**03. ஐசாக் நியூடன்**

கணிதத்தை, விஞ்ஞானத்தை கற் கின்ற அனைவருக்கும் மிகவும் பரீட் சயமான பெயர்தான் ஐசாக் நியூடன். மிகப்பெரும் கணிதவியல் நிபுணராக இன்றுவரை மதிக்கப்படுகின்றார். இவர் தனது பாடசாலைக் காலத்தில் மிகத் திறமையானவராக இருந்திருப் பார் என நீங்கள் நினைத்தால் அது மிகப் பெரும் தவறு. இவர் மிகவும் பலவீனமான மாணவராகவே காணப் பட்டார். பல தடவைகள் இவர் வகுப்பேற்றப்படவில்லை.

*04. லுட்விங் வேன் பீத்தோவன்*

இசையைப் பற்றி தெரிந்த எவருக்கும் இவரை தெரியாமல் இருக்காது. இவர் இசை பயின்ற ஆசிரியர், இவர் சிறந்த தொரு இசையமைப்பாளராக வர முடி யாது என்று கூறிவிட்டார். இவர் இசை யை கற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் இவரது காதுகள் இரண்டும் கேட்காமல் போனது. ஆனால், அதன் பிறகு இவரின் இசையால் உலகிலே பிரபல்யமடைந் தார். காது கேட்காதவர் எப்படி இசைய மைத்தார் என்று கற்பனை செய்ய முடிகின்றதா?

**05. தோமஸ் அல்வா எடிசன்**

மின்விளக்கை கண்டுபிடித்தவர் யார் என்றால் உடனடியாக அனைவரும் இவரின் பெயரை சொல்வார்கள். இவரது பாடசாலை ஆசிரியர், இவர் ஒரு முட் டாள், இவருக்கு என்னால் கற்பிக்க முடியாது என்று இவரது தாய்க்கு கடிதம் எழுதினார். இவர் மின்விளக்கை கண்டு பிடிக்கும் முயற்சியில் 900 தடவைகள் தோல்வியடைந்ததாக தெரிவிக்கப்படு கின்றது. அமெரிக்காவில் 1093 புதிய கண்டுபிடிப்புகளுக்கான பேடன்ட் உரி மையை இவர் பெற்றிருந்தார் என்பதை நம்பித்தான் ஆக வேண்டும்.

**06. தே வூல்வேர்த் கம்பனி**

உலகளவில் மிகப் பிரபல்யமான, அதிக கிளைகளை கொண்ட ஒரு சில் லறை விற்பனை நிறுவனம். இதன் உரிமையாளர்தான் வூல்வேர்த். இவர் தனது முதலாவது கடையை 1878 ஆம் ஆண்டு திறந்தார். அதற்கு முன்னர் அவரது 21 ஆவது வயதில் ஒரு சில்லறை கடையில் வேலை செய்தார். அக் கடை யின் உரிமையாளர் அவரை வாடிக் கையாளர்களுடன் உரையாட விடுவ தில்லை. ஏனெனில், அவர் சமூக பழக்கமற்றவர். அவருக்கு மற்றையவர் களுடன் உரையாடத் தெரியாது என அவர் நினைத்தார்.

*07. மிச்செல் ஜோர்டன்*

மிகச் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர். பல வெற்றிகளுக்கு காரணமானவர். ஆனால், பாடசாலைக் காலத்தில் அவ ருக்கு கூடைப்பந்தாட்ட அணியில் வாய்ப்பளிக்கப்படவில்லை. ஏனெனில், அவர் திறமையற்றவர்.

*08. வின்ஸ்டன் சேர்ச்சில்*

இவர் ஆறாம் தரத்தில் சித்திய டையவில்லை. ஆனால், இடைவிடாது முயற்சித்தார். இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் இங்கிலாந்தின் பிரதம ரானார். 2002 ஆம் ஆண்டு பிபிஸி செய்திச்சேவை மிகச் சிறந்த இங்கி லாந்து நாட்டவர்கள் 100 பேரை தெரிவு செய்ய ஒரு கணிப்பீட்டை மேற் கொண்டது. அதில் முதலாமவராக இடம்பெற்றவர் வின்ஸ்டன் தான்.

*09. ஸ்டீவன் ஸ்பில்பேர்க்*

உலக சிணமாவில் மிக உயர்ந்த விருதாக கருதப்படும் ஒஸ்கார் விருதை மூன்று தடவைகள் பெற்றவர். சிறந்த சினிமா இயக்குனராக பெயர் பெற்றவர். இவர் கனிஷ்ட பாடசாலையிலிருந்து விலக்கப்பட்டு, மெல்லக் கற்போருக் கான வகுப்பில் சேர்க்கப்பட்டார். சிறிது காலத்திலே அதிலிருந்தும் விலக்கப்பட்டு விட்டார். அதன் பிறகு அவருக்கு பாடசாலை கல்வியே கிடைக்கவில்லை.

*10. அல்பர்ட் ஐன்ஸ்டீன்*

இவர் பாடசாலையில் மிகவும் பின் தங்கியவ ராகவே காணப் பட்டார். இவரது பெற்றோர் இவர் மூளை வளர்ச்சிப் பாதிக்கப் பட்டவர் என நினைத்தனர். இவரது ஆசிரியர் ஒரு தடவை, ஐன்ஸ்டீன், உங்களால் எதனையும் கூட்ட முடியாது என்றார். 20 ஆம் நூற் றாண்டின் மிகப் பிரபல் யமான விஞ்ஞானியான இவருக்கு 1921 ஆம் ஆண்டு இயல்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

student @ மீள்பார்வை

**தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்**

# நல்லதொரு மனைவி

ஒரு கணவன் தனது வாழ்நாள் முழுவதும் உழைத்தான். அவ்வாறு உழைத்த அனைத்தையும் சேமித்தான். அவன் திடீரென்று நோய்வாய்பட்டான். அவனது மரணத் தருவாயில் தனது மனைவியிடம், நான் இறந்தவுடன் எனது பணம் அனைத்தையும் எனது சவப்பெட்டியில் வைத்துவிடவேண்டும். நான் அதனை மரணத்தின் பின்னர் பயன்படுத்தவேண்டும் என்றான். மனை வியும் அவ்வாறே தான் செய்துவிடுவதாக உடன்பட்டாள்.

சில நாட்களில் அவன் மரணித் துவிட்டான். அவனது சடலத்தை புதைப் பதற்காக எடுத்துச் சென்றனர். அவனது மனைவியும் அவளது நெருங்கிய நண் பியும் புதைக்குழிக்கு அருகில் இருந்தனர். சம்பிரதாயமான மதக் கிரிகைகள் முடிந் தவுடன் சடலத்தை புதைக்க தயாராகினர்.

அப்போது அவள், சற்று பொறுங்கள் என்று கூறிவிட்டு தனது கையிலிருந்த ஒரு பெட்டியை சவப்பெட்டிக்குள் இட்டாள். அதன் பின்னர் அதனைப் புதைத்தனர்.



ஆச்சரியமடைந்த அவளது தோழி, நீ ஒரு முட்டாள் அல்ல என்பதை நான் நன்கறிவேன். ஆனால், நீ அனைத்து பணத்தையும் அதனுள் போட்டுவிட்டாயா? என்றாள்.

அதற்கு அவள், ஆம். நான் நேர்மையான மனைவி. நான் அவருக்கு வாக்குறுதியளித்தேன். நான் அதனை காப்பாற்ற வேண்டும். எனவே, அனைத்தையும் அதில் இட்டேன் என்றாள்.

**நீ அனைத்து பணத்தையும் அதனுள் இட்டாயா?**

ஆம், நிச்சயமாக. அவரின் பணம் அனைத்தையும் எனது வங்கி கணக்கில் வைப்பிட்டேன். பின்னர் அவருடைய பணத்தொகைக்கு ஒரு காசோலையை எழுதி, அந்தப் பெட்டியினுள் வைத்து, சவப்பெட்டிக்குள் இட்டேன். அவர் அதனை பணமாக மாற்றி எடுத்துக்கொள்ளட்டும் என்றாள்.

# இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பொன் விழா - 2016

## ஆய்வரங்கக் கட்டுரைகள் கோரப்படுகின்றன

**ஆய்வுக் கட்டுரைகள்**

இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய் வகம் இவ்வருட இறுதிக்குள்' தேசிய இஸ்லாமிய தமிழ் இலக்கியப் பொன் விழா'வை நடத்துவதென்று தீர்மானித் துள்ளது. இது பற்றிய தகவல் கடந்த மாதம் பத்திரிகை, இணையத்தளங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விழாவை முன்னிட்டு ஆறு ஆய்வரங்குகள் நடத்தப்பட விருக்கின்றன. அரங்கு 5ஐத் தவிர ஏனைய அரங்குகளுக்கு வழங்கப்பட்டுள்ள தலைப்புக்களில் ஒன் றைத் தெரிவு செய்து கட்டுரைகளை எழுதலாம். 5ஆம் அரங்கைப் பொறுத் தவரை அதில் குறிப்பிடப்பட்டுள்ள 5 தலைப்புக்களையும் உள்ளடக்கியதாக ஆய்வு அமைதல் வேண்டும்.

**கட்டுரைகளை முஸ்லிம் அல்லாதோரும் எழுதலாம்.**

பின்வரும் கட்டுரைத் தலைப்புக் களுக்கான கட்டுரைகளை எதிர்வரும் ஜூலை 15ம் திகதிக்குள் கிடைக்கக் கூடியவாறு Dr,Jinnah Sherifudeen, 16A, School Avenue, Off Station Road, Dehiwala என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்பி வைக்கவும். கட்டுரைகளை அனுப்புவோர் தமது முகவரி மற்றும் தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப் பிட மறக்க வேண்டாம். கட்டுரைகள் ஒரு குழுவினரால் பரிசீலிக்கப்பட்டுச் சிறந்தவை ஏற்றுக் கொள்ளப்படும்.

### 01. தற்கால இலக்கியம் கட்டுரைத் தலைப்புக்கள்.


1. முஸ்லிம் படைப்பாளிகளின் வலைத் தளப் பதிவுகள்.
2. 1970களின் பின்னரான முஸ்லிம் படைப்பாளிகளின் கவிதைச் செல்நெறி.
3. 1970 களின் பின்னரான முஸ்லிம் படைப்பாளிகளின் சிறுகதைச் செல் நெறி.
4. 1970 களின் பின்னரான முஸ்லிம் படைப்பாளிகளின் நாவல்களும் பேசு பொருளும்.
5. 1970 களின் பின்னரான முஸ்லிம் படைப்பாளிகளின் இலக்கியக் கட்டு ரைகளும் பேசுபொருளும்

### 02. இஸ்லாமும் கலைகளும் கட்டுரைத் தலைப்புக்கள்.

1. இலங்கை முஸ்லிம்களின் இசையும் கலைப் பாரம்பரியமும்.
2. இலங்கையில் அருகி வரும் முஸ்லிம் பாரம்பரியக் கலை வடிவங்கள்.
3. இறைதூதர் காலத்தில் இசையும் கலையும்.
4. அடிப்படைவாதச் சிந்தனையும் இஸ் லாமிய இசையும்.
5. கஸீதா, புர்தா, தலைப் பாத்திஹா ஆகியவற்றில் இலக்கிய நயம்
6. இஸ்லாமியர் மத்தியில் இசை பற்றிய சர்ச்சைகள் அடிக்கடி ஏற்படு வதற்கான காரணங்கள்

### 03. சினிமா பற்றிய இஸ்லாமியக் கண்ணோட்டம் கட்டுரைத் தலைப்புக்கள்.

1. சினிமா ரசனை பற்றிய எண்ணக் கரு.
2. இஸ்லாமியக் கருத்தியலை முன் கொண்டு செல்ல சினிமா ஊடகத்தின் பங்களிப்பு.
3. சினிமா தொடர்பில் இலங்கையில் ஒரு படைப்பாளி எதிர் கொள்ளும் கருத் தியல்சார் பிரச்சினைகள்.



4. சினிமா மூலம் இஸ்லாமிய அடை யாளங்களைக் கேள்விக்குட் படுத்தல்
5. சினிமா ஊடகத்தால் வளர்த்தெடுக்கப் பட்ட இஸ்லாம் பற்றிய பயங்கரவாத மாயை.
6. மாற்றுச் சினிமாவுக்கான தேவைப் பாடும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக அதைப் பயன்படுத்தலும்.

### 04. எதிரெழுத்து கட்டுரைத் தலைப்புக்கள்.

1. முஸ்லிம் படைப்பாளிகளின் எதிரெ ழுத்தில் தொனிக்கும் வாழ்வியல் பிரச்சி னைகள்.
2. முஸ்லிம்களின் எதிர்க்குரல் சர்வதேச த்துக்கு எட்டாமைக்கான காரணிகள்.
3. மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள் - சமூக அரசியல் பரிமாணம்.
4. சியோனிஸ சக்திகளுக்கெதிரான இஸ் லாமிய எதிர்ப்பிலக்கியம்.
5. இஸ்லாமிய தீவிரவாதம் - ஓர் ஆய்வு

### 05. வாழும் ஆளுமைகள்

**கவனத்தைக் கவர்ந்த தற்கால முஸ்லிம் படைப்பாளிகள்**

(ஓர் ஆளுமை மேற்குறித்த 5 சிறு தலைப்புக்களின் கீழும் ஆய்வுக்குட்படல் வேண்டும்)

1. அவர்களது ஆளுமையும் தனித்து வமும்.
2. அவர்களது சமூகவியற் பார்வை.
3. அவர்களது எழுத்துக்களில் இலக்கிய நயம்.
4. அவர்களது எழுத்துக்களில் சமூக, இன நல்லுறவு.
5. மக்களின் வாழ்வியலை அவர்கள் பேசும் விதம்.

### 06. சமூக நல்லிணக்கம் கட்டுரைத் தலைப்புக்கள்.

1. சமய இலக்கியங்களில் சமூக நல்லி ணக்கம்.
2. இன உறவைக் கட்டியெழுப்புவதில் இலக்கியத்தின் பங்களிப்பு.
3. தமிழ் பேசும் மக்கள் - ஓர் இலக்கியப் பார்வை.
4. மலையக இலக்கியப் பரப்பில் முஸ்லிம் படைப்பாளிகளுக்கான அங்கீ காரம்.
5. இஸ்லாமும் இலக்கியமும் - இளந் தலைமுறைப் படைப்பாளிகளின் புரிதலும்.

**தொடர்புகள்**

Dr. Jinnah Sherifudeen - 077 272 1244
Ashroff Shihabdeen - 0777 303 818
Dr. Thassim Ahamed - 077 966 4063

# கறுப்பு நங்கையின் கண்ணீர்...

மிகமிகத் துயரமான கண்ணீர்
ஒரு கறுப்பு நங்கையின்
கண்ணீர்தான்.
ஏனெனில்,
அவளை அழவைப்பது சுலபமல்ல.
அவள் மகனை அவளிடமிருந்து
எடுத்துச் செல்.
அவனை போதைப் பழக்கத்துக்கு
ஆளாக்கு.
வயலில் அவனை உழைக்கவை.
கொரியாவில் அவனைக்
கொன்றுபோடு.
ஒரு பி.எச்.டி. பட்டத்துடன்
ஒட்டலில் உணவு பரிமாறச் செய்.
அவள் உதிர்ப்பாள் ஒரு புன்னகை
தனக்கே உரித்தான
கசப்புப் புன்னகையைக்
கேடயமாகப் பயன்படும்
தன் கறுப்பு முகமூடியின் ஊடாக
அவள் உதிர்ப்பாள்.
கண்ணீர் பெருகும்
உள்ளுக்குள்
இரத்தச் சிவப்பாக.

அவள் கணவனை
அவளிடமிருந்து பிரித்துவை.
சமையல் அறையிலேயே
சாகவை.
பெரிய கடன் ஒன்றை உண்டாக்கி
ஆயிரம் நாட்களில் அதைத்
திருப்பிக் கொடுக்கச் செய்.
அவள் கொடுப்பாள்.
தண்டனை ஒன்று கொடுத்து
ஆயிரம் இரவுகளைக் கழிக்கவை.
அவள் கழிப்பாள்.


ஆயினும்
வெள்ளையனே,
நீ அவளிடமிருந்து
கண்ணீரை மட்டும் பெறமுடியாது.
ஏனெனில்
அவள்
துயரங்களின் அரசி.

நன்றி - 'அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு செய்தி

# தேவை : வலி தெரியாமல் உழைக்கும் அலிகள்



எம்.எப்.முஹம்மத்

எமது காலப்பிரிவில் சமூக மாற்றத்தையும் அரசியல் மாற்றத்தையும் மிகச் சிறந்த முறையில் அடையாளப்படுத்திய பாத்திரம் மொஹமட் அலி தான். (கறுப்பின மக்களுக்காக தோன்றிய) மாட்டின் லூதர் கிங்கை விடவும் அமெரிக்க மக்களிடையே இணைப்பினை ஏற்படுத்துவதற்கு அலியினால் முடிந்தது. அண்மையில் காலஞ்சென்ற உலக அதிபாரக் குத்துச் சண்டை வீரர் முஹம்மத் அலி பற்றி அவரது விளையாட்டு உலகில் நீண்ட காலம் பயிற்றுவிப்பாளராக இருந்த பொப் ஏரம் கூறிய வார்த்தைகள் இவை.

எத்தனையோ விளையாட்டு வீரர்கள் தமது துறைகளில் சாதனை படைத்துவிட்டு மறைந்து சென்றாலும், அலியின் மரணம் மறக்க முடியாமல் போவதற்குக் காரணம் தனது பேரையும் புகழையும் மனித குலத்தின் விடிவுக்காகப் பயன்படுத்தியமைதான். இருட்டு வர்ணத்தில் படைக்கப்பட்டதற்காக உலகில் உயர்ந்த ஜாதியான மனித ஜாதியின் வாழ்க்கையை ஏன் இன்னொரு சாரார் இருட்டாக்கி வைத்திருக்கிறார்கள் என்பது தான் அவரது கேள்வி. இதற்கு விடிவு தேடியது தான் அவரது போராட்டம்.

ரோமில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்காவுக்காக முஹம்மத் அலி தங்கப்பதக்கம் வென்றார். சதாவும் அதனைத் தனது தோளிலே பெருமையுடன் அணிந்து கொள்வார், நாட்டுக்குத் தன்னால் ஈட்டிக் கொடுக்க முடியுமான பெருமையையும் சேர்த்து. பதக்கத்தை அணிந்து கொண்டு ஒரு தேநீர் விடுதியில் கோப்பியும் ஹொட்டோக்கும் கேட்ட அலிக்கு, கறுப்பர்களுக்கு இங்கு உணவு கிடையாது என்று பதில் அளிக்கப்பட்டது. இங்குதான் அலி வெகுவாகப் பாதிக்கப்பட்டார். அமெரிக்காவுக்கு என தான் ஈட்டிய தங்கப் பதக்கத்தை ஒஹியோ நதியில் வீசி எறிந்தார். தன்னைப் போல எந்தக் கறுப்பரும் பாதிக்கப்படக் கூடாது என போராட்டத்தில் இறங்கினார்.

முஹம்மத் அலி கஷியஸ் கிளே ஆக இருந்த காலங்களில் அடிக்கடி தனது தாயாரிடம் வினவுவார். இயேசு ஏன் வெண்ணிறத் தோல்களும் நீல நிறக் கண்களுமாக இருக்கிறார்? கறுப்பர்களே இருக்கின்ற ஆபிரிக்கக் காடு களின் ராஜாவான டார்ஸன் ஏன் வெள்ளையராகக் காட்டப்படுகிறார் ? விடை காண முடியாத இந்தக் கேள்விகளுக்கு, இஸ்லாத்தைத் தழுவிய கறுப்பின விடுதலை வீரர் மல்கம் எக்ஸின் நேசன் ஒப் இஸ்லாம் நிறுவனத்தில் விடை கிடைக்கிறது. நிறங்களுக்கு அப்பாற் பட்ட அல்லாஹுத் ஆலாவை கடவுளாக ஏற்று தனது போராட்டத்தை அர்த்த முள்ளதாக்குகிறார்.

முஹம்மத் அலி ஆனதன் பின்னரும் இனவெறி பிடித்த சில போட்டியாளர்கள் கஷியஸ் கிளே என்ற பெயரிலேயே அலியை அழைத்தனர். இதற்கான எதிர்ப்பை அவர் தனது போட்டி களிலேயே வெளியிட்டார். ''அங்கள் டொம். (தனது எதிராளியை அலி இப் படித் தான் அழைப்பார்) எனது பெய ரைச் சொல் என்று கூறி இரத்தம் வரும் வரை அவர்களை ஆவேசமாகக் குத்தித் தொலைப்பார்.

கஷியஸ் கிளே என்பது அடிமைத்தனமான பெயர். அடிமை யுகத்தில் எஜமானர்களே அடிமைகளுக்கு, தமக்குப் பிடித்த பெயர்களை வைத் தார்கள். நான் இப்போது சுதந்திரவான். அடிமைப் பெயரிலிருந்து விடுபடுவ தற்கு இனி என்னால் முடியும் என அவர் பகிரங்கமாக அறிவித்தார்.



எதிராளி மீதான அலியின் கோபம் ஆடுகளத்துக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. போட்டியின் பின்னர் தன்னிடம் தோற்றவர்களுடன் தோழமையுடன் பழகினார். தோற்கடிக்க முடியாதவர்கள் என யாருமே என் வாழ்க்கையில் இருந்ததில்லை. இதனால் ஆடுகளத்தில் நான் மூர்க்கமாகவே நடந்து கொள்வேன். அதற்கு வெளியில் நடந்து முடிந்த போட்டியைப் பற்றி நான் கதைத்ததில்லை. ஏனென்றால் நான் குத்தியிருப்பது எனது ஒரு நண்பனுக்குத்தான் என்ற உணர்வு என்னில் மேலிடும். இன்றும் கூட எனது சிறந்த நண்பர்கள் என்னிடம் தோற்றவர்கள்தான் என்கிறார் முஹம்மத் அலி. இஸ்லாமியர் என்ற வட்டத்தைத் தாண்டி உலகின் ஏராளமானவர்கள் அவரது நட்பு வட்டத்தில் இணைந்திருந்தமைக்கு அவரது இந்த மனிதாபிமானம் தான் காரணம்.

இந்த மனிதாபிமானம்தான் அவரை மனிதாபிமானத்தின் தாயக மான இஸ்லாத்துக்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. ஒரு குத்துச் சண் டை வீரன் என்பதைத் தாண்டி, நான் சத்தியத்தின் மனிதன். இஸ்லாம் பயங்கரவாதிகளுடன் இணைத்துப் பேசப்படுகிறது. பரிஸிலும் பர்னன்டிலோவிலும் அல்லது உலகில் எந்த மூலைமுடுக்கிலும் அப்பாவிகள் கொல்லப்படுவதற்கு இஸ்லாம் பொறுப்பல்ல. இஸ்லாம் என்பது அமைதி. அது படுகொலைகளுக்கு எதிரானது. பயங்கரவாதத் துக்கு எதிரானது. இஸ்லாத்தின் பெயரால் சிலரால் பின்பற்றப்படும் பயங்கரவாதம் இஸ்லாத்துக்கு எதிரானது. இஸ்லாம் பயங்கரவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தால் நான் இஸ்லாமியனாக மாறி யிருக்க மாட்டேன் என்று முஹம்மத் அலி கூறிய வார்த்தைகள் அமெரிக் கர்களின் இஸ்லாம் பற்றிய பார்வையை மீள்பரிசீலனை செய்ய வைத்தன.

1970 களில் அமெரிக்கா வியட்நாம் யுத்தத்தில் மூக்கை நுழைத்தது. வடக்கு வியட்நாமின் கம்யூனிஸ ஆட்சிக்கு எதிராகப் போராடிய மேற்கு சார்பு தென் வியட்நாமியர்களுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகள் களமிறங்கி பல வருடங்களாகப் போராட்டம் நடத்தின. போராட்டம் நீண்டு கொண்டே சென்றதால் மேலதிக படையினர் தேவைப்பட்டனர். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவ ரும் இராணுவ சேவையில் சேர வேண்டும் என விதியாக்கப்பட்டது. அப்போது உலக அதிபார குத்துச் சண்டை விருதை வென்றிருந்த முஹம்மத் அலியும் வியட்நாமிய யுத்தத்தில் கலந்து கொள்வதற்காக அழைக்கப்பட்டார். அலி அதனை மறுத்தார்.

வடக்கு வியட்நாமின் வியட்கொங் படையினருடன் எனக்கு எந்த வெறுப்பும் இல்லை. அடுத்தவர்களின் பிரச்சினைக்காக நாங்கள் ஏன் யுத்தம் செய்ய வேண்டும்? அவர்கள் என்னை இராணுவச் சீருடையணிந்து பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் சென்று எங்களுக்கு எந்த அநியாயமும் இழைக்காத அங்குள்ள (வியட்நாமிலுள்ள) அப் பாவி மக்களை கொன்றொழிக்கச் சொல்கிறார்கள். நான் ஏன் அவர்களை அழிக்க வேண்டும்? லூயிஸ்வில்லில் (அவரது ஊர்) வாழும் கறுப்பின மக்கள் எந்தவித மனித உரிமைகளும் இன்றி நடத்தப்படும் பொழுது, அந்த வெள்ளையர்களுக்கு எதிராகவல்லவா நாங் கள் போராட வேண்டும்? என்னு டைய மதத்தில் அப்பாவிகளைக் கொல்வதற்கு அனுமதி இல்லை என்று முஹம்மத் அலி தனது நிலைப்பாட்டை வெளியிட்டார். (இந்த இறுதி வாசகங்களுக்காக இஸ்லாம் முஹம் மத் அலிக்கு நன்றிக் கடன்பட்டுள்ளது என ஒரு சிங்களப் பத்திரிகையின் கட்டுரை கருத்து வெளியிட்டிருந்தது.)


தனது நிலைப்பாட்டை அறிவித்ததன் பின்னர் ஹூஸ்டன் நகரின் பெடரல் நீதிமன்றத்தின் முன்னால் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களுடன் சேர்ந்து அமெரிக் காவே, வியட்நாமைத் தாக்காதே என்று கோஷமெழுப்பினார் முஹம்மத் அலி. தனது சமூகத்துக்கு அநியாயம் நடக்கையில் அரசுக்கு எதிராகப் பேசினால் தனது பதவியையும் அரசியல் இலாபங்களையும் இழக்க நேருமோ என இலங்கை முஸ்லிம் அரசியல் வாதிகளின் பாணியில் அவர் யோசிக்கவில்லை. தைரியமாக, தனது சமூகத்துக்காக உண்மையாகக் குரல் கொடுத்தார். அவரது பதக்கங்கள் பறிக்கப்பட்டன. அதுவரை உலகச் சம்பியனாக அவரைப் போற்றிய ஊடகங்கள் எல்லாம், தேசத்துரோகி, கம்யூனிஸ வாதி, வெளிநாட்டு ஏஜன்ட், நாட்டைக் காட்டிக் கொடுத்தவன் என்றெல்லாம் அவரைத் தூற்றத் தொடங்கின. 24 வயது முதல் 29 வரையான அவரது இளமைக் காலத்தின் பொன்னான நாட்கள் அரசாங்கத்தினால் சூறையாடப்பட்டது. ஐந்து வருடங்கள் அவருக்கு ஆட்டத் தடை விதிக்கப்பட்டது.

அலி போராட்டத்தை கைவிடவில்லை. நீதிமன்ற வாசல்களுக்கெல்லாம் ஏறினார். பலவருட இழுத்தடிப்புக்களுக்குப் பின்னர் 1971 இல் அலி குற்றமற்றவராக தீர்ப்பு வழங்கப்படுகிறார். இடைப்பட்ட காலங்களில் அலி நடத்திய போராட்டத்தில் இன, நிற பேதமின்றி நீதியை விரும்பும் பலரும் சேர்ந்து கொள்கிறார்கள். 1970 ஆகும் பொழுது அமெரிக்காவில் யுத்த எதிர்ப்பு மனப்பாங்கு வெகுவாக வளரும் அளவுக்கு இந்தப் போராட்டம் தாக்கம் செலுத்தியிருந்தது. இது தொடர்பில் ஜனாதிபதி ஒபாமாவுக்கு நெருக்கமான ஆலோசகரும் மனித உரிமைச் செயற்பாட்டாளருமான அல்ஷாப்டன் கூறுகையில், 1960 களின் நடுப்பகுதியில் முஹம்மத் அலி உலக அதிபார குத்துச் சண்டை வீரராக உச்சியில் இருந்தார். அப்போது அவருக்கு வயது 23. தொடர்ந்தும் போட்டிகளில் நிலைத்திருந்து பணம் ஈட்டவும், வெற்றிகளை அதிகரிக்கவும் பதக்கங்களைப் பெறவும் அவருக்கு இயலுமாக இருந்தது. ஆனால் இவை அனைத்தையும்விட அவருக்கு அவரது கொள்கை முக்கியமானதாக இருந்தது. அவரது இந்த நிலைப்பாடு தனிநபரது நிலைப்பாடு என்ற கட்டத்தைத் தாண்டி, அமெரிக்க மக்களின் நிலைப்பாடாக மாறியது. அலியின் தைரியமான, உறுதியான இந்த நிலைப்பாடுதான் 1970 களில் அமெரிக்க மக்களிடையே யுத்த எதிர்ப்பு மனோபாவத்தை வளர்த்தது என்கிறார்.

தமது சமூகத்தின் விடிவுக்காக சாத்வீகமாகப் போராடுபவர்களுக்கு முஹமத் அலியிடம் நிறையப் பாடங்கள் இருக்கின்றன. அவர் கலந்து கொண்ட போட்டிகளில் அவர் எதிலுமே நொக் அவுட் ஆனதில்லை. அதேபோல அவரது கறுப்பின சமூகம், அவர் ஏற்றிருந்த மார்க்கம், மனிதநேயம் போன்றவற்றுக்கான அவரது போராட்டமும் தோல்வியடையவில்லை. அவரது மரணத்துக்கு முன்னரே அவரது இனத்தைச் சேர்ந்த ஒருவரை அமெரிக்க மக்கள் அமெரிக்காவின் ஜனாதிபதியாக ஆக்கும் அளவுக்கு அவரது போராட்டம் வெற்றியடைந்துள்ளது. டொனால்ட் ட்ரம்பின் இனவாதக் கருத்துக்களுக்கு எதிராக பராக் ஹுஸைன் ஒபாமா பேசும் அளவுக்கு இந்த வெற்றி வளர்ந்திருக்கிறது.

அமெரிக்க முஸ்லிம்களை குறிவைக்க வேண்டாம். அமெரிக்காவைப் பாதுகாக்கின்ற பாதுகாப்பு வீரர்களாகவும், நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த விளையாட்டு வீரர்களாகவும் அமெரிக்க முஸ்லிம் சகோதரர்கள் செயற்பட்டிருக்கிறார்கள் என ஒபாமாவை மக்களை நோக்கிப் பேசச் செய்யும் அளவுக்கு இந்தப் போராட்டம் இடம்பிடித்திருக்கிறது. ட்ரம்ப் போன்ற இனவாதிகளுக்கு இதன் மூலம் சாட்டையடி விழுந்திருக்கிறது.

நலிந்துபோயுள்ள இலங்கைச் சமூகத்துக்கும் சுய இலாபத்தைக் கருத்தில் கொள்ளாது மனிதகுலத்தின் விடிவுக்காக போராடுகின்ற துணிச்சலான முஹம்மத் அலிகள் நிறையவே தேவைப்படுகிறார்கள்.



ஜமாஅத்துஸ் ஸலாமா ஏற்பாடு செய்த ஊடகவியலாளர்களுக்கான இப்தார் நிகழ்வு ஸலாமா தலைமையகத்தில் (15.06.2016) திகதியன்று நடைபெற்றது. உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத் தலைமைதாங்கிய இந்நிகழ்வில் விஷேட சொற்பொழிவாளராக அஷ்ஷைக் ஏ.பீ.எம்.அப்பாஸ் (நளீமி) அவர்கள் கலந்து கொண்டார்கள்.

Published by Ignite Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org